VOL. 7 NO. 32

சுதேசமித்திரன்

SWADESAMITRAN
ILLUSTRATED WEEKLY

"சூரியோதயம்"

வாரப்பதிப்பு

வருட சந்தா ரூபா 6. சிலோனுக்குத் தனிப்பிரதி 14-சதம். மலாய் நாடுகளுக்கு தனிப்பிரதி 15 காசு. வெளி நாடுகளுக்கு ரூ 10.



ஆரோக்கியத்தின்
முக்கிய ஆதாரம்

வுட்வர்ட்ஸ் கிரைப்வாடர்

இது குழந்தைகளை
நன்கு பாதுகாக்கின்றது

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

குழந்தைகளை சர்க்காரிடம் ஒப்புவித்து விடவேண்டும்

நாஸி கட்சியின் காங்கிரஸ் செப்டம்பர் மாதம் 8-ந் தேதியிலிருந்து 14-ந் தேதிவரை நியுரம்பர்க்கில் நடைபெறும். அதே சமயத்தில் புதிய ஜெர்மன் பார்லிமெண்டின் வெகு முக்கியமான கூட்டமொன்று கூடும். அதன் விஷய ஜாப்தாவிலுள்ள முக்கிய விஷயம் ஜெர்மன் இளைஞர்களைப் பாதிக்கத்தக்க ஒரு சட்டத்தைப் பற்றியதாகும்.

யும் காவலில் வைப்பதென நார்வே நீதி மந்திரி முடிவு செய்துள்ளார். அவ்விருவரும் வேறொரு நாட்டில் வசிக்க அனுமதி பெறும்வரை தற்பொழுதுள்ள வீட்டிலேயே காவலில் வைக்கப்பட்டிருப்பார்களெனச் சொல்லப்படுகிறது. டிராட்ஸ்கி நார்வேயில் வசிக்க அநுமதி கோரியபொழுது நார்வே சர்க்கார் என்னென்ன நிபந்தனைகள் விதித்தனரோ அந்நிபந்தனைகளை ஏற்க டிராட்ஸ்கி மறுத்துவிட்டதே மேற்

துக்கொள்வதால் இத் தகராறு திருப்திகரமாகத் தீரக் கூடுமென்றும், இதனால் பெரிய பிரச்னைகள் சம்பந்தமாக நடைபெற்றுவரும் சீன-ஜப்பானிய சமரசப் பேச்சு பாதிக்கப்படா திருக்குமென்றும் நம்புவதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கழுகுகளை எஞ்சினாகக் கொண்ட விமானம்

பிரேஸிலுள்ள ஸெயின்ட் கோதார்டைச் சேர்ந்த ஸென்

பொருளடக்கம்

விஷயம்.	பக்கம்.
பிரபஞ்ச வர்த்தமானம்	1
இந்திய வர்த்தமானம்	2
நாட்டு நடப்பு-சித்திர கண்ணாடி	3
விநோதக்கொத்து	5
பதவி மோகம் அல்லது தேசிய மணம் (சிறுகதை)	6
ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள் (புதிய் தொடர்கதை)	8
ஸங்கீதப்பகுதி	10
மகாபாரதம்	13
ஜப்பானின் வியாபார வெற்றி	14
வெறி நாய் கடி அல்லது அலர்க்க விஷம் (நோயற்ற வாழ்வு)	15
நவநாகரீகம்	17
வைத்தியப் பரீக்ஷை (ஹாஸ்யக்கதை)	23
அதிசயம்-ஆனால் உண்மை	30
தென்னிந்தியப் பிரமுகர்கள்	31
பக்ஷிகளின் விடா முயற்சி (சிறுவர் பகுதி)	35
புஸ்தக விமர்சம்	38
கண்ணோட்டம் - பிரமுகர்கள் (படங்கள்)	3

இவ்வார ஆகாயத் தபால் மூலம் கிடைத்த ஸ்பெயின் யுத்தப்படம். சர்க்கார் துருப்புகள் கலகக்காரர்களைச் சுடுகின்றனர்.

குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர்கள் சர்க்கார் வசம் ஒப்புவித்துவிட வேண்டுமென்பதே: இச்சட்டத்தின் சாரமெனத் தெரிகிறது. இவ்விஷயத்தில் வகுப்பு வித்தியாசமோ, அக்குழந்தைகளின் கல்விநிலையோ பொருட்படுத்தப்படமாட்டாது. சிறுவர்களுக்கு ராணுவ முறையில் பயிற்சி அளிக்கப்படும்.

சிறுமிகளுக்கு வீட்டு வேலை, விவசாயம், மருத்துவம் முதலியவற்றில் பயிற்சியளிக்கப்படும். அவர்களைப் புதிய ஜெர்மன் சமூகத்துக்குத் தகுந்த சிறந்த தாய்மார்களாகச் செய்ய வேண்டுமென்பதே சர்க்காரின் நோக்கம்.

டிராட்ஸ்கி காவலில் வைக்கப்படுவார்

இப்பொழுது நார்வே தேசத்தில் தங்கியிருக்கும் டிராட்ஸ்கியையும் அவரது மனைவியை

கண்டவாறு செய்யப்பட்டிருப்பதற்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

ஜப்பானியப் பத்திரிகை நிருபர்கள் கொலை

ஷ்சுவான் (ஷாங்கை) மாகாணத்திலுள்ள செங்டுவில் நடந்த ஒரு கலகத்தில் இரண்டு ஜப்பானியப் பத்திரிகை நிருபர்கள் கொல்லப்பட்டனர். இது சம்பந்தமாக இரு கலகத் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். அம்மாகாணத்தின் தலைநகரான சங்கிங்குக்கு ஒரு ஜப்பானிய பீரங்கிக் கப்பல் அனுப்பப்பட்டது. இதனால் ஜப்பானிய சர்க்கார் தங்கள் ஸ்தானீகர் மூலம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்வரெனக் கூறப்படுகிறது.

செங்டுவில் நடந்த அட்டூழியம் கடுமையானதென வெளிநாட்டு மந்திரி ஒரு அறிக்கை விடுத்துள்ளார். ஆனால் ஸ்தானீகர் மூலம் நடவடிக்கை எடுத்

ஹாரி ஆட்ல்போரிண்டி என்ற ஒரு குடியானவர் பல கழுகுகளால் தூக்கிச் செல்லப்பட்டு ஐந்து நிமிஷநேரம் பறந்த அதிசயத்தைப்பற்றிய விவரம் ரியோடிஜனீரோவிலிருந்து கிடைத்திருக்கிறது.

வெயிலில் உலாவதற்காக ஒரு பெரிய தோல் விரிக்கப்பட்டிருந்தது. சில இடைச் சிறுவர்கள் விளையாட்டாக 168 கழுகுகளைப் பிடித்து அத்தோலுடன் கட்டிவிட்டனர். இச்சமயத்தில் அக்குடியானவர் வந்து அத்தோலைச் சுருட்ட முயன்றபொழுது திடீரென அக்கழுகுகளெல்லாம் அத்தோலுடன் ஆகாயத்தில் எழும்பின. அத்தோல்மீது அகப்பட்டுக் கொண்ட அக்குடியானவர் ஐந்து நிமிஷநேரம் கழுகுகளை எஞ்சினாகக் கொண்ட அவ்விநோத விமானத்தில் பறந்தார். பின்னர் அக்கழுகுகள் சோர்வற்று அத்தோலுடன் கீழேஇறங்கின. அக்குடியான

வர் சிறிதும் காயமின்றி உயிர் தப்பினர்.

இந்திய விளையாட்டுகளுக்கு கவுரவம்

உலகில் மிகச் சிறந்த தேகாப்பியாசச் சங்கத்திற்கு ஒலிம்பிக் கோப்பை யளிக்க வென சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஜூலை 31-ந் தேதி கூடிற்று. இதில் இந்தியாவில் அமராவதியைச் சேர்ந்த ஹனுமான் வியாயம் பிரசாரக் மண்டல் இரண்டாவது சிறந்த ஸ்தாபனமென அறிவிக்கப்பட்டது. ஆஸ்டிரேலியா பனிக்

(4-ம் பக்கம் பார்க்க)



இந்திய வர்த்தமானம்

தேச சுதந்திரமே முக்கியப் பிரச்னை

பம்பாய் பருத்தி வியாபாரி சங்கம் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு வரவேற்பு நடத்தியது. கமலாநேரு ஞாபகச்சின்னநிதிக்காக ரூ. 12,250 கொண்ட பண முடிப்பை அச்சமயம் அவருக்கு அளிக்கப்பட்டது.

பண்டித நேரு பதிலளிக்கையில் தற்சமயம் அபேத வாதத்தைவிட மிக முக்கிய பிரச்னை தேச சுதந்திரம் தான் என்றும் அந்த விஷயத்தில் தேசத்தில் எவ்விதப் பிளவுமிருப்பதற்கில்லையென்றும் சொன்னார்.

பொது ஜனங்களுக்கு சாமான்கள் வாங்கும் சக்தி மிகக் குறைவாகவிருக்கிறதென்றும், பொது ஜனங்களின் நிலைமை சீர்ப்பட்டாலல்லது வியாபாரிகள் நலமடைய முடியாதென்றும் அவர் கூறினார்.

சட்ட சபை அங்கத்தினர்களைக் கண்டிக்கக்கூடாது.

காச்மீர சட்ட சபைத் தலைவர் இப்பொழுது ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். பொதுச் சங்கங்களோ, பத்திரிகைகளோ, தனிப்பட்டவர்களோ, சட்ட சபையங்கத்தினர்கள் ஒரு தீர்மானம் அல்லது மசோதாவுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ ஓட் செய்ததற்காக சட்ட சபை அங்கத்தினர்களைக் கண்டிக்கக்கூடாதென இதன்படி தடுக்கப்பட்டிருக்கிறது.

இது தேசிய வாதிகளிடையே பலத்த எதிர்ப்பை யுண்டு பண்ணியிருக்கிறது. இவ்விதம் ஒரு சுற்றுத்தரவு பிறப்பித்து பொது ஜனங்கள் கண்டிப்பதற்குள்ள உரிமையை சட்ட சபைத் தலைவர் மறுத்திருப்பதைக் கண்டிப்பதாக அடுத்த சட்ட சபைக் கூட்டத்தில் ஸர்தார் புதஸிங் ஒரு தீர்மானம் கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறார்.

அந்தமானுக்குத் தூது கோஷ்டி

இந்தியா கவர்ன்மெண்டார் அந்தமான் தீவிலுள்ள நிலைமையை ஆராய்வதற்காக இந்தியா சட்ட சபையிலுள்ள சில பிரபலமான மெம்பர்களை அந்தமானுக்கு அனுப்பப் போவதாகத் தெரிகிறது. இந்தியா சட்டசபையிலுள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரபலஸ்தரான ரெய் ஸாடா ஹம்ஸ ராஜும் இதன் மெம்பராக இருப்பார் என்று தெரிகிறது. உள்நாட்டு மெம்பரான ஸர் ஹென்றி கிரெயிக் இந்தத் தூது கோஷ்டித் தலைவராகப் போவாரென்று தெரிகிறது. இந்தத் தூது கோஷ்டி அந்தமானுக்கு அக்டோபர் 9-ந் தேதி பிரயாணமாகுமென்று தெரிகிறது.

பண்டித ஜவஹர்லாலும் பம்பாய் தேச சேவிகா தொண்டர்களும், காங்கிரஸ் தலைவர் பம்பாய்க்கு விஜயம் செய்திருந்தபோது எடுத்த படம்.

இது சம்பந்தமாக வெளியாகியுள்ள மற்றொரு செய்தியிலிருந்து தூதுக் கோஷ்டியுடன் முஸ்லிம் மெம்பர் ஒருவரும் போவாரென்றும், இதுபற்றி யாமின்கானின் பெயர் பிரஸ்தாபிக்கப்படுவதாயும். சென்ற மே மாதம் ஸர் ஹென்றி கிரெயிக் அந்தமான் சென்று திரும்பியதால், அவர் கோஷ்டியின் தலைவராகப் போவது சந்தேகமென்றும் தெரிகிறது.

(40-ம் பக்கம் பார்க்க)

சூதக கோளாறுகள் தீர்ந்துவிட்டன!

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக வியாதிகளை வென்று சந்தான பாக்யத்தையடைந்தனர்.

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

(அபூர்வ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.)

சூதகக் கோளாறுகளை நீக்கி, மலட்டுப் பூச்சிகளைக் கொன்று, கருப்பைக்கு பலந்தந்து, சந்தான பாக்யத்தையளிக்கும் சிறந்த ஔஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது.

பாட்டில் விலை ரூ. 5. விவரத்திற்கு எழுதவும்.

வேலன்ஸ்மெடிகல்ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி

ஸ்பெயினில் ஆசிரியையாகவிருந்த பிரிட்டிஷ் பிரஜை மிஸ். பிலிஸ் வாட்கின் வில்லியம்ஸ். இவர் ஸ்பெயினிலிருந்து தப்பித்துக்கொண்டு இப்பொழுது இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார். அவர் ஸ்பெயின் கலவரத்தில் தமக்குக் கிடைத்த சில துப்பாக்கிக் குண்டுகளை தமது சிநேகிதிக்குக் காட்டிக்கொண்டிருக்கிறார்



ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். அவருடன் க்வீன்ஸ காலேஜ் தலைவர் டாக்டர் ஜானஸன் பேசிக்கொண்டிருக்கிறார்.

சென்னை சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழா அத்யக்ஷகரான ஆக்டிங் கவர்னர் ஸர். கே. வி. ரெட்டி நாயுடு தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது ஸெனட் மண்டபத்தின் தோற்றம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கட்டி வழுக்கல் சங்கம் முதலாவதாகக் கருதப்பட்டது. கமிட்டியில் ஆஸ்டிரேலிய கிளப்புக்கு 27 வோட்டுகளும் ஹனுமான் வியாயம் பிரசாரக் மண்டலுக்கு 10 வோட்டுகளும் கிடைத்திருக்க, மற்ற தேச ஸ்தாபனங்களுக்கு 3-ம் 4-ம் கிடைத்தன. இந்த மண்டலேச் சேர்ந்தவர்கள் மற்றத் தேசத்தினர் கொண்டாடும் வகையில் தேகாப்பியாசச் செய்கைகள் நடத்திக் காட்டியிருக்கின்றனரென ஏற்படுகிறது.

இந்தியக் கோஷ்டிக்கு மற்றொரு கவுரவமுமேற்பட்டிருக்கிறது. சர்வதேச தேகாப்பியாசகர்கள் காங்கிரஸில் ஹனுமான் வியாயம் மண்டலம் காட்டிய இந்திய கவாத்துச் செய்கைகளுக்காக. ஹிட்லர் பதக்கம் அளிக்கப்பட்டது.

——

ஸ்பெயின் நிலைமை

ஸ்பெயினின் வடக்கு பாகத்தில் பலமான போராட்டம் நடந்துவருவதாகக் கூறப்படுகிறது. ஸான் மார்ஸியலில் சர்க்கார் கலகக்காரர்களை எதிர்த்து வெற்றிபெற்று வருவதாகத் தெரிகிறது. ஐரனில் நடந்த வெடிகுண்டுவீச்சு யாதொரு பயனையும் அளித்திருப்பதாகத் தெரியவில்லை. கலகக்காரர்கள் மாட்ரிட்டை எதிர்த்துச் செல்வதாகவும், அந்நகருக்கு வெகு சமீபத்தில் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஸ்பெயினிலிருந்து தப்பிச் செல்லுகிறவர்கள் பிரான்ஸில் ஏராளமாகக் குடியேறுகின்றனர். ஆனால் ஸ்பெயினிலிருக்கும் பிரெஞ்சுக்காரர்களே கலகக்காரர் பொதுவுடைமைக்காரர்களென்றும், சர்க்கார், அவர்கள் ஆயுதங்களைக் கொண்டுவருவதற்குக் கலகக்காரர்களுக்கு உதவியாகவிருக்கின்றனரென்றும் கருதுகின்றனர்.

——

ஆங்கிலோ-எகிப்து ஒப்பந்தம்

புதிய ஆங்கிலோ—எகிப்து உடன்படிக்கை சென்ற 26-ந் தேதி லண்டனில் கையெழுத்திடப்பட்டது.

ஆங்கிலோ—எகிப்து உறவில் இவ்வுடன்படிக்கை ஒரு புதிய சகாப்தத்தை விளைவிப்பதாகுமென்றும், மேலும் அது இவ்விரு நாடுகளின் எதிர்கால ஒத்துழைப்புக்கான ஒரு கருவியும், வாக்குறுதியும் ஆகுமென்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி மிஸ்டர் அந்தோணி ஈடன் தெரிவித்தார்.

இவ்வுடன்படிக்கை பிரிட்டனும், எகிப்தும் சம அந்தஸ்துள்ள இரு நண்பர்களென உலகினருக்கு நிரூபிக்கும் ஒரு சின்னமாகுமென எகிப்து பிரதம மந்திரி நஹாஸ்பாஷா கூறினர்.

வலுவுக்கு

காட் லிவர் ஆயில்—

ஸ்காட்ஸ் எமல்ஷன்

மும்மடங்கு அதிக பலன் தருவது

நீண்ட காலமாகத் தெரிந்த விஷயத்தையே சமீப கால ஆராய்ச்சி ஊர்ஜிதப்படுத்துகிறது — அதாவது நோய் காரணமாக ஏற்படும் பல வீனத்தைப் போக்குவதற்கான சத்துக்கள் நிறைந்திருப்பதில் காட்லிவர் ஆயிலைவிடச் சிறந்தது வேறெதுவுமில்லை. A & D விட்டமின்கள் நிறைந்த இது இயற்கை முறையில் வலுவூட்டுகிறது ஆனால் அது சாதாரணமாக இருப்பதானது தேகம் மிகவும் மெலிந்துள்ளவர்களுக்கு ஜீரணிக்கமுடியாததாக விருக்கிறது. எனவே பலர் அதை உபயோகிக்க முடிவதில்லை. ஆனால் ஸ்காட்ஸ் எமல்ஷனே மேற்படி ஆயிலின் தன்மை துளியும் கெடாமல் எளிதில் ஜீரணிக்கக்கூடியதாகவும், ருசி மிகுந்ததாகவுமிருக்கிறது. தவிர ஸ்காட்ஸ் எமல்ஷனில் சிறந்த ஹைபோபாஸ்டைட்ஸ் ஆப் லைம் & சோடாவுமிருக்கிறது. ஆகவே சாதாரண காட்லிவர் ஆயிலைவிட இது மும்மடங்கு அதிகப் பலன் தருகிறதென நிரூபணமாகியிருக்கிறது.

தோத்து நோயை எதிர்க்க உதவுவது.

ஸ்காட்ஸ் எமல்ஷனின் கடமை வலுவும், ஜீவ சக்தியும் அளிப்பது மட்டுமல்ல; தொத்து நோயை எதிர்க்கக்கூடிய சக்தியையும் இது வளர்க்கிறது. எனவே, உங்கள் மெலிவைப் போக்குவதற்கான சிறந்த டானிக் இதுவே. 60 வருஷப் பிரக்யாதி பெற்றது.

ஸ்காட்ஸ் எமல்ஷன்...

- சாதா காட்லிவர் ஆயிலைவிட மும்மடங்கு அதிக பலன் தருவது.
- சதைக்கும், எலும்புக்கும் வலுவூட்டுகிறது.
- நரம்புகளுக்கு உறமளிக்கிறது.
- இரத்தத்தைப் பெருக்குகிறது.
- தொத்து நோயை எதிர்க்க உதவுவது.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா

பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்

ஆமதாபாத் - தொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - காராச்சி - அமிருதசரஸ்.

"நீம் டூத் பேஸ்ட்" உங்கள் பற்களை வெகு அழகாகவும், வெண்மையாகவும் சுத்தி செய்கிறது; நீங்கள் வெற்றிலை போட்டு மென்றால் உங்கள் பற்கள் மாதுளம் பழ விதைகளை யொத்திருக்கும்; அதாவது சிகப்பு நிறத்தினிடையே அவை முத்துப் போல் பிரகாசிக்கும்.



'Neem' TOOTH-PASTE

பவுடர் வேண்டுமாயின் "மார்கோப்ரீஸ் நீம் பல் பவுடர்" உபயோகியுங்கள். கல்கத்தா கெமிகல்

சோவியத் மீது ஜப்பானிய விமானங்கள்

ஜப்பானிய விமானங்கள் பல முறை சோவியத் பிரதேசத்துக்குள் வந்து கண் காணித்ததாக சோவியத் சர்க்கார் கூறுகின்றனர். இது சம்பந்தமாக அவர்கள் ஹார்பினிலும், டோக்கியோவிலும் உள்ள ஸ்தானீகர்கள் மூலம் தங்கள் கண்டனத்தை ஜப்பானிய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கின்றனர். ஒரு வாரத்துக்குள் ஐந்து முறை ஜப்பானிய விமானங்கள் சோவியத் எல்லைமீது பறந்ததாக சோவியத் சர்க்கார் கூறுகின்றனர்.

சிறுவன் கைவிரலில் துணியைச் சுற்றிக்கொண்டிருந்தான். அவனது தாய் அப்பொழுது உள்நுழைந்து கையில் காயம்பட்டதாவென்று கேட்டாள்.



அமெரிக்கத் தலைவரைப் பாதுகாக்கப் போலீஸ் மோட்டார். இந்த மோட்டாரில் ஒரு ஷார்ட்வேவ் ரேடியோ ஸெட்டும், வழி விடுவதற்கு எச்சரிக்கை செய்ய பிரத்தியேகமாகச் சப்தம் செய்யும் ஒருயந்திரமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கத் தலைவர் செல்லும் மோட்டாருக்கு முன்பாக இது செல்லும்.

சிறுவன்:—இப்பொழுது தான் பட்டது.

தாய் (பையன் மிகவும் தைரியசாலி என்று நினைத்து):—நீ அழவே இல்லையே!

சிறுவன்:—நீங்கள் வீட்டிலில்லை என்று எனக்குத் தெரியும்.

———

தகப்பனார் பையனை ஹோட்டலில் இருக்கச் சொல்லிவிட்டு கடைக்குச் சென்றார். போகும்போது பையனுக்கு வேண்டியதைக் கொடுக்கும்படியும் தான் திரும்பி வந்து பணம் கொடுப்பதாயும் சொல்லிவிட்டுச் சென்றார்.

திரும்பி வந்ததும் ஹோட்டல்காரர் இரண்டேகால் ரூபாய்க்கு ஒரு பில் கொடுத்தார். தகப்பனார் அதைக்கண்டு திடுக்கிட்டு, "பையா! உனக்கு வயிறு வலிக்கவில்லையா?" என்றார்.

பையன்:—இல்லையப்பா, ரொம்ப தாகமாயிருக்கிறது.

———

எஜமானி:—இந்த பீரோவைத் தட்டி ஆறு மாதமானாப் போலிருக்கிறதே! அதன்மேலுள்ள தூசியைத் தட்டக்கூடாதா?

வேலைக்காரி:—எனக்கு அது தெரியாது. நான் வந்து இரண்டு வாரம் தான் ஆகிறது.

சிறுவன் சமையலறையில் ஏதோ சப்தம் செய்துகொண்டிருந்தான்.

தாய்:—சமையலறையில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

"ஆசையை விட்டு பயன்று கொண்டிருக்கிறேன்."

———

"அவர் எந்த நிமிஷம் இறந்து போகப் போகிறார் என்பது ஒரு மாதத்திற்கு முன்பே அவருக்குத் தெரியும்"

"அந்தராத்மா சொல்லியதுபோலும்"

"இல்லை, ஜட்ஜ் சொன்னார்."

———

"கோவலன்" நாடகம் நடந்துகொண்டிருந்தது. மாதவி கோவலனிடம் தனக்கு ஒரு வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டாள். கோவலனும் சம்மதித்தான். அப்பொழுது வெளியில் நின்றுகொண்டிருந்த சிலர் தங்களை அதிகாரிகள் டிக்கட்டின்றி உள்ளே விடாததால் கற்களை வீச ஆரம்பித்தனர். கற்கள் அரங்கத்தில்விழ ஆரம்பித்தன.

விதூஷகன்:—மாதவி! ஐயா வீடு கட்டிக்கொடுக்கிறேன் என்று சொன்னவுடன் மளமளவென்று கற்கள் வந்திறங்குகின்றன பார்த்தாயா?

———

உபாத்தியாயர்:—உன் சட்டையில் ஒரு பையில் 100 ரூபாயும் மற்றொரு பையில் ... ரூபாயும்......

மாணவன்:—இல்லை ... என் சட்டை அப்படியிரா...

———

தாய்:—சமையலறை... இரண்டு பிஸ்கோத்து ... வைத்திருந்தேன். ஒன்று தான் இருக்கிறது. மற்றொன்று எங்கே?

சிறுவன்:—எனக்குத் தெரியாது. இருட்டாக இரு...தால் மற்றொன்று இருந்தை... கவனிக்கவில்லை.

———

ஹோட்டலில் தங்க...வர்:—முன் நானிரு... ஹோட்டல்கார் நான் செ... வருகையில் மிகவும் வருத்...பட்டு அழுதார்.

"அப்படிச் செய்யவேண்... அவசியம் எனக்கிராது. ந... அட்வான்ஸாகவே ப... வாங்கிவிடுவேன்."

———

ஹாஸ்டலில் வசித்... கொண்டிருந்த தன் பி...ளையைப் பார்க்கத் தகப்ப... சென்றார்.

தகப்பனார்:—நான் ர... விட்டிறங்கி இன்னும் ஒரு... நேரங்கூட ஆகவில்லை. அ...குள் நீ பணம் கேட்கிறாய்.

பையன்:—ரயில் இன்று... மணி தாமதித்து வந்தது...

———

MINSARARASAM

நிகரற்ற தேக வலிமை -
புதிய ரத்தோட்டம் -
அபாரமான ஜீவசக்தி -
ஆனந்தமயமான வாழ்வு -

இவைகளை
யடைய

மின்சாரரசம்
வெகு அருமையான பொக்கிஷம்.

ஒரே முறை
பரீக்ஷியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

புட்டி 1-க்கு ரூ. 2.

மின்சார ரசம்
கம்பெனி(லிட்) சேலம்.

MINSARARASAM

து சிறு கதை

பதவி மோகம் அல்லது தேசிய மணம்

—:[o]:—

"ப்ளூகிளவுட்"

கிருச்சி ஜில்லா, சிங்களாச்
ரி தாசில்தார் சேஷாசல
யரின் பெயர் சொன்னால்
ழுதபிள்ளைகளும் வாயை
டிக்கொள்ளும். சில சமயங்
ில் மூடிய வாயைத் திறக்
ே கிடையாது. குழந்தை
ிலிருந்து தொண்டு கிழவர்
ரையிலும். இவரது சிடுசிடு
ன்று சிறிவிழும் முகத்தைக்
ண முற்படமாட்டார்கள்.
னத்திற்கேற்றாற்போல் அய்
க்கு வயிற்றில் பல் முளைத்
ந்ததெனலாம். பிறர்

"தனிமையை" விரும்பித்
தனது மகன், மனைவி முதலிய
எவருடனுமே பேசுவதை முற்
றிலும் நிறுத்தி, எதையோபற்
றிச் சதாகாலமும் சிந்தனை
செய்துகொண்டு பயித்தியம்
பிடித்தவர்போலானார். பரஞ்
சோதிக்குமட்டில், தனது தந்
தையின் தற்கால மௌனத்
தின் காரணத்தை அறிய ஆர்
வம் அதிகரித்துக்கொண்டே
வந்தது.

மாலை 6-மணிக்குப் பரஞ்
சோதி தனது அறையில் உட்

வுடன் கேட்டுக்கொண்டு, தந்
தையின் பதிலை ஆவலுடன்
எதிர்பார்த்து நின்றான்.

சேஷாசலமய்யர் தன் மகன்
வேண்டுகோளின்படி ரூபாய்
5,000க்கு ஒரு செக்கைக்
கொடுத்துவிட்டு, தன்னை அநா
வசியமாகக் கேள்விகள் கேட்க
வேண்டாமென்று சட்டென
பதில் கூறிவிட்டார். தனது
தந்தையைப்பற்றி அச்சமயத்
தில் மிக்க மனம் வருந்தி
வெறுத்தானாகிலும், தனது
காரியத்தை உத்தேசித்து

இந்திய மத்திய பருத்திக் கமிட்டிக் கூட்டம் பம்பாய் கவர்னர் ஸர் ராபர்ட் பெல் தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.

ல் வவந்தர்களாகவிருப்
தயும், உயர்ந்த உத்யோ
திலிருப்பதையும் காணச்
க்கமாட்டார். தனது குரூர
னுபாவத்திற்கு மாறாக,
யாவர்களுக்கு பரஞ்சோதி
ன்ற உத்தமன், நத்தை
ற்றில் முத்துப் பிறப்பது
ால், ஒரே குமாரன் இருந்
ன். திருச்சிக் கல்லூரியில்
வி பயின்ற பின்னர் தனது
ல்படிப்பின் நிமித்தம்
ன்னை சட்டக் கல்லூரிக்குப்
ப்படுவதெனத்தீர்மானித்து
து தந்தையின் விருப்பம்
விஷயத்தில் என்னவென்
ய அவாக்கொண்டான்.
ால், அவன் தந்தையோ
பொழுதும் ஒருவருடனும்
சாமல், சகஜமாகப் பழகும்
ாவமற்றவர் என்பது அவ
குமாரனுக்குத் தெரிந்த
யம். அதுவும் சென்ற
ண்டாக அவரது புத்திக்
க்கத்தினால் நீண்டதோர்

கார்ந்து, தான் சென்னை சட்
டக் கல்லூரியில் படிக்க முடிவு
செய்திருப்பதாயும், அதற்குச்
சுமார் ரூபாய் 5,000 வேண்டு
மென்றும், இது விஷயத்தைத்
தான் நேரில் பேச விரும்புவ
தாகவும் ஓர் கடிதக் குறிப்
பைத் தனது தந்தை தங்கும்
"தனிமையறை"யில் வைத்து
விட்டுப் படுக்கைக்குச் சென்
றான்.

மறுநாட் காலை 8-மணிக்கு
பரஞ்சோதி தனது தந்தை
யின் மேஜையின் அருகில்
நின்றுகொண்டு தனது முடி
வைப்பற்றி எடுத்துரைத்து,
தனக்கு உதவிசெய்யப்பிரார்த்
தித்தும், என் தன்னுடன் சரி
யாகக் கொஞ்ச நாட்களாகப்
பேசாது மௌனம் சாதித்து,
ஒரு விஷயத்திலும் ஈடுபடாது
இருப்பதன் காரணத்தைத்
தன்னிடம் குமாரன் என்ற
ஹோதாவில் தெரிவிக்கலா
காதா வென்றும் மிக்கப் பணி

ஒன்றும் பேசாது வெளியே
புறப்பட்டான் பரஞ்சோதி.

மாலையில் இந்தோ-
ஸிலோன் எக்ஸ்பிரஸில் திருச்
சியிலிருந்து தனது பெட்டி,
படுக்கைகளுடன் சென்னைக்கு
பிரயாணப்பட்டு விட்டான்
பரஞ்சோதி. தனது தந்தை
யின் தற்கால மனக் குழப்பத்
திற்குக் காரணம் என்ன? என்
அவர் கொலை செய்தவர்கள்
போல் சதா திக்பிரமை
கொண்டவர்போல் காணப்
படுகிறார் என்ற பல பிரச்னை
களைப்பற்றிப் பரஞ்சோதி சிந்
திக்கலானான்.

அவன் ஏறியிருந்த வண்டி
யில் 24-வயது மதிக்கக்கூடிய
ஒரு யுவனும், 16-வயதுமதிக்
கக் கூடிய ஓர் இளம் யுவதியும்,
சற்று முகவாட்டத்துடன்
சிற்சில சமயங்களில் இருவர்
கண்களில் நீர் ததும்பிக்
கொண்டும், சில சமயங்களில்
யாரையோ சாபமிடுவதையும்

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

**மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.**
தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான, தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

**வாரம் பூராவும்
பரீட்சியுங்கள் !**
இதைவிட 4 பங்கு விலைக்கு விற்கப்படும் பல வாட்சுகளுக்கிணையானது.
திருப்திக்கு உத்தரவாதம் அல்லது பூராப்பணமும் வாபீஸ்.
5 வருஷ உத்தரவாதம்
டாஸன் லீவர் ரிஸ்ட் வாட்சு



ஒன்றுக்கு ஆர்டர் செய்து பல வருஷ வாட்சுத் தொல்லையை ஒழியுங்கள்.
உயர்தர லீவர் ஓட்டம்.
சிறிய அளவு; அழகிய அமைப்பு; சரியான மணிகாட்டுவது. ரிப்பேரில்லாது பல வருஷங்களுக்குழைக்கும்
மிகக் குறைந்த விலைகள்:
பிரகாசமான நிக்கல் வெள்ளிக் கேஸ் ரூபா 6-4-0
கோல்ட் பிளேட் கேஸ் ரூபா 6-12-0
மேற்படி ரேடியம் டயலுடன் 8 அணா தனி.
பாக்கிங் & தபால் செலவு 4 அணா தனி.
சோல் ஏஜண்டுகள் :
THE UNION TRADING Co.,
2, Doyehatta St, (D/1) Calcutta

பாஞ்சோதி கண்ணுற்றான். அவர்கள் விசனப்படும் காரணம் என்ன வென்று கேட்கலாமா என்று நினைத்தான். ஆனல் வேறு எதாவது தப்பாக எடுத்துக்கொண்டால் என் செய்வது என்று பயந்து சும்மாயிருந்துவிட்டான்.

காலே 6-40 மணிக்கு மெயில் எழும்பூரையடைந்தது. பாஞ்சோதி தனது பெட்டி, படுக்கையுடன், ஒரு வாடகை மோட்டாரை அமர்த்திக்கொண்டு, தான் தங்கவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான். தன்னுடன்கூடப் பிரயாணம் செய்தவர்களைப்பற்றி, பாஞ்சோதி அறவே மறந்துவிட்டான். காலே 10 மணிக்கெல்லாம், சட்டக்கல்லூரியில் சேர்ந்து, ஹாஸ்டலில் தனது ஜாகையை வைத்துக்கொண்டு தனது கல்வியில் ஊக்கம் செலுத்தினன். இயற்கையிலே வசீகரத்தோற்றமும், காதிற்கினிய சம்பாஷணைத்திறனையும் பெற்ற பாஞ்சோதிக்கு வெகு சீக்கிரத்தில் நண்பர்கள் பலர் வலுவில் வந்து அவனுடன் பழகினர்களென்னில், அது மிகையாகாது. பாஞ்சோதி சென்னை வந்து ஒரு வருஷமாகிவிட்டது.

ராமகிருஷ்ணன் என்ற மாணவனே பாஞ்சோதியின் இணைபிரியா நண்பன். சென்னைக்கு வரும்பொழுது புகைத் தொடரில் சந்தித்த யுவரே தனக்கு ஆப்த நண்பனுக எதிர்பாராத விதமாய் ஆனதுபற்றிப் பாஞ்சோதிக்கு எல்லைகடந்த சந்தோஷத்தை விளைவித்தது. ராமகிருஷ்ணன் சென்ற ஒருவருஷகாலமாகவே ஏதோ ஒரு விதமாக மாறியிருப்பதாகமட்டில் பாஞ்சோதிக்கு அவனுடைய இதர நண்பர்கள் கூறியிருந்தனர். அவ்விஷயத்தை மட்டில் பாஞ்சோதி தனது நண்பனைக் கேட்கத்துணியவில்லை.

* * * *

ராமகிருஷ்ணன் ஒரு உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவன். அவனது தந்தை திருச்சி ஜில்லா கலெக்டராக இருந்து வந்தவர். மிக்கப் பரோபகாரி. ராமகிருஷ்ணனுக்குத் தாயில்லை. அவனது சகோதரி தங்கத்தை ஈன்றெடுத்த 10-ம் நாளே திரிபுரசுந்தரியம்மாள் விண்ணுலகெய்திவிட்டாள். ஆகவே, ராமகிருஷ்ணனும், அவனது தங்கையான தங்கமும், அவர்கள் மாமன் வீட்டில் சென்னை மயிலையில் வசித்துவந்தனர். தனது புத்திசாலித்தனத்தினல் சென்னை சட்டக் கல்லூரியில உபகாரச் சம்பளத்தைப் பெற்றுக் கல்வி பயின்று வந்தான். ராமகிருஷ்ணன் தந்தை குழந்தைகள் சவுகரியார்த்தம் ரூ. 150 (மாதம்) அனுப்பிக் கொண்டிருந்தார். ஆனல் துரதிஷ்டவசமாகச் சென்ற ஆண்டு, உத்தியோக வேட்கையும், பதவி மோகமும் கொண்ட ஒரு தாசில்தார் அவரது சொத்துகளைக் கெட்ட வழிகள்மூலம் அபகரித்து அவரது உயிரைக் கொலைசெய்து மாய்த்துவிட்டாரென்று ராமகிருஷ்ணனுக்கு தந்திமூலம் அறிவிக்கப்பட்டது. பிதாவின் கிரியைகளை முடித்துச் சென்னை வந்தது முதற்கொண்டே அவன் மிக்க மனமுடைந்து போனுன். மேலும் அவனுக்குப் போதிய பணமும் கடைக்கவில்லை. மாமன் வீட்டாரும் கொஞ்சகாலமாகச் சற்று உதாசீனம் செய்யத் தலைப்பட்டுவிட்டனர். இச்சம்பவங்களுக்காக மாம்பலத்தில் தனது சகோதரியுடன் ஒரு தனியறையை வாடகைக் கமர்த்திக்கொண்டு காலத்தைப் போக்கிக்கொண்டு, பின் வாழ்க்கை எப்படி நடத்துவதென்ற கவலையால் வாடி வருந்தி வந்தான்.

தங்கம் புத்தி கூர்மையும், அதற்கேற்றாற்போல் நல்ல ரூபலாவண்யத்துடன் கூடியவளாயிருந்து வந்தாள். தனதும், தனது சகோதரனதும் கஷ்ட நிலைமையை உன்னி உன்னிவருந்துவதை நிறுத்தி, "பாரதியாரது" வேதாந்தப்பாடல்களையும், இன்னும் அநேகத் தேசாபிமானிகளது ஜீவிய சரிதைகளையும் படிக்கத்தொடங்கித் தனது காலத்தை கழிக்க ஆரம்பித்தாள்.

பாஞ்சோதியின் நிர்ப்பந்தம் தாங்கமாட்டாமல் ஒருநாள் ராமகிருஷ்ணன் தனது விருத்தாந்தங்களை எடுத்துக்கூறி தனது தற்போதைய துக்ககரமான வாழ்க்கையையும், தனது சகோதரியின் மனேநிடத்தையும் எடுத்துக் கூறினன்.

"தனது தந்தையை தாசில்தார் ஒருவர் கொலை செய்துவிட்டார்" என்று ராமகிருஷ்ணன் கூறியதும் உடனே தனது தந்தை ஞாபகம்தான் வந்தது பாஞ்சோதிக்கு. என் எனில் தனது தந்தையின் போக்கையும் குணங்களையும் பாஞ்சோதி நன்கறிந்தவன். இருப்பினும் தான் திடீரென்று ஒன்றையும் முடிவு செய்யும் சுபாவமில்லாதவனாதலின், விஷயங்களை யோசிக்கத் தலைப்பட்டான். உத்தியோகவேட்கையைத் தான் மனதிலும் கொள்வதில்லையென்று துணிவு கொண்டான்.

ராமகிருஷ்ணனின் மனதை வேறுபுறமாகத் திருப்ப அடிக்கடி அவன் வீட்டுக்குப் போய்க்கொண்டும், தனது சட்டப் படிப்புக்குப் போக மிகுதியாயிருந்த ரூ 800-யும் ராமகிருஷ்ணனின் தினசரி காலக்ஷேபத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தும் வந்தது, சகோதர சகோதரிகளின் அன்பைப்பாஞ்சோதி அதிகம் பெற்றுவிட்டானெனில் அது இயற்கையே. தங்கத்தைக் கண்டது முதலே பாஞ்சோதியின் மனம் ஒரு மாதிரியாக மாறி, அவளை தனக்கு இசைந்தவள் என்று கண்டான்.

ஒருநாள் தங்கம், தனது பூர்வ நிலைமையையும், எப்படி தனது தந்தையைப் பதவி மோகம் கொண்ட ஓர் பொருமை தாசில்தார் கொன்றுவிட்டு, தங்களைக் கஷ்டப்படும்படிச் செய்துவிட்டாரென்பதையும், "பாரதியார்" கூறியது போல், "அன்பென்ற மூரக்" கொட்டப்பட்டா...லல்லாது

(12-ம் பக்கம் பார்க்க)

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலை முறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 2. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 5-க்கு அணு 12. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
(ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை

"கிரயத்திற்குக் கிடைப்பதில் சிறந்தது"

மைசூர் ரவிக்கை துண்டுகள், மைசூர் கிரேப்புகள், மைசூர் சாடின்கள், சுத்தமான மைசூர் பட்டினல் செய்யப்பட்டது.

செயற்கைப்பட்டோ அல்லது அன்னிய நாட்டு நூலோ இதில் கலக்கவில்லை.

கவர்ன்மெண்டு பட்டு நெசவு தொழிற்சாலை,

மைசூரில் தயாரிக்கப்பட்டது.

UP TO DATE DESIGNS & MOST ECONOMICAL

MYSORE Silk Handkerchiefs

100% Swadeshi

Govt Silk Weaving Factory
MYSORE

நீங்கள் செலவிடும் பணத்திற்கு சிறந்த மதிப்பானது. ஒரு முறை பரீக்ஷித்து திருப்தியடையுங்கள்.

சமூக புதிய தொடர் கதை.

ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)

முன் கதைச் சுருக்கம்.

தவமணி, சக்ரபாணி முதலியாரின் குமாரன். முதலியார் இறக்குந்தருவாயில் தம் நண்பர் வேலாயுத முதலியாரிடம் தவமணியையும் தமது திரண்ட சொத்துக்களையும் ஒப்புவித்தார். பிற்காலத்தில் வேலாயுத முதலியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு தவமணி வீட்டை விட்டுச் செல்லும்படிச் செய்துவிட்டார். ஒரு கனவான் ஒரு நாள் தவமணியை மிகவும் கஷ்ட நிலைமையில் கண்டு அவனைப் பராமரித்து வருகிறார்.

ஜம்புலிங்கம் என்பவன் பல கொள்ளைகள் நடத்தி வருகிறான். அவனைப் பிடிப்பது சம்பந்தமாகப் போலீஸ் டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையும் பேசிக்கொண்டிருக்கின்றனர். அப்பொழுது தன் விஷயங்களில் பிரவேசிக்கவேண்டாமென்று ஜம்புலிங்கம் எழுதிய கடிதம் வந்து சேருகிறது.

III

வண்ணாரப்பேட்டை ஹைரோட்டிலுள்ள 'சோம விலாசம்' மிக்க அழகாகச் 'சிங்காரிக்கப்பட்டிருக்கிறது. பங்களாவின் உள்ளும், வெளியிலும், மின்சார விளக்குகளின் தோரணங்கள் விதவிதமாகத் தொங்கவிடப்பட்டு, ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றன. ரோட்டின் இருபுறங்களிலும் மோட்டார்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. இன்னமும் மோட்டார்கள் வந்த வண்ணமாகவும், அதனின்றும் நன்ருய் உடுத்த சீமான்களும் சீமாட்டிகளும் இறங்கி பங்களாவின் உள்ளே சென்றவண்ணமாகவேயிருக்கின்றனர். பங்களாவின் வெளி வாயிலிலேயே நாணயமான உடையணிந்த ஒருவர், வருபவர்களுக்குக் கைலாகு கொடுத்து உள்ளே அனுப்பிக் கொண்டிருக்கிறார். உள்வாயிலில் நின்றுகொண்டு ஒருவர் இவர்களை வரவேற்று, சிற்றுண்டியளித்து மாடிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார். மாடியில், பெரிய ஹாலுக்குச் செல்லும் வழியில் மிக்க டாம்பீக உடையணிந்து, வேலாயுத முதலியார்-இல்லை, இல்லை, ராவ் பஹதூர் வேலாயுத முதலியார் என்று கூறவேண்டும். ஏனெனில் தனக்கு மன்னர்பெருமான் அப்பட்டத்தையளித்ததைக் கொண்டாடுவதற்கே தன்னுடைய சிநேகர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அன்று தேக்கச்சேரி நடத்தி வைக்கிறார். வருபவர்களுக்கு முகமன் கூறி, கை குலுக்கி ஆசனங்களில் அமர்த்திக்கொண்டிருக்கிறார். அந்த ஹாலில், மற்றோர் பக்கம், முதலியாரின் மனைவி ரங்கநாயகி அம்மாள், வரும் சீமாட்டிகளை உபசரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"ஹலோ! ராவ்பஹதூர் வேலாயுத முதலியார்! பரம சந்தோஷம்; பட்டம் கிடைத்ததற்கு வெகுவாகப் பாராட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, மாடிப்படிகளின் மீதேறிவரும் கனவானின் கைகளைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டே,

"மிக்க வந்தனம் கிருஷ்ணசாமி நாயுடுவாள்! போலீஸ் அதிகாரியாயிற்றே. எங்கே ஏதாவது சாக்குப்போக்குகள் சொல்லி, வராமல் இருந்துவிடுவீர்களோ வென்று பயந்து கொண்டிருந்தேன். இப்படி! இப்படி! உட்காருங்கள் என்று முதல் வரிசையில் போடப்பட்டிருந்த ஆசனங்களில் ஒன்றில் அமர்த்திவிட்டு இன்னும் வருபவர்களைக் கவனிக்கச் சென்றார்.

சற்று நேரத்தில் வரவேண்டியவர்கள் எல்லோரும் வந்தாய்விட்டது விருந்து நடந்தது. விருந்துக்கு வந்திருந்த பிரமுகர்களில் அநேகர் அவரவர்களுக்குத் தோன்றியபடி வேலாயுத முதலியாரைப் பாராட்டிப் பேசினார்கள் மற்றவர்கள் பலத்த கரகோஷங்களுடன் அதை ஆமோதித்தார்கள். சற்று நேரம் இப்படிக் குதூகலமாய் காலம் கழிந்தபின், ராவ் பஹதூர் வேலாயுத முதலியார் கீழே கூடத்தில், ஜால வேடிக்கைகளில் மிக்க பிரக்கியாதி வாய்ந்த புரொபஸர் கே. மூர்த்தி அவர்களால் காண்பிக்கப்படவிருக்கும் ஜால வேடிக்கையைக் கண்டு களித்துச் செல்லுமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்ள அனைவரும், கீழே, கூடத்திற்குச் சென்றார்கள்.

கூடம் விசாலமாகவிருந்தது. அதன் ஓரத்தில் கருப்பு திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருந்தது. அத்திரைச் சீலைக்கு முன் ஒரு மேஜை போடப்பட்டிருந்தது. எல்லோரும் அம்மேஜைக்குச் சற்று எட்ட உட்கார்ந்து கொண்டார்கள். இரண்டொரு நிமிடங்களில், புரொபஸர் மூர்த்தி, திரைக்குப் பின்னாலிருந்து தோன்றினார். இவர் மார்பளவும் நீண்டு வளர்ந்த தாடியும், விசாலமான நெற்றியும், சுமார் ஆறடி உயரமும் வாய்ந்தவர் வயது சுமார் ஐம்பதிருக்கலாம். வழக்கத்திற்கு மாருக இன்று மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். இவரைக் கண்டதும் கூடத்தில், சந்தடியடங்கிவிட்டது. இரண்டொரு வார்த்தைகளில் சபைக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, வேடிக்கையைத் தொடங்கினார். ஒன்றுமில்லாமல், காலியாயிருந்த பெட்டியிலிருந்து, புறா, முயல் முதலிய உயிருள்ள ஜந்துக்களை வரவழைத்தார். பெட்டியில் வைத்துப் பூட்டி சீல் செய்த வஸ்துக்களை, மாயமாய் மறையச் செய்தார். ஒரு ஜாதிச் சீட்டுகளை முற்றிலும் வேறு ஜாதியாக மாற்றினார்! இவை போன்ற பலவிதமான அற்புத ஜால வேடிக்கைகளைக் காண்பித்தார். கூடியிருந்தவர்கள் அனைவரும் இதுவரை இம்மாதிரி, வாயுஸ்தம்ப, ஜலஸ்தம்ப, அக்கிஸ்தம்ப ஜாலங்களைக் கண்டதேயில்லையென்று பேசிக்கொண்டார்கள்.

புரொபஸர்:— கனவான்களே! இன்றையதினம், என்றுமில்லாதபடி, பலபிரபல கனவான்களும் உத்தியோகஸ்தர்களும், என்னுடைய இவ்வற்ப வேடிக்கைகளைப் பொறுமையுடன் கண்டு கவுரப்படுத்தியதற்கு என் மனமார்ந்த வந்த

னத்தையும், நன்றியறிதலையும் செலுத்துகிறேன். என் நன்றியறிதலை வாய்மொழியுடன் நிறுத்தி விடாது, இதுவரை என்னுலும், ஒருவராலும் காண்பிக்கப்படாத ஒரு அரிய ஜாலத்தை இங்கு காண்பிக்க உத்தேசிக்கிறேன். இதுவரையிற் பொறுமையை வகித்திருந்ததைப் போலவே இப்பொழுதும் பொறுமையுடன் நான் காட்டுவதைப் பார்க்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்,

என்று சொல்லி, தன் சட்டையை, முழங்கை வரையில் மேலுக்குத் தள்ளிக்கொண்டு தன் கையில் எவ்வித வஸ்துவுமில்லை என்பதைச் சபையோருக்கு நன்றாய்ப் புலப்படும்படியாகக் காண்பித்துக் கொண்டார். தன் ஜேபியிலிருந்து ஒரு சாதாரணமான கை குட்டையை எடுத்து, அதையும் நன்றாய்ப் பிரித்துக் காண்பித்தார்.

"நான் சென்ற சில மாதங்களாய் கஷ்டப்பட்டு வசிய சாஸ்திரத்தை அப்பியஸித்து வருகிறேன். அதில் நான் அடைந்திருக்கும் தேர்ச்சியைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படாமலிருக்க முடியாதென்பது திண்ணம். தயவு செய்து யாராவது ஒரு கனவான் இப்படி வாருங்கள் ஒரே நிமிஷம்!" என்றார். ஒருவரும் வருவதாய்க் காணோம்.

"என்? தாங்கள் தான் வாருங்களேன்" என்று ராவ் பகதூர் வேலாயுதமுதலியாரைக் கூப்பிட்டார். தன்னைச் சுட்டிக் காட்டிக் கூப்பிட்ட பின்னும் உட்கார்ந்திருப்பது கேலிக்கு இடம் என்று எழுந்து முதலியார் கம்பீரமாய் புரொபஸர் அருகே வந்தார். புரொபஸர் சற்றுநேரம் ஸ்திரீகள் உட்கார்ந்திருக்கும் பக்கம் யாரையோ தேடுவதுபோல அப்படியும் இப்படியும் பார்த்துவிட்டு ஒருபுறம் கம்பீரமாய் உட்கார்ந்திருந்த முதலியாரின் மனைவி ரெங்கநாயகி அம்மாளை, "அம்மா, இப்படி ஒரு நிமிஷம் வாருங்கள்" என்றார். முதலில் சற்று அச்சமடைந்தாலும் தன் புருஷர் அருகிலிருப்பாராகையால், சற்று தைரியங் கொண்டு, மேஜையண்டை சென்று தன் புருஷன்பக்கத்தில் நின்றுகொண்டார்கள். முதலியாரைப்பார்த்து," அவர்கள் அணிந்துகொண்டிருக்கும் நகைகளில் பிறர் உதவியன்னியில் அணிந்துகொள்வதற்குக் கஷ்டமானசில நகைகளைக் கழற்றி இந்தக் கை குட்டையில் வையுங்கள்" என்றார். முதலியாருக்கு இதென்ன வேடிக்கையோ இதைக் காண வேண்டும் என்ற ஆவல் உண்டானபோதிலும், நகைகளைக் கழட்டத் தன்மனைவி என்ன சொல்வாளோ என்று அவளைப் பார்த்தார். இதற்குள் முன்னணியில் உட்கார்ந்திருந்த ஒருவர், "என்ன முதலியார்! பயமாயிருக்கிறதா? என்ன யோசிக்கிறீர்கள்?" என்று புரளிசெய்ய ஆரம்பித்துவிட்டார். அதற்கு மேலும் ஆலசியம் செய்வது கவுரக் குறைவு என்றெண்ணி, முதலியார், வைர அட்டிகை, வைர வளையல்கள், நவரத்தின மகர கண்டி முதலான சுமார் 20 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகளைக் கழற்ற ஆரம்பித்தார்.

புரொ:— கனவான்களிடம் துப்பாக்கியிருக்கிறதா? அவர்கள் கழற்றிக்கொண்டிருக்கட்டும். அதற்குள் ஒரு சிறிய வேடிக்கை. ஒரு நிமிஷம் நான் அதைப் பார்க்கவேண்டும். பிறகு நீங்களே உங்கள் இஷ்டமானபடி சுடலாம். அக்குண்டுகளையெல்லாம் இத்தட்டு ஏற்றுக் கொள்ளும்-என்று ஒரு தட்டை எடுத்துக் காண்பித்தார்.

அங்கு வந்திருந்தவர்களில் சிலருக்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ள லைசென்ஸிருந்தாலும் விருந்துக்குப்போகுமிடத்தில் துப்பாக்கி அனுவசியம் என்று ஒருவரும் எடுத்து வரவில்லை.

இரண்டொரு விநாடி ஒருவரும் துப்பாக்கியைக் கொடுக்க முன்வரவில்லை.

புரொப:—உங்களில் ஒருவரிடமும் துப்பாக்கியில்லையா? உங்களிடம் கூடவாயில்லை.

என்று கிருஷ்ணசாமி நாயுடுவைச் சுட்டிக்கேட்டார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த நாயுடுகாருவுக்கு அறிமுகமான ஒருவர், "நன்றாய் இல்லாமலிருக்குமே! போலீஸ் அதிகாரி எந்த சமயத்திலும் தயாராயிருக்க வேண்டுமே. கொடுங்கள் சார். என்ன வேடிக்கையோ பார்க்கலாம்" என்றார். கிருஷ்ணசாமி நாயுடுவும் புரொபஸர் மூர்த்தியைப்பற்றி வெகுவாகக்கேள்விப்பட்டிருக்கிறார். ஆகையால் இதென்ன வேடிக்கையோ, பார்க்க வேண்டும் என்று அவர் அவர் மனத்திலும் எழுந்தது. ஆகவே, தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து மூர்த்தியிடம் கொடுத்தார். இதற்குள் முதலியார், 'நகைகளைக் கழற்றியாய்விட்டது' என்றார்.

புரொப:— [ரெங்கநாயகியம்மாளைப் பார்த்து] நீங்கள் போய் உட்கார்ந்துகொள்ளுங்கள். நகைகள் தாமாகவே வந்து அந்தந்த இடங்களில் பூண்டுகொள்ளும். பயந்துவிடாதீர்கள். என்று சொல்லவே ரெங்கநாயகியம்மாள் தன்னிடத்திற்குச் சென்றார்கள்.

[முதலியாரைப் பார்த்து] தங்கள் கைகளினாலேயே நகைகள் வெளியே தெரியாதபடி அக்குட்டையில் நன்றாய் முடிபோடுங்கள்.

முதலியார் அப்படியே செய்தார்.

"சரி! தாங்களும் போய்ச் சற்று உட்கார்நதுகொள்ளுங்கள்" என்றார். முதலியாரும் போய் உட்கார்ந்துகொண்டார்.

"டெபுடி கமிஷனரவர்களே! தயவுசெய்து அப்படியே உட்காருங்கள்; கையில் துப்பாக்கியிருப்பதை மறந்துவிடாதீர்கள்."

புரொப:— கமிஷனரவர்களே! இதோ இருக்கும் தங்கள் கைத்துப்பாக்கி நன்றாய்க் கெட்டிக்கப்பட்டிருக்கின்றதல்லவா?

டெ-கமி:—ஆம்.

புரொப:—அதில் சந்தேகம் ஒன்றுமில்லையே? நிச்சயம் தானே?

டெ-கமி:—ஆம்; சந்தேகமேயில்லை. நன்றாய் கெட்டிக்கப்பட்டிருக்கிறது.

புரொப:—இதனால், நான் யாரை நோக்கிச் சுட்டாலும், தவறாமல் கொல்லும் அல்லவா?

டெ-கமி:—ஆம் தவறாமற் கொல்லும்.

புரொப:— கனவான்களே! டெபுடி கமிஷனரவர்கள் சொன்னதைக் கேட்டீர்களா? அதாவது, என் கையிலிருக்கும் இந்தத் துப்பாக்கி நன்றாய் கெட்டிக்கப்பட்டிருக்கிறது. நான் யாரை நோக்கிச் சுட்டாலும், அவர்களைத் தவறாமற் கொல்லும். அதிற் சந்தேகமேயில்லையாம். ஆகையால், எல்லோரும் இப்பொழுது நடக்கப்போகும் வேடிக்கையைக் கவனியுங்கள்.

என்று ஒரு விநாடி திரையின் பக்கமாய்த் திரும்பினார். மறுவிநாடி சபையைப் பார்த்தார். சபையிலுள்ளோர் யாவரும் புரொபஸரைப் பார்த்து அப்படியே பிரமித்துவிட்டார்கள், ஏனெனில், தாங்கள் பார்க்கும் முகம், ஒரு விநாடிக்கு முன் நின்றுகொண்டிருந்த புரொபஸர் மூர்த்தியின் முகமல்ல! மார்பளவும் நீண்டு தொங்கிக் கொண்டிருந்த தாடி, கண்ணாடி, இவை எங்கோ பறந்து விட்டன. கண்ணாடிக்குப் பதிலாக கறுப்பு முகமூடியணியப்பட்டிருந்தது. முகம் முன்போல ஐம்பது வயது கிழட்டு முகமாயில்லாமல், நல்ல வாலிபனுடைய முகம் போலத் தோன்றியது.

"சபை மெம்பர்களே! என்னைக் கண்டு பிரமிப்படைந்திருக்கிறீர்கள். அது சரிதான்; இதுவும் ஒரு ஜாலவேடிக்கையே. இத்தனை ஜாலவேடிக்கைகளைச் செய்த எனக்கு ஜம்புலிங்கமாக மாறுவது ஒரு பிரமாதமா?" என்றான்.

எல்லோருக்கும் இது கனவோ, நினைவோ என்று தெரியவில்லை. டெபுடி கமிஷனர் ஏதோ நினைத்தவராய் மெல்ல நழுவ ஆரம்பித்தார். உடனே ஜம்புலிங்கம், "டெபுடி கமிஷனரவர்களே, தயவு செய்து

(32-ம் பக்கம் பார்க்க)

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்.]

ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

நோரேமி? ஸ்ரீ ராம! நின்னுட (நோ)

அனுபல்லவி

ஸாரே ஸாரேகுனு பாபகர்மமுலு,
ஸல்புத்ஸுனுண்டு நாவண்டிவானிகி (நோ)

சரணம்

பாபுலை குருவச்யுலுகாக, பண்ட்ளிகிலின்த்ஸு ஸு,
தருணுலகை, ஸீதாபதி! நீ நிஜ பக்தியு தெலியனி
த்யாக ராஜுனிகி யொருலகைன (நோ)

II

ஸாரே ஸாரேகுனு	—அடிக்கடி
பாபகர்மமலு ஸல்புத்ஸுன் உண்டி	—பாபகர்மங்களைச் செய்துகொண்டிருக்கும்
நாவண்டி வானிகி	—என்னைப் போன்றவர்களுக்கு
நின்னு ஆட நோரு ஏமி ஸ்ரீராம	—உன்னைச் சொல்ல வாயேது? ஸ்ரீராம!
பாபுலை	—மஹா பாபங்களையே செய்துகொண்டு
குரு வச்யுலுகாக	—பெரியோர்களுக்குக் கட்டுப்படாமல்
பண்ட்லு இகிளின்ஸு ஸு தருணுலகை	—யௌவன ஸ்திரீகளைக் கண்டு பல்லிளித்துக்கொண்டு
ஸீதாபதி! நீநிஜ பக்தியு தெலியனி	—ஸீதாபதீ! உன் நிஜமான பக்தியைத் தெரியாத
த்யாகராஜுனிகி	—இந்த த்யாகராஜனுக்கும்
ஒருலகு ஆயின	—மற்றவர்களுக்கும்
(நின்னு)	—(உன்னை)

III

தன் குற்றம் தெரியாதவர்கள் தங்களுக்கு நேரும் துக்கங்களுக்கு ராமனே காரணமென்பார்கள்; தங்களுக்கு நேரும் ஸுகங்களுக்கோ, தாங்களே காரணமென்பார்கள். ஸ்வாமிகளோ, அப்படியல்ல; எதற்கும் தன்னையே குற்றஞ் சாட்டுவார்; ராமனை ஸ்வப்னத்திலும் குறைசொல்லமாட்டார். 'தனமிதனே'யென்ற கீர்த்தனத்தில் இது நன்கு விளங்குகிறது. பட்டணம் ஸுப்ரஹ்மண்யய்யர் அவர்களும் 'நின்னு ஜெப்ப காரணமேமி' யென்கிறார். "ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து:, ஆத்மைவ ரிபு ராத்மன:"—தனக்குத் தானே பந்து, தனக்குத் தானே சத்ருவென்பது கண்ணனுடைய மதம். ராமாயணம் யுத்த காண்டத்தில் ஸீதாபிராட்டியும் "இந்த ராக்ஷஸிகள் எனக்குச் செய்த கெடுதியென்ன? என் பூர்வஜன்ம கர்மத்தின் பயனை அனுபவிக்கிறே"னென்கிறாள்.

பாபுலை:—ஒருவன் கேவலம் பாபங்களையேயாவது, கேவலம் புண்யங்களையேயாவது செய்வது ஸாத்யமல்ல. பாப புண்யங்களைச் செய்வதாலுண்டாகும் பயனே மனுஷ்ய ஜன்மம். ஆனால் புண்யம் ஸ்வல்பமாயும், பாபம் அதிகமாயுமிருப்பதால், பாபத்தையே குறிப்பிடுகிறார்.

குருவச்யலு:—"ஸமுத்ரம் எப்படி ஸகல நதிகளையும் தன்னிடத்தில் இழுத்துக்கொள்கிறதோ, அப்படி ஞானத்தாலும், சீலத்தாலும், வயஸாலும் பெரியோர்கள், ராமனை எப்பொழுதும் சூழ்ந்திருப்பார்கள். அவரும், அவர்களைப் பரமபக்தியுடன் போற்றி, அவர்களுடைய ஆக்ஞையைத் தலையால் தாங்குவார். விசவாமித்ர மஹரிஷியைப் பார்த்து ராமன், "ஸ்வாமி, இதோ தங்களுடைய ஸேவகர்கள், தங்களுடைய ஆக்ஞையை நிறைவேற்ற ஸித்தமாகவிருக்கிறோம். விலை கொடுத்து வாங்காமலேயே நாங்கள் தங்களுக்கு ஏற்பட்ட வேலைக்காரர்க"ளென்றார். ஸீதையும், "ராவணா! இங்கே பெரியோர்களேயில்லையோ; இருந்தாலும், அவர்களுக்கு உட்பட்டு நீ நடப்பதில்லையோ"வென்கிறாள்.

தருணுலகை:—காற்று, ஜலம், சருகு முதலியவைகளையே புஜித்துத் தவஞ்செய்யும் விச்வாமித்திர பாராசாதி முனிவர்களே, ஸ்திரீகளின் ரூபலாவண்ய ஸல்லாபம் முதலியவைகளுக்கு வசப்பட்டு, அருமையான தவத்தையும் மறந்து இழக்கவில்லையா? ராஜஸ தாமஸ குணங்களையே வளர்க்கும் ஆஹாரங்களை உண்டு அசுத்தமான இடங்களில் காலங்கழித்து, அசுத்தமான எண்ணங்களும் வார்த்தைகளும் செய்கைகளும் நிறைந்த ஜனங்களுக்கு நடுவில் பழகுகிற நமக்கு மனதையும் இந்திரியங்களையும் அடக்குவது ஸாத்யமா? விந்த்யபர்வதம் ஏழு ஸமுத்ரங்களையும் எப்பொழுது தாண்டுமோ அப்பொழுது இதுவும் நடக்கும். (விச்வாமித்ர பராசராதி முனய:) ஸ்வாமிகளும், 'எந்த முத்தோ, மேனு ஜூசி' முதலிய கீர்த்தனங்களில் இந்த விஷயத்தை எடுத்துரைக்கிறார். வேதநாயகம் பிள்ளையவர்களின் "மருமாதரை நினையாதே" யென்ற கீர்த்தனமும்; ப்ரஹ்மாவால் ஏற்பட்ட பெருஞ் சுழல்களிரண்டு—பொன், பெண்' இவ்விரண்டிலும் கட்டுப்படாதவர்கள் கேவலம் பரமசிவ அவதாரமே"—வேதா: த்வேதா, மற்றொரு ச்லோகத்தில் "அன்யத்ர பீஷ்மாத் காங்கேயாத் அன்யத் ஹனூமதாதபி"—'கங்காபுத்ரரான பீஷ்மரையும், அஞ்சனாபுத்ரரான மாருதியையும் தவிர' என்றதைக் கவனிக்கவும்.

(12-ம் பக்கம் பார்க்க)

Broadcast

வெகு நேரம் பாடும்

வெகு அருமையாகப் பாடும்

பொது ஜனங்களால் ப்ரத்யேகமாய் கொண்டாடி விரும்பப்படுகிற
நவீன ஸங்கீதக் கச்சேரியை யொத்த
ரிகார்டுகள்

செம்பை
வைத்தியநாத பாகவதர்

R. T. 4081

{ சிவசிவ எனராதா —நாமவர்தனி
{ நின்னுசெப்பக —மாந்தாரி

G. T. 4058—G. T. 4057
R. T. 4003 & R. T. 4002

சித்தூர்
சுப்பிரமணிய பிள்ளை

R. 4059

{ ராமா நீ பைதனக்கு —கேதாரம்
{ மதுரா நகரிலோ —ஆ பைரவி

R. 4060—R. 4006— & —R. 4004

காலஞ் சென்ற
மிருதங்க வித்வான்
தக்ஷிணாமூர்த்தி பிள்ளை

அவர்களின் கஞ்சிரா வாத்திய இனிமையை கீழ்கண்ட ரிகார்டுகளில் கேளுங்கள்.

R T 4081 — R T 4003
G T 4058 — R T 4002
G T 4057 — R 4004
G T 2067

மதுரை மிஸ் சுப்புலக்ஷ்மி.

G. R. 2383

{ சந்திரனே ஸ்வதந்திரனே —ஸிந்து பைரவி
{ தாயே எழைபால் —பைரவி

B.T. 2337--B.G. 2351--B G. 2352
B. G. 2068 & B. T. 2047

ஸ்வாமி பாகவதர்

B. T. 2067

{ பாலகோபால —பைரவி
{ பாகம் 1 & 2

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,

167, மவுண்ட் ரோட், மதராஸ்.

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை. ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற் குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பினாங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்.

பதவிமோகம் அல்லது தேசீய மணம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

தேசத்தில் இவ்வாறு சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடக்கும்படி ஆய்விடுமென்னும், வேதாந்தக் கொள்கையுடன் கூறியதோர் விஷயமானது பாஞ்சோதியின் நெஞ்சில் அம்புபோல் பாய்ந்து, அதை வெளியே பிடுங்கி எறிய முடியாது அவனது மன நிலைமையை மாறச் செய்துவிட்டது.

ஒன்றும் பதில் பேசாது பாஞ்சோதி தனது நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கத்தின் வீர மொழிகளைக் கடைப்பிடித்து அன்பென்னும் விதையை உலகத்தினருக்கு விதைக்கவும் நம் நாட்டினர் சுகம்பெற வேண்டியதைக் குறித்தும் பிரசாரம் செய்யத் தலைப்பட்டான். வக்கீல் பட்டம் பெற்றுப்பெரிய உத்யோகம் வகிக்க வேண்டிய எண்ணங்களை அறவே மறந்தான். தும்பைப் பூவையொத்த கதராடையை அணிந்து தனது முடிவைப் பற்றித் தனது இணையிலா நண்பர்களிடம் அறிவிக்கச் சென்றான். தங்கமும், அவள் சகோதரனும், பாஞ்சோதியின் மனமாற்றங் கண்டு வியப்புண்டனர்.

தனது தந்தைக்கு தான் செய்ய உத்தேசித்த பிரசார வேலையைப்பற்றியும் எப்படி ஒரு திருச்சி உத்தியோகஸ்தர் பதவி மோகம்கொண்ட ஓர் தாசில்தாரால் கொல்லப்பட்டாரென்றும், இதற்கெல்லாம் பொருமையும், அமைதியிலா வாழ்வுமே காரணம் என்றும் ஆகவே, தனக்குக் கிடைக்க வேண்டிய சொத்துக்களைத்தாராளமாகத் தானதருமங்களில் செலவிட அனுமதியளித்தும் கடிதமெழுதிவிட்டான்.

மாலை கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பாஞ்சோதி பிரசங்கம் செய்து நாட்டைப்பாதுகாக்க வேண்டுமென்று தேசீய உணர்வுடன் பேசியது யாவரையும் திடுக்குறச் செய்தது. ஆனால், அவன் பிரசாரப் பிரசங்கம் ஜனங்களின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாயிருந்ததென்று அவன் கைது செய்யப்பட்டு அரசியல் கைதிகளுடன் வேலூரில் மறுதினமே 6 மாத வெறுங்காவல் தண்டனையுடன் அனுப்பப்பட்டான்.

இச்செய்தியைப் பத்திரிகையில் கண்ட தங்கமும், தகப்பனர் சேஷாசலம் ஐயரும் பாஞ்சோதிக்கு முறையே பின் கண்ட தந்திகளை வேலூருக்கு அனுப்பினர்:—

"எங்களைக் காப்பாற்றிய தியாகியே, உங்கள் பிரிவால் வருந்துகிறோம். கூடிய சீக்கிரம் தங்களையடைய முயலுவேன்"—"தங்கம்" என்றும்;

"என்னை மன்னிப்பாயாகவும். நான் கொலையாளியென்பதை இவ்வளவு நாள் ஒளித்து வைத்ததை வெளிப்படுத்திவிட்டாய்!" உனக்கு எவ்வாறு இது எட்டியதோ! மகாபாவியான என்னை மன்னி! என்னை மறுமுறை பார்ப்பதரிது! சேஷாசலம்" என்றும் வந்தவைகளைப்பார்த்து ஒருபுறம் சந்தோஷமும், மற்றொரு புறம் துக்கமும் அடைந்தான்.

தங்கமும் பிரசார இயக்கத்தில் ஈடுபட்டுச் சென்னையில் கைது செய்யப்பட்டாள். 6 மாதக்காவல்தண்டனையடைந்து கோவை ஜெயிலில் வைக்கப்பட்டாள். பாஞ்சோதியைப் பார்த்தது முதற்கொண்டே அவனைத் தனது வாழ்க்கைத் துணைவனாக அடையக் கடவுளைப் பிரார்த்தித்தாள். மேலும், அவனது மனோநிலை, தியாகபுத்தி, பரோபகாரச் சிந்தனை முதலியன அவனிடம் உள்ள அன்பை அதிகப்படுத்திவிட்டது.

* * * *

தங்கமும், பாஞ்சோதியும் இரண்டொரு நாள் முன் பின்னாக விடுதலை செய்யப்பட்டனர். தங்கம் முதலிலும், பாஞ்சோதி இரண்டாவதாகவும் விடுதலை செய்யப்பட்டனர். காலை 7-45மணிக்குச் சென்னை ஸெண்டிரலில் ஒரே கூட்டம். ஒவ்வொருவரும் தங்கள் கையில் ஹாரத்துடன் நின்றனர். வண்டி ஸ்டேஷனையடைந்த பிறகுதான் தங்கமும் பாஞ்சோதியும் பரஸ்பரம் அவ்வண்டியில் வருவது தெரியவநதது.

பாஞ்சோதியும், தங்கமும் அன்பென்னும் கூரிய பார்வையுடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு புன்னகை பூத்தனர். இருவருக்கும் மாலை சூட்டப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தங்கம் தனது விருப்பத்தை ஸன்னமாகப் பாஞ்சோதிக்குத்தெரிவிக்க, பாஞ்சோதியும் தனது இஷ்டத்தைச் சற்று சங்கோஜத்துடன் எடுத்துக் கூறவே, ஒருவருக்கொருவர் சற்று நாணம் எனற கயிற்றினால் கட்டப்பட்டுத் தடை செய்யப்பட்டனர்.

மறுநாள் பாஞ்சோதிக்கும் தங்கத்திற்கும் தேசியத் திருமணம் நடைபெற்றது. இளம் தம்பதிகள் தற்பொழுதும், ஹரிஜனசேவா சங்கக் கூட்டுக் காரியதரிசிகளாக இருந்து வருகின்றனர் ராம கிருஷ்ணன் தற்பொழுது காதி வஸ்திராலயக் கண்காணிக்கும் உத்தியோகத்திலிருந்து வருகிறான்.

நீலகிரி
காப்பிக் கொட்டை

கீழ்க்கண்ட ரகங்களை சகல சார்ஜூம் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்கு தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் வி. பி. ரெயில்வே பார்சல் (Passenger Train) மூலமாய் அனுப்பப்படும்.

10 ℔ எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக் கொட்டை	ரூபா	5	7	0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)				
1 × 30 ℔ மூட்டை நீலகிரி "O" சைஸ்	,,	15	1	0
1 × 30 ℔ மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு	,,	13	3	0

இன்னும் இதா காப்பிப் பொடி டீ இலைகளின் விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-T. ஸ்டேன்ஸ்: & Co: Ltd, கோயம்புத்தூர்

நிஜ பக்தினி:—தெலியலேரு, ராமபக்தி ஸாம்ராஜ்யமு, அதடே தன்யுடு, ஹரிதாஸுலு; லுகிபெவ்வரோ முதலிய கீர்த்தனங்கள் நிஜபக்தியை விளக்குகின்றன.

IV

வராளி — ஆதி

(39-வது மேள ஜன்யம். ஆ. ஸகரிகம: பதநிஸ் அவ. ஸம்பூர்ணம்.)

பல்லவி

கோ ரே மி ஶ்ரீ | ரா ம நின் | னு
; கா மாபா பா ; பததபபா | ; பாம த பா | மம பாதநி தப-பம
நோ ரே மி ஶ்ரீ | ரா ம நின் | னு
கரி கரி கரிஸகரீ ஸா ; ஸாரிஸ நீ | ; நிஸக ரி கா | மம பாதநி தப-பம

(கோரேம்)
கரி

அனுபல்லவி

ஸா ரே ஸா ரெ கு னு | பா ப கர் | ம மு லு
; தா பத நீஸா ஸ்க் ரீ ஸா | ; ரீ ஸா ஸா | ரிநி நித தா தபபா
ஸல் பு த்ஸு னுன் டு நா | வண் டி வா | னி ந
கா; மா பாதா ம-தநி ரிஸ் க்க் | ரிஸ் ரிஸ் ரிநி ஸா | நிதபம நிதபம

(கோரேமி)
கரி

சரணம்

பா பு லை கு ரு | வச் யு லு | கா க
; பா, பம பாபதநீ தத பா | ; நிதா, தப பா | மம பாதநி தப-பம
பண்ட் ளி இ வி த்ஸு த்ஸு | த ரு னு ல | லுக லீ
கரி பா ; மக கா ; கரிஸகரி ரி ஸா | ;நி ஸா க ரிக | மாபா மபதா பமபா

(இதற்குமேல் அனுபல்லவியைப் போன்றது.)

மகாபாரதம்

சாந்தி பர்வம்

(மோக்ஷ தர்மம்)

ஸாங்கியத்தின் சிறப்பு

யுதிஷ்டிரர் ஸாங்கியத்திலும் யோகத்திலு மிருக்கிற விசேஷத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்க, பீஷ்மர் கூறியதாவது:—ஸாங்கியர்களான பிராம்மணர்கள் ஸாங்கியத்தையும் யோகிகளான பிராம்மணர்கள் யோகத்தையும் சிலாகித்து அதன்பொருட்டு மேலான காரணத்தையும் சொல்லுகிறார்கள். "இவ்வுலகில் பிராணிகளுடைய எல்லாக் கதிகளையு மறிந்து விஷயங்களில் விரக்தனாயிருப்பவன் சரீரம் நீங்கிய பிறகு மிகவும் செவ்வையாக முக்தி யடைவான்; வேறுவிதமானால் முக்தியடையான்" என்கிற சாங்கியத்தை அவர்கள் மோக்ஷத்திற்குரிய ஞானமாகச் சொல்லுகிறார்கள். யோகிகள் பிரத்யக்ஷத்தைக் காரணமாக உடையவர்கள். ஸாங்கியர்கள் சாஸ்திரத்தில் உறுதியுடையவர்கள். இந்த இரண்டு சாஸ்திரங்களும் சம்மதமே. இவைகளாலுண்டாகிற இரண்டு ஞானங்களும் சிஷ்டர்களுக்குச் சம்மதமாக ஒப்புக்கொள்ளப்பட்டவை. அவைகள் சாஸ்திரப்படி அனுஷ்டிக்கப்பட்டால் மேலான கதியை அடையும்படி செய்கின்றன. இருவருக்கும் சுத்தியானது ஒரேவிதம்தான். பிராணிகள் விஷயத்தில் தயையும் ஒன்றே, விரதங்களைத் தரிப்பதும் ஒன்றே. அவர்களுக்குச் சாஸ்திரமானது சமமாயில்லை. அவர்களுக்கு மிகவும் ஸூக்ஷ்ம விசாரமில்லாத விஷயத்தில் ஒரே சாஸ்திரமேற்படும்.

பிறகு யுதிஷ்டிரர், "அவர்களுக்கு என்ன காரணத்தினால் சாஸ்திரம்மட்டும் சமமில்லை?" என்று கேட்டார். அதற்குப் பீஷ்மர் பதிலளித்ததாவது:—அந்த யோகிகள் யோகத்தால் தோஷங்களை அறுத்துவிட்டு மோக்ஷ பதத்தை அடைகின்றார்கள். அற்பமும் பலமில்லாததுமான அக்னியானது பருத்த விறகுகளால் நிரப்பப்பெற்றால் அவிந்துபோவதுபோல பலமில்லாத யோகியானவன் நசித்துவிடுகிறான். அந்த அக்னியே திரும்பவும் பலமடைந்து வாயுவுடன் சேர்ந்துகொண்டு பூமியையே சீக்கிரத்தில் எரித்துவிடுவதுபோல, பலத்தை அடைந்த யோகியானவன் உலகமனைத்தையும் எரியச் செய்வான்.

மனத்தை ஒரு வழிப்படுத்துவதும் ஒரே இடத்தில் நிற்கச் செய்கின்றதும் முக்கியமானது. வில்லாளியானவன் அஜாக்கிரதையின்றி மனத்தை ஒரு வழிப்படுத்தி லக்ஷியத்தை அடிப்பதுபோல யோகியானவன் மனத்தை நன்கு ஒரு வழிப்படுத்தி ஸம்சயமின்றி மோக்ஷத்தையடைகிறான். ஒருவன், தலையிலிருக்கிற எண்ணெய் நிறைந்த குடத்தில் மனத்தைச் சலியாமல் வைத்துக்கொண்டு ஜாக்கிரதையுடன் படியில் ஏறுவதுபோல யோகியும் சலியாத மனத்தை அடைந்து தன்னுடைய ஆத்மாவை நிர்மலமாகச் செய்கிறான். தத்வஜ்ஞானி யோகத்

சென்னைக்கு முதன்முதலாக வந்துள்ள லைனோ டைப் யந்திரங்கள்.

தினால் மனத்தை ஒரு வழிப்படுத்திக்கொண்டு இந்தத் தேகத்தைத் தள்ளிவிட்டு அடைதற்கரிய ஸ்தானத்தையடைகின்றான்.

பிறகு பீஷ்மர் ஸாங்கியத்தின் சிறப்பையும் முறையையும் சொன்னார். தோஷமுள்ளவையும் ஜயிக்க முடியாதவையுமான மனிதர்களுடைய எல்லா விஷயங்களையும் பிசாசங்களுடைய விஷயங்களையும் ஞானத்தினால் நிச்சயித்து, ராக்ஷஸர்கள் முதல் பிரம்மா வரையிலுள்ளவர்களின் விஷயங்களையும், உலகத்தில் ஆயுளின் பரமான காலத்தையும் ஸுகத்தின் மேலான தத்வத்தையும், எப்பொழுதும் விஷயத்தில் பற்றுள்ளவர்களுக்குக் காலம் நேரிட்டபொழுது உண்டாகும் துக்கத்தையும், நரகத்தின் துக்கத்தையும் ஸ்வர்க்கத்தின் குணங்களையும் வேத வாதத்திலுள்ள குண தோஷங்களையும், ஞான யோகத்திலும் கேவல யோகத்திலுமுள்ள குண தோஷங்களையும், ஸாங்க்ய ஞானத்திலுள்ள குண தோஷங்களையும், ஆத்மாவினுடைய ஸ்ருஷ்டியையும் உண்மையாக அறிந்து சாஸ்திரத்தாலுண்டான ஞானம், ஸாக்ஷாத்காரம் இவற்றுடன் கூடினவர்களாயிருப்பவர்கள் மோக்ஷத்தை அடைகிறார்கள்.

யுதிஷ்டிரர், "நிலைத்த விரதமுள்ள யதிகள் ஸர்வஜ்ஞராகிய பரமாத்ம ஸ்வரூபமான உத்தம ஸ்தானத்தை அடைந்தபின் பிறப்பு, இறப்பு முதலான விஷயத்தை நினைக்கின்றார்களா இல்லையா? பரமான ஞானத்தில் முழுகினவனுக்கு எது மிகுந்த துக்கமாகாது?" என்று கேட்க, பீஷ்மர் பதில் சொன்னதாவது:—தேகிகளுக்குத் தம் தேகத்தில் இந்திரியங்களே அறியப்படுகின்றன. அவைகள் ஆத்மாவுக்குச் சாதனங்கள். ஸூக்ஷ்மனான அவனோவெனில் அவைகளால் பார்க்கிறான். ஆத்மா இல்லாவிடில் அவை கட்டைக்கும் சுவருக்கும் ஒப்பாகப் பெரிய ஸமுத்திரத்திலுண்டாகும் நுரைகள் போல நசிக்கின்றன. இந்திரியங்களோடு தேஹியானவன் நித்திரை செய்யுங்கால் ஆத்மாவானவன் ஸூக்ஷ்மனாகி ஆகாயத்தில் வாயுவைப்போல் எங்கும் சஞ்சரிக்கிறான். அவன் விழித்துக்கொண்டால் முன்போல இவ்வுலகில் எல்லாவற்றையும் நியாயப்படி பார்க்கிறான். ஸ்பர்ஸங்களை ஸ்பர்ஸிக்கிறான். ஆத்மாவானவன் தங்கள் ஸ்தானங்களிலேயே இருக்கிற எல்லா இந்திரியங்களுடைய ஸூக்ஷ்மமான எல்லாக் கதிகளையும் ஆக்ரமித்துக்கொண்டு ஸஞ்சரிக்கிறான். ஆத்மா க்ஷேத்ரஜ்ஞனான ஜீவனை அடைகிறான். புண்ய பாபங்களான கர்மங்களும் அடைகின்றன; இந்திரியங்களும் அடைகின்றன. எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டவனும் நாசமற்ற நிர்க்குணனான அந்தப் பரமாத்மாவை அடைந்தவனுமாகி மறுபடி திரும்பான்.

ஸாங்க்ய ஞானமானது சிறந்ததாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. சரீரமில்லாத பரமாத்மாவுக்கு ஸாங்க்ய ஞானம் சரீரமென்று வேதம் சொல்லுகிறது.

பூமியில் பிராணிகள் ஜங்கமஸ்தாவரங்களென்று பிராணிகள் இரண்டு விதமாயிருக்கின்றன. அவைகளில் ஜங்கமம் சிறந்தது. மகான்களிடத்திலும் வேதங்களிலும் ஸாங்கியங்களிலும் யோகத்திலும் காணப்படுவனவும், புராணத்தில் அனேக விதமாகக் காணப்படுவனவுமாகிய ஞானங்களெல்லாம் ஸாங்கியத்திலிருந்து வந்தன. பெரிய இதிஹாஸங்களில் காணப்படுவதும் சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்பட்ட அர்த்த சாஸ்திரத்திலுள்ளதும் இந்த உலகத்திலுள்ள மற்றவையுமான பெரிய ஞானமெல்லாம் ஸாங்க்யத்திலிருந்தும் வந்தன. ஸாங்கியத்தில் அடக்கமும் காணப்படுகிறது. ஸாங்க்ய ஞானத்தில் பற்றுள்ளவர்களுக்குப் பாவஞ் செய்தவர்களுக்கிருப்பிடமான திர்யக் ஜாதியில் பிரவேசம் காணப்படவில்லை. கீழான கதியும் இல்லை. அந்தப் பிராம்மணர்கள் அறிவில்லாதவர்களுடைய கதியையும் அடையமாட்டார்கள். புராதனமான இந்தப் பிரபஞ்சம் நாராயணரே. அவர் படைப்புக்காலத்தில் படைப்பைச் செய்கின்றார். ஸம்ஹார காலத்தில் அதைத் திரும்ப பக்ஷிக்கின்றார். ஜகத்திற்கு அந்தராத்மாவாகவிருக்கும் அவர் எல்லாவற்றையும் ஸம்ஹரித்துத் தம்முடைய தேகத்திலிருக்கச் செய்து ஜலத்தில் சயனிக்கிறார்.

(தொடரும்.)

BOERICKE & TAFEL'S

அசல் ஹோமியோபதிக் டைல்யூஷன் மருந்துகள் (உபயோகமற்றவையைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) டிஷ்யூ நிவாரணிகளும்-½ அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் டிரைசுரேஷனஸ் & மாத்திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

YINGLING'S "ACCOUCHEUR'S EMERGENCY MANUAL PRICE Rs 4/- ONLY.

SETT DEY & CO.,
40-A, Strand Road, Calcutta

ஜப்பானின் வியாபார வெற்றி

"எஸ். ஆர்."

100 வருஷங்களுக்கு முன்பு ஜப்பானியர்கள் வெளிநாடுகளுடன் வியாபாரமே செய்யக் கூடாதென்று கட்டுப்பாடுடன் இருந்தனர். ஆனால் இக்காலத்திலோ ஜப்பானியர்களால் செய்யப்பட்ட சாமான்கள் எல்லாத் தேசங்களிலும் நிறம்பியிருக்கின்றன. சென்ற சில வருஷங்களாகத் தான் ஜப்பான் மிகவும்ஊக்கமாக மற்றக் கைத்தொழில் நாடுகளுடன் போட்டியிட்டுக்கொண்டு நம்ப முடியாதவாறு அவ்வளவு குறைந்த விலையில் சாமான்களைத் தயாரித்து அனுப்புகிறது.

இக்காலத்தில் அவர்கள், துணிமணிகள், பொம்மைகள், கடித்தத்தினாலும் அட்டையினாலும் செய்த சாமான்கள், என்ற இவைகளுடன் நிற்காமல், மோட்டார் வண்டிகளும், மின்சார டைனமோ மெஷின்களும், ரேடியோ செட்களும், பைசிகல்களும் தயாரித்து அனுப்புகிறார்கள். செயற்கைப் பட்டு ஏற்றுமதி செய்வதில், ஜப்பான் உலகத்திலேயே இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது.

விலையிலோ மேல் நாட்டார் கூறும் விலையில் பாதிவிலையும், சில சமயங்களில் கால்வாசி விலையும் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வளவிற்கும் மூலப் பொருள்களான. பருததியாவது, இரும்பாவது, நிலக்கரியாவது, அவர்களிடம் கிடையாது. இவைகளை எல்லாம் வெளிநாட்டிலிருந்துதான் விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

இந்தியாவிலிருந்து விலை கொடுத்து பருத்தி வாங்கி, தங்கள் ஊரில் துணி நெய்து, அதே துணியை நம் இந்தியமில்கள் நெய்து விற்கும் விலையை விட சரசமாக விற்க இவர்களால் எப்படி முடிகிறது? ஜப்பானிய கூலிக்காரர்கள் சம்பளம் இல்லாமல் நாள் முழுவதும் வேலை செய்கிறார்களா? அவர்களது அரசாங்கம் அவர்களுக்கு உதவிசெய்து காப்பாற்றுகிறதா? நமக்கு இல்லாத அனுகூலங்கள் அவர்களுக்கு என்ன இருக்கின்றன? என்பனவற்றை ஆராய்வோம்.

பொதுவான காரணங்கள்

முதலாவது, ஜப்பானியர் துணி மணிகளின் மீது, அதிக பணம் செலவழிப்பது இல்லை. காலிற்கு மரப்பாதரக்ஷைகளும் மேலுக்கு சிறிதும் ஆடம்பரமின்றி மிகவும் மலிவான உடைகளும் அணிகிறார்கள். அவர்களின் சாப்பாட்டிற்கு அதிக செலவு ஆவதில்லை. அரிசி, பருப்பு, மீன் இவைகள்தான் அவர்களுடைய முக்கிய உணவுப் பொருட்கள். தொழிலாளிகள் கள், சாராயம் குடிப்பதென்றவழக்கமே கிடையாது. ஆகையால் மாதம் ரூ. 20, 30 ஒரு தொழிலாளிக்கு சம்பளம் கொடுத்தால் போதும், திருப்தி அடைந்துவிடுகிறார்கள். மிகவும் உயர்ந்த வேலைகள் செய்யும் ஆள்களும் இவ்வளவு குறைந்த சம்பளத்தில்சந்தோஷத்துடன் வேலை செய்கிறார்கள்.

இரண்டாவது, ஒரு குடும்பத்தின் தலைவன், ஒரு கைத்தொழிற்சாலையை வீட்டில் ஏற்படுத்தினால், அவனுடைய குடும்பத்தில் உள்ள ஆண், பெண் முதலிய எல்லா நபர்களும் ஒத்து வேலை செய்கிறார்கள. ஒரே குடும்பத்தவர்கள் வெவ்வேறு இடங்களில் தனிக் குடித்தனம் நடத்துவதை அந்த நாட்டில் காணமுடியாது.

மூன்றாவது, ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு மிகவும் சிறிய முதல் இருந்தால் போதும். ஜப்பானில் மலைகளிலும் காடுகளிலும் ஏராளமான மரங்கள் இருப்பதால், வீடுகள் மரத்தினாலேயே கட்டப்படுகின்றன.

நான்காவது, அவர்களின் அரசாங்கம், அவர்களின் வியாபாரம் விருத்திஅடைய எல்லா விதங்களிலும் உதவி புரிகிறது. இதுதான் எல்லாவற்றிலும்

(27-ம் பக்கம் பார்க்க)

தும்மல்
ஜலதோஷத்தின்
அடையாளம்

இன்று வெறும் தும்மல்; ஆனால் நாளைக்குத் தலைநிறைய ஜலம்; மூக்கில் சளி; அல்லது பின்னால் நியுமோனியாவாக மாறக்கூடிய குளிரும், சிலிசிலிர்ப்பும். ஆகவே தும்மல் ஏற்பட்டால் ஜலதோஷம் தொடர்ந்து வரும் என்பதை மறக்க வேண்டாம. எனவே பெப்ஸ் சாப்பிடுங்கள். வாயில் போட்டுக் கரைகையில்

கைக் கடக்கமான, இந்தசுவாசநிவாரண மாத்திரைகள் நிறைந்த ஆவியை வெளிப்படுத்துகின்றன.

பெப்ஸ் கைக்கடக்கமான வில்வைத்த புட்டிகளில் புட்டி 1-க்கு ரூ. 1 வீதம் கிடைக்கும். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

பெப்ஸ் க்ருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகள்

பெப்ச் PEPS



சென்னை ஆக்டிங் கவர்னர் ஸர் கே. வி. ரெட்டி கூனூர் மௌண்ட் ப்ளஸண்ட் ஸோஷியல் க்ளப்பிற்கு விஜயம் செய்திருந்தார். அப்போது நடந்த பாட்மின்டன் பந்தயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் காட்சி.

நோயற்றவாழ்வு

வெறிநாய்கடி அல்லது அலர்க்க விஷம்

(வியாதியின் வரலாறும், தடுத்தலும், பரிஹாரமும்)

(வைத்தியரத்ன பண்டித எம் துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது.)

[நாய்க்கடி விஷம் நடுக்கந்தரக்கூடிய கொடிய நோய்க்குக் காரணமாகும் அவ் விஷக்கடியால் உண்டாகும் கடுந் துன்பங்கள் ஜனங்களைப் பல வகையிலும் பீடிக்குமென்பதை யுணர்ந்து, அவ் விஷந் தீண்டியவருக்கு விசேஷ பரிஹார முறைகளைச் செய்ய அரசாங்கத்தாரும் அநேக ஏற்பாடுகளை நாடெங்கும் செய்திருக்கிறார்கள். ஆனால் வெறிநாய் கடித்தவுடன் வீண் தாமதஞ் செய்யாமல் விவேகத்துடன் ஏற்ற வைத்தியரைத் தேடி உற்ற பரிஹாரம் செய்துகொள்ள ஜனங்களுக்கு அறிவும் ஆற்றலும் இருந்தாலன்றி, கற்றறிந்த வைத்தியர்களும், கவர்ன்மெண்டாரும் செய்யும் எவ்வித உயர்தர ஏற்பாட்டையும் உலகத்தோர் உபயோகித்துக்கொள்ள இயலாமற் போய்விடும். ஆகவே, நாய்கடி விஷம் என்பதைப்பற்றி நான் இக்கட்டுரையில் அனைவரும் அவசியம் அறிந்திருக்கவேண்டிய அம்சங்களையெல்லாம் 'மித்திரனை'ப் படிக்கும் நேயர்களில் சிலரது வேண்டுகோளுக் கிணங்கி வெளியிடுகிறேன்.]

லாலா விஷம்

ஆயுர்வேதக் கிரந்தங்களில் வனைய பிராணிகளிடமிருந்தும் மனிதர் தேஹத்திற் பற்றி வெவ்வேறு வகையில் தீங்கிழைக்கும் நஞ்சுகளை தம்ஷ்ட்ராவிஷம், லாலாவிஷம், க்ஷீர விஷம் என்றவாறு அநேக வகையிற் சாஸ்திரஞ்ஞர் பகுத்துக் கூறியிருக்கிறார்கள். விஷத்தைக் கக்கும் கோரப்பற்களைப் பெற்ற ஸர்ப்பம் முதலியவை 'தம்ஷ்ட்ராவிஷப் பிராணிகள்' எனப்படுவதுபோல், நாய், நரி முதலியவை வெறி கொண்டால் லாலா 'விஷப்பிராணிகள்' என்று வழங்கப்படும். லாலா விஷம் என்றால் நஞ்சுத்தன்மையுள்ள சொள்ளுநீர் அல்லது உமிழ்நீர் என்று பொருள். இக்கட்டுரையில் விவரிக்கப்படும் விஷயம் அனைத்தும் அவ்வித லாலா விஷ ஸம்பந்தமானதே.

அலர்க்க விஷம் என்றால் என்ன?

வெறி பிடித்த நாய், நரி, ஓநாய், பூனை முதலிய ஜந்துக்களின் உமிழ்நீர் கொடிய விஷத்தன்மையைப் பெறுகிறது. ப்ராக்ருதத்தில் அப்பிராணிகளின், அவற்றிலும் முக்கியமாய் அவ்வித நாயின் லாலா விஷத்தால் உண்டாகும் நோயைப்பற்றியே பிரஸ்தாபிக்கிறோம். ஸம்ஸ்கிருதத்தில் வெறிபிடித்த நாய் 'அலர்க்கம்' என்றும் 'க்ஷிப்தகுக்குரம்' அல்லது 'துஷ்ட குக்குரம்' என்றும் வழங்கப்படுகிறது.

அவ்வித நாயின் விஷத்தை 'அலர்க்க விஷம்' என்றும், அவ்விஷ வேகத்தால் ஏற்படும் வியாதியை 'குக்குரஜ்வரம்' என்றும் கூறுவர். வியாதிக்ரஸ்தனுக்கு விபரீதங்களை விளைவிக்கும் இந்நோயின் சுபாவத்தைப்பற்றி இக்காலத்திய வைத்திய சாஸ்திரிகளைப் போலவே, நம் பண்டைக் காலத்தியவர்களும் விசேஷமாகவும் நுட்பமாகவும் அறிந்திருந்தனர் என்பதை நம்மவர் முற்காலத்தில் இதற்கு இட்டுள்ள பெயர்களையும் இக்காலத்திய பெயர்களையும் ஒப்பிட்டுப் பரிசீலனை செய்வதால் நன்குணரலாம். 'அலர்க்க விஷம்' என்பதைத் தவிர, இதற்கு 'ஜலத்திராஸ ரோகம்' என்றும் பெயருண்டு. இவ் வியாதி கொண்டவர் தண்ணீரைக் கண்டால் கொடிய பயங்கொள்வது இதற்குள்ள ஓர் அபூர்வமான லக்ஷணம்; அதனால் இதை ஜலத்திராஸ ரோகம் என்பர். ஆங்கிலத்தில் 'ஹைட்ரோ போபயா' என்று இப்பொழுது வழங்கப்படுவதற்கும் காரணம் இதுவே. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம் தேசத்தில் வைத்தியர் வைத்தியரல்லாத மற்றும் கற்றறிந்தவர் அனைவரும் இவ் வியாதியின் கொடிய சுபாவத்தை உணர்ந்திருந்தனர் என்பதை, உத்தரராம சரிதத்தில் "ஆலர்க்கம் விஷமிவ ஸர்வத: ப்ரவ்ருத்தம்" (வெறிநாய் விஷம்போல் வெகு கடுமையாக எங்கும் பாவிவிட்டது) என்று மஹாகவி பவபூதி விவரித்துள்ள விஷயம் விளக்குகின்றது.

அலர்க்கம் அல்லது வெறிநாய்

இவ்வியாதியால் (வெறியினால்) வருந்தும் நாய் முதலிய பிராணியினிடமிருந்து இந்நோய் மனிதரிடம் பற்றுவது எளிது முதலில் அலர்க்கம் என்கிற வெறிநாயின் நிலைமையைப்பற்றி நாம் அறிந்திருப்பது நலம். வெறி நோயால் வருந்தும் நாய் மூலை முடுக்குகளில் தன்னந்தனியே பதுங்கிக் கிடக்கும்; கண்கள் சிவந்து அவற்றிலிருந்து நீர் வடிவதோடு, வால்துவண்டு தொங்கிவிடும்; பயந்து ஒடுங்கியும், வெடுவெடுப்பான கோரமான பார்வையுடையதாகவும் காணப்படும்; உணவை ஏற்காமல், சில ஸமயம் கந்தல் கூளங்களைக் கண்டெடுத்துத் தின்னும்; ரௌத்ரமாய் குரைத்துக்கொண்டு இங்குமங்கும் ஓடுவதுமுண்டு; எதிரில் வரும் எவரையும் கடித்துவிடும்; ஆரம்பத்தில் தன் யஜமானனிடமுள்ள நன்றியறிதலை நழுவவிடுவதில்லை; ஆனால் பிணி பிரபலமாக அதனிடம் முதிர முதிர கடுங்குரூரத்தன்மையும், கோரப்பற்களைத் திறந்தவாறு அதன் கடுமையான பார்வையும் காண மிகவும் பயங்கரமாவதுடன், தன் யஜமானனையும் மறந்துவிடும்; தொண்டை வீக்கமடைந்து, வெகு வேகமாக இரைப்பு உண்டாவதுடன், வாய் எப்பொழுதும் திறக்கப்பட்டு, நாக்கும் தொங்கிய வண்ணம் இருக்கும்; வாயிலிருந்து நீர் அமிதமாகச் சொரிவதோடு, வாய் நுரைதப்பியதாகவும் காணப்படும். இந்நிலைமைக்கு வந்தபிறகு அந்தப் பிராணி சில நாட்களுக்குள், அல்லது சில மணிநேரத்தில் அநேகமாய் இறந்துவிடும்.

விஷம் மனிதரிடம் சேரும் வகை

இவ்விதம் வெறிபிடித்த ஜந்துவின் உமிழ்நீரிலுள்ள விஷமானது பிறரது உடலில் பல்லால் கடித்த விரணத்தில் அல்லது வேறு வகையில் ஏற்பட்டுள்ள விரணத்தின் மூலமாய் ஸம்பந்தப்பட்டு; நோயுண்டாக்கக் கூடியது. இத்தகைய பிராணி மனிதரது தேஹத்தில் நகம் முதலியதால் சிதையுண்ட பாகத்தை நக்கினாலும் அதன் லாலா விஷம் இரத்தத்திற் பற்றிப் பரவிவிடும். "கோதா-ஸரீஸ்ருபா-லர்க்க மார்ஜாராத்யா விஷம் ஸ்வகம் ஜிஹ்வாநிர் லேஹனைர் தம்சாலாலர்த்வாரா ஸ்ருஜந்திஹி"— பல்லி, சிறுபாம்பு, வெறிநாய், பூனை முதலிய பிராணிகள் மனிதரைக் கடித்தும், அல்லது ஏற்கனவே சிதைந்துள்ள அவயவங்களை நக்கியும் தம் சொள்ளுநீர் மூலமாய் விஷத்தை மனித தேஹத்திற் சேர்ப்பிக்கின்றன என்கிற உண்மையறிந்தால், இவ்வித ஜந்துக்கள் மனிதவர்க்கத்துக்கு வெகு அபாயகரமானவை யெனக் கருதவேண்டியிருக்கிறது.

விஷம் உட்சென்ற பிறகு, விரணத்தின் வாய் ஸாதாரணமாய் மூடி மறைந்துவிடும். ஆனால் இக்கள்ள விஷத்தின் விஷமத்தனம் நாலைந்து வாரங்களிலாவது, சிலருக்குப் பதினாறு, அல்லது பதினெட்டு மாஸங்களிலாவது அது உட

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,
மருந்து வியாபாரிகள், சைனபஜார் ரோட், மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

வில் ஊறி ஏற்பட்ட வியாதியின் குறிகளின் மூலமாய் வெளியாவது வழக்கம். ஆனால் சரீரத்தில் விஷம் வியாதியாகப் பரிபக்குவமடைவதற்கான காலம் பொதுவாக ஆறு வாரங்களேயாம். வெறி நாயால் தீண்டப்பட்ட ஒவ்வொருவனுக்கும் அலர்க்க விஷ வியாதி வந்தே தீருமென்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. பிராணியின் பல் தாக்கும்போது, துணி முதலியதால் விஷநீர் தேஹத்திற் படாதபடி தடைக்கப்பட்டுப் போகலாம். குறிப்பிட வியலாத வேறு முகாந்தரங்களாலும் வெறி நாய் முதலியதால் கடியுண்டவர் அவற்றின் விஷம் தம் தேஹத்திற் பற்ருது தப்பிக் கொள்வதுண்டு. வெறி நாயால் தீண்டப்பட்டவர்களுள் இருபதில் ஒருவனே அந்த வியாதியால் வருந்த நேரிடுவதாகப் பரிசிலனைகளைக் கொண்டு முதலில் ஜான் ஹண்டர் என்பவரும், பிறகு சில வைத்திய அதிகாரிகளும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

குக்குர ஜ்வரம் என்னும் வியாதி லக்ஷணம்

விஷம் உடலிற் பற்றிய பின் உண்டாகும் நிலைமையைப் பற்றி இனி சிறிது விவரிப்போம். அநேகமாய் விரணம் ஆறிய இடத்திற்கு அருகில் சொற்ப அழற்சியும், வலியும் ஆதியில் ஏற்படும். அடுத்தாற்போல் அமைதியின்மையையும் ஏதோ மனோ விகாரத்தையும், எளிதில் பொறுமையிழந்து சினங் கொள்ளுந் தன்மையையும் அவன் பெறுவான். சீக்கிரத்திலேயே ஆதியில் சொற்ப அழற்சியுண்ட இடத்தில் அதிக வலியும் சென்னிறமும், வீக்கமும் உண்டாய், கடுமையான குத்து வலியும் அடிக்கடியேற்படும் அக்கடியுண்ட இடத்திலிருந்து அவ்வேதனைகள் உடலின் நடுப் பாகத்திற்குக் கிரமமாகப் பரவிவிடும். இதன் பிறகு சில நாழிகைக்குள்ளாக—இல்லையேல் நிச்சயமாய் சில நாட்களுக்குள்ளாக—இவ்வியாதியின் பிரதானமான லக்ஷணங்கள் வெளிப்படையாகத் தோன்றி விடும். பிணியாளி பயங்கரமான கனவுகளைக் கண்டு திடுக்கிடுவான். கடுங் குளிரால் வருந்துபவன் போல் அடிக்கடியும் நடுக்கமடைவான் இவ்விஷம வாத தாதுவையே முக்கியமாகக் கோளாறடையச் செய்து, வாதவஹ நாடிகளென்கிற நரம்பு மண்டலத்தை பலமாகத் தாக்குவதால், ஸுஷும்நா காண்டம் (ஆங்கிலத்தில் ஸ்பைனல் கார்டு) எனப்படுகிற மத்திய நரம்பு மண்டலம் விஷத்தினால் விகாரமடைகிறது. ஆகையினாலேதான் இவ்விஷவேகம உடலனைத்தையும் வாதைக்கு உட்படுத்துகிறது. ஆக்ஷேபக வாதமென்கிற வலிப்புகளும், தநுர்வாதம் என்கிற உடலை வில்லைப் போல் வளைக்கும் இசிவுகளும், மந்யாஸ்தம்பம் என்கிற கழுத்துப் பிடிப்பும், தமகச்வாஸமென்கிற தொண்டையடைப்பும் அடுத்தடுத்துத் தோன்றும். தேஹச்சூடு அதிகரித்து ஜ்வர வேகத்தினாலும் பிணியாளி வருந்துவான். கஞ்சியையும் பாலையும் தண்ணீரையுங்கூட விழுங்கக் கூடாமல் தொண்டையடைப்பு திடீரென்று உண்டாக, அதைத் தவிர்க்கச் செய்யும் பலமான எம்முயற்சியும் வீணாய்விட, மூச்சடைப்பால் மிகக் கடுந்துன்பம் அனுபவிக்க நேரிடும். ஸ்தம்பநங்கள், ஆக்ஷேபகங்கள் என்கிற இவ்விதமான கொடிய பிடிப்புகளும் இசிவுகள் அல்லது வலிப்புகளும் சில விநாடிகளுக்கொரு முறையோ, சில நாழிகைகளுக்கு ஒரு முறையோ விட்டுவிட்டுத் தோன்றும். கடைசியாக முகம்-தொண்டை-மார்பு இவ்வவயவங்களிலிருந்து உடலெங்கும் இவ்வலிப்புகளும் பிடிப்புகளும் வியாபித்து, அபஸ்மாரத்தில் (காக்கை வலியில்) காண்பது போன்ற அலங்கோலக் குறிகளைக் கிளப்பிவிடும். முகம் விம்மிக் கொள்ளும்; நேத்திர மண்டலம் பருத்துப் பிதுக்கங் கொள்ளும்; வாயிலிருந்து நுரை தப்பும்; தொண்டையில் அடைபட்டுள்ள எதையோ தோண்டியெடுப்பவனைபோல் விரல்களை உள்ளே விட்டு இழுக்க முயலுவதும் வழக்கம். ஆக்ஷேபகம் என்கிற இசிவு தணிந்து மறுமுறை அது உண்டாவதற்கிடையில் வாயில் அடிக்கடியும் அமிதமாய் ஊறும் உமிழ்நீரை விழுங்க முடியாமையால், தொடர்ந்து சப்தித்தவண்ணம் அந்நீரை உமிழ்ந்தவாறிருக்க நேரிடுகிறது. முதலில் நீரை விழுங்க முடியாமல் திணறுவதாலேயே பிணியாளிக்கு உள்ளத்திலும் உடலிலும் க்ஷோபம் உண்டாகிறது. பிறகு தண்ணீரைப் பார்த்தாலும், அச்சொல்லைக் கேட்டாலும் பிணியாளி ஆத்

(25-ம் பக்கம் பார்க்க)

இந்தியா கவர்ன்மேண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மேண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸெண்டிரல் போர்டு மேம்பரும், கவர்ன்மேண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலென்ஸி ஸர் கே. வி. ரெட்டி நாயுடு காரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்தற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருககிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்பேர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஒளஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

ஒலிம்பிக் படகு ஓட்டப் பந்தயம் முடிந்த பிறகு நடந்த பிரார்த்தனை.

சட்டையில் ஓட்டை

(காசினி எழுதியது.)

* * * ஆமாம்; நீ சொல்லுவது என்னமோ வாஸ்தவம்தான். சட்டைக் கைகளுக்கு கொஸ்த்துப் பிடித்துத் தைத்துக்கொள்ளுவது மறுபடியும் ஒரு நாசூக்காகக் கிளம்பி இருக்கிறது. சிறிய அரும்புகள் மாதிரியில் கை ஓரத்தைப்பிடித்துக், கைகளைத் தளர இல்லாமல், பிடித்த மாதிரியில் இருக்கும்படி வெட்டித் தைத்துப் போட்டுக் கொள்ளுவது ஒரு நாகரீகம். இதற்குப் பொத்தான் வைத்துத் தைக்கிறார்கள். அதாவது அரும்புகள் பிடித்திருக்கும் கைப்பட்டி தோளுடன் புதைந்த மாதிரியில் இருக்கவேண்டும் என்று, அந்த இடத்தில் கையின் அடியில், ஒரு அங்குல நீளத்திற்குப் பட்டியைவெட்டி ஒரு 'பிரஸ்' பொத்தான் வைத்துத் தைத்துக் கொள்ளுகிறார்கள். பொத்தானை அவிழ்த்துச் சட்டையைச் சௌகரியமாகப் போட்டுக்கொண்டு, பிறகு பொத்தானை அமுக்கி விடலாம் என்னும் கருத்துடனேயே இவ்விதம் செய்கிறார்கள்.

வட இந்தியாவில் இருந்து வந்த என் சிநேகிதி ஒருத்தி சட்டையில் ஓட்டை பண்ணிப் போட்டுக்கொண்டிருந்தாள். அதாவது, சட்டையின்விலாப் புறத்தில் பாதாம்வடிவமாகத் துணியை வெட்டி எடுத்து ஓரம் தைத்திருந்தது. முதலில் இவள் அசதியாக ஒரு கிழிந்த சட்டையைப் போட்டுக்கொண்டிருக்கிறாள் என்று எண்ணினேன் அழகாக ஓரம் தைத்திருப்பதைப் பார்த்த பிறகுதான், இவள் இதை ஒரு நாசூக்காக இவ்விதம் அணிந்துகொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தேன். இது எதற்காக என்று கேட்டதற்கு, "இது ஒரு நாசூக்கு. இன்னும் ஒரு தினுசில் கூட எங்கள் ஊரில் சட்டை தைத்துக்கொள்ளுகிறார்கள். இதற்குக் கழுத்து வெட்டுச் சாதாரணச் சட்டைகளை விடச் சற்றுத் தாழ்வாகவே இருக்கும். பின்பக்கத்தில் தோளில் இருந்து ஆரம்பித்து, இரண்டு மூன்று விரல் அகலத்திற்கு ஒரு பட்டியைக் கொண்டு வந்து, முதுகில் நடுக்கழுத்துடன் ஒன்றாகச் சேர்த்துத் தைத்திருக்கும். நான் சொல்லுவது புரியவில்லையா? இரண்டு தோள் பட்டையிலிருந்தும் கொண்டு வரப்பட்ட பட்டி ஒன்றாக இசைக்கப்படும். பிறகு, சட்டையில் ஓட்டை செய்து, அது வழியாக இதை வெளியே கொணர்ந்து நீளமாகத் தொங்கும்" என்றாள் என் சிநேகிதி.

அவள் புறப்பட்டுப் போனதும், 'தன்னுடைய சட்டையில் ஏன் இவ்விதம் ஓட்டை செய்துகொண்டாள் என்பதை அவள் சொல்லவே இல்லையே?' என்றாள் லேடி சின்னையாவின் மகள்.

'எதற்காக இருக்கும்? விலாவின் அழகு தெரியவேண்டும் என்றுதான்' என்றாள் லேடி சுந்திராசாரி.

"ஆமாம்; விலாத்தெரிந்தால், அநாகரீகம் என்று முதலில் சட்டை தைத்துப் போட்டுக் கொள்ளுகிறது. பிறகு அதில் ஓட்டை பண்ணிக்கொள்ளுகிறது, அட கலியுகமே! உன்னுடைய மகிமையை என்ன என்றுதான் சொல்லுவேன். எங்க நாட்களிலே, நாங்கள் அழகாக ரவிக்கை போட்டுக்கொள்ள வில்லையோ?

ஜோதிஷப் பலன்

ஒரு தசைக்குப் புக்திவாரிப் பலன் ரூ 3. அந்தரப் பலன் ரூ 6. ஆயுள் கணிதம் ரூ 3½ உத்தியோக பாவம் ரூ 1½. வீ. பி. செலவு தனி. ஜாதக நகலும் பிறந்த ஊரும் தேவை. கடிதப் போக்குவாத்து தமிழில்.

வை. பிச்சு சாஸ்திரியார்,
ஜோதிஷ் கணிதர்,
மகஙகைகுளத் தெரு,
வைதீஸ்வரன் கோவில்.

ஐந்து வருஷ லேவை.

வி குப்புசாமி ஐயர், பி. ஏ. பி. எல்., அட்வகேட்.

கைலாஸபுரம், திருநெல்வேலி ஜங்ஷன், 23-3-35.

கேசவர்த்தினியை உபயோகித்ததால் அடைந்த அனுகூலத்தைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம ஸந்தோஷம், இழந்த கூந்தலை மீட்டுக்கொடுப்பதாலும், கூந்தலை நீண்டு வளரச்செய்வதாலும், இது நமது சிறுமிகளுக்கேற்றதொரு பிரஸாதமே! சிறுவயதிலிருந்து உபயோகித்தல் மிகத் தரம். நாங்கள் ஐந்து வருஷகாலமாக இதை உபயோகித்து வருகிறோம்.

(கையொப்பம்) வி குப்புசாமி ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணா 12; கேசவர்த்தினி ஷாம்பு விலை அணா 12; மேற் செலவு வேறு.
தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை.

சென்னை வேப்பேரியிலுள்ள மஹாராஷ்டிர ஸ்திரீகள் மண்டலில் 'வருஷாந்திர, ஸ்திரீகள் தினக் கொண்டாட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

அதை நாசூக்கில்லை என்று பழித்துப் பிறகு இப்படி எல்லாம் கிளம்புகிறதுகள்!'' என்ருள் என்னுடைய அத்தை.

'அதென்னமோ பட்டி வைத்துத் தைத்த சட்டை என்ருளே! அது என்னமாக இருக்கும் என்பது உங்களுக்குப் புரிந்ததோ?' என்று நான் கேட்டேன்.

'வால் மாதிரியில் தொங்கும் என்று புரிந்தது! உங்களுக்கு அது ஒன்றுதான் பாக்கி!' என்ருள் என்னுடைய அத்தை.

இது என்ன வம்பாக வந்தது என்று பேச்சை இதர விஷயங்களில் மாற்றினேம். எனக்கு இன்னும் அந்தச் சட்டை எவ்விதம் இருக்கும் என்பது என்னமோ சரிவரப் புரியவில்லை.

சேங்கல்லின் மகிமை

நம்மவருள் சற்று. நீடித்த நேரம் ஈரம் இல்லாத ஒத்தடம் கொடுக்கவேண்டி இருந்தால், செங்கல்லை அடுப்பில் போட்டு, இதில் சூடு ஏறினதும், எடுத்துத் துணியில் சுற்றி ஒத்தடம் கொடுப்பதில்லையா? நன்ருகச் சூடு ஏறிவிட்டால், துணி தீப்பற்றிக்கொண்டு விடும் என்று, சூடு சற்றுத் தணியும் வரையில், கைகால்களுக்கு ஒத்தடம் கொடுப்பதாக இருந்தால், கல்லில் இருந்துவரும் அனல் படும்படிப் பிடிப்பதில்லையா? இப்பொழுது வைத்திய நிபுணர்கள் செங்கல் ஒத்தடம் வாதத்தினுல் ஏற்படும் வீக்கம், வலி முதலியவைகளுக்கு மிகவும் அனுகூலம் செய்யக்கூடியது என்று கண்டுபிடித்திருக்கிருர்களாம்.

இதற்கு இரண்டு செங்கல்களைத் தீப்பழுக்க நெருப்பில் போட்டுச் சுட்டுக்கொள்ள வேண்டுமாம். பிறகு, இந்தச் செங்கல்களை ஒரு பழையதொட்டியின் அடியில் வைத்து, இதன் மேல், கையோ, காலோ முழங்கையோ, எந்தப் பாகம் வாதத்தினுல் பீடிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப பாகத்தை தாங்கி வைக்கவேண்டும். மேலே ஒரு கம்பளியைப்போட்டு மூடிவிடவேண்டும். மின்சார சக்தியின் உதவியினுல், பணச் செலவுடன் செய்யப்படும் சிகிச்சையில் ஏற்படும் குணம் இவ்விதம் செய்வதால் ஏற்படுமாம். இவ்விதம் சூடேற்றப்பட்டசெங்கல்லில் இருந்து ஒரு விதக் கிரணம் வெளிக்கிளம்புகிறதாம். இதுவாத வலியைப் போக்கி, நோயைக் குணம் செய்யும் சக்தி உடையதாம்.

ஸர் சின்னையாவின் மகன் தான் இதை ஒரு பத்திரிகையில் இருந்து எங்களுக்குப் படித்துக் காண்பித்தான். 'தேசமோ ஏழ்மைப்பட்ட தேசம். நோய்களுக்கோ கணக்கு வழக்கில்லை. இவ்விதமே செலவில்லாமல் மற்ற வைத்தியங்களும் ஏற்பட்டால், எவ்வளவு நன்ருக இருக்கும்!' என்ருன்.

'எல்லாம் நம்முடைய முன்னேர்கள் தெரியாமலா செய்தார்கள்? பழய வழக்கங்களில் எவ்வளவோ தத்துவங்கள் அடங்கித்தான் இருக்கின்றன. எதையும் கூலங்குஷமாய் விசாரிக்காமல், கர்னுடகம், அநாகரீகம் என்று முதலில் பழிப்பது; அப்புறம், அதில் அந்த நன்மை இருக்கு, இதில் இந்த உண்மை இருக்கு என்று புதிதாகக் கண்டுபிடிப்பது! இதுவே பிரபஞ்ச வாழ்க்கை' என்ருள் லேடி சின்னையா. மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

பேடண்டெக்ஸ்

இயற்கை உணர்ச்சியை அடக்குதலும், தேகத்தில் ஏற்படும் ஆசையைப் புறக்கணித்தலும சரியானவையல்ல. பேடண்டெக்ஸ் தான் மிகவும் பத்திரமான, சௌகரியமான, பலன்தரத் தக்க கர்ப்பத்தடை சாதனம். பேடண்டெக்ஸை சுலபமாகவும், விரைவிலும உபயோகிக்கலாம். கர்ப்பத்துக்கான மூல காரணமே அழிக்கப்படுகிறது. கர்ப்பமே ஏற்பட வழியில்லை. 25 வருஷப் பிரசித்தி பெற்றது. பேடண்டெக்ஸை ஆயிரக் கணக்கான ஸ்திரீகள் உபயோகித்திருக்கிருர்கள்; வைத்தியர்களின் பூரண ஆதரவு பெற்றது இதுவே.

டியூப் 1-க்கு ரூ. 3-8.

அப்பா & கம்பெனி, மதராஸ்.

மல்லர் பேடன் பிரதர்ஸ், பெங்களூர்.

தென்னிந்திய மொத்த ஏஜண்டுகள்: மால்கம் பிரதர்ஸ், பம்பாய்.

மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

போலிச்சரக்குகளை ஏற்கா தீர்கள். பிளிட் ஒன்றுதானிருக்கிறதென்பதை மறக்க வேண்டாம். கறுப்புப் பட்டையுடன் கூடிய சோல்ஜர் கொண்ட பிளிட்ட டின்னில் கிடைக்கும். கறை படாதது. இடுக்குகளில் ''பிளிட்'' தெளியுங்கள். ஊர்வன அதைத் தொட்டு மடிகின்றன.

ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி.டி கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

1 & 2 மேலக்கோபுர வீதி

மதுரையில்

நரசுஸ்

சுத்தமான

காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை

தேயிலை

முதலியவைகளை விற்பனை செய்ய
12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த சரக்கு! நயமான விலை!!

நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,

மதுரை, பிராஞ்சு:

H. O. SALEM.

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—



''குலாபி,'' அடையாறு.

பித்தாபுரம் மகாராஜா,

உங்கள் வைரங்கள் எனக்குப் பரம திருப்தியளித்திருக்கின்றன. அவை உயர்ரகமானவைமட்டுமென்றி, விலைகளும் மிதமானவை. உங்கள் பெருந்தன்மையையும், நேர்மையையும், யோக்கியத்தன்மையையும நான் மெச்சுகிறேன். உங்களுக்கு மென் மேலும் வெற்றியுண்டாகுக.

(ஒப்பம்) ஆர் வி. கே. எம். சூர்யராவ்,

சென்னை, பாபாலால் & கம்பெனிக்கு,

BAPALAL & Co

216. China Bazaar. MADRAS.

எனக்கு முடக்குவாதமில்லையென்று நிரூபிப்பதற்காகக் காலை என் பலங் கொண்டமட்டும் வீசி நீட்டினேன் பாவம்! அந்தச் சமயம் பார்த்து டாக் ர் தலையை முன்னே நீட்டினாபோலிருக்கிறது.

வைத்தியப் பரீக்ஷை

“பூரி”

இன்ஷ்யூர் செய்துகொள்ளு முன் வைத்தியப் பரீக்ஷையில் தேறியாகவேண்டுமென்பது எனக்குத் தெரியாததல்ல. ஆனல் ஏதோ பெயருக்குப் பரீக்ஷித்துப் பார்ப்பார்களென்று எண்ணியிருந்தேன். இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியாரின் வைத்தியப் பரீக்ஷை நமுனுவிலும் அவர்கள் கேட்டிருந்த கேள்விகளுக்கு மிக நன்ருகப் பதில் எழுதியிருந்தேன். தவிர நான் நல்ல தேகஸ்திதியுடனிருந்தேனுகையால் டக்டர் என் நாக்கைத் தொங்கவிடச் சொல்லுவார். நான் நாக்கை நீட்டியதும் பார்த்துவிட்டு, “உங்களுக்கென்ன ஸார்! உடம்பு தங்கமாயிருக்கிறதே. நான் கொஞ்சம் சந்தேகப்பட்டு நாக்கை நீட்டச் சொல்லியதற்கு மன்னிக்கவும்” என்று கேட்டுக் கொள்வார் என எதிர்பார்த்தேன்

குறிப்பிட்ட தினத்தன்று டாக்டர் பரீக்ஷைக்குப் போனேன். அவர் என்னுடைய தொழில், சொத்து விபரங்கள் முதலியன விசாரித்துவிட்டு “குடிப்பது கிடிப்பது ஒன்றுமில்லையே!” என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

நான் ‘ இல்லை” என்றேன்.

“உங்கள் குடும்பத்தில் தாயார் தகப்பனர் எல்லோரும் க்ஷேமந்தானே?” என்று டாக்டர் விசாரித்தார்.

“சௌக்கியந்தான்” என்று பதிலளித்தேன்.

“என்ன வயசு இருக்குமோ?”

“தகப்பனருக்கு எழுபத்தைந்து, தாயாருக்கு எழுபத்தொன்று” என்று சொன்னேன்.

அவர் நம்முடைய குடும்பத்தைப்பற்றி இவ்வளவு கவலையாய் விசாரிக்கிருரே, நாமும் மரியாதையை உத்தேசித்து அவர் குடும்பத்தைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்றெண்ணி “உங்கள் தாயார் தகப்பனர் எல்லாரும் சௌக்கியந்தானே?” என்று கேட்டேன்.

டாக்டர் என்னை விழித்துப் பார்த்தார். பிறகுதான் அவர் என் குடும்பத்தினர் யாரும் அற்பாயுளாக இல்லை யென்று தெரிந்து கொள்வதற்காகவே பெற்ரோர்களைப் பற்றி விசாரித்தாரென்று ஊகித்துக் கொண்டேன்.

டாக்டர் பல கேள்விகள் கேட்டு விட்டுக் கடைசியில் “இங்கே வாரும் உன் மார்பைப் பரீக்ஷிக்கிறேன்” என்ருர்.

அவர் அப்படிக் கேட்பாரென்று எனக்குத் தெரியும். ஸ்பெயின் கலகம், திருச்சிஞப்பள்ளி முனிசிபல் தேர்தல் முதலிய விஷயங்களைப்பற்றிப் பேச்சுக் கொடுத்து மார்பைப் பரீக்ஷிப்பதை மறக்கடிக்க முயன்றேன். ஆனல் அந்தப் பொல்லாத டாக்டர் விடவில்லை. “ஷர்ட்டைத் தூக்கும்” என்ருர்.

சட்டையைத் தூக்கியதும் விரலை மடித்துக்கொண்டு மார்பில் ‘டொக்’ ‘டொக்’ என்று தட்டிப் பார்த்தார். அவர் முகத்தைக் கவனித்ததில் திருப்தியடைந்தவர் போல் காணப்பட்டார்.

பிறகு வேறு இரண்டு மூன்று இடங்களில் தட்டிப் பார்த்தார். சரியான பதில் வரவில்லை போலிருக்கிறது. மறுபடியும் பலமாகத் தட்டினர். நான் வலி தாங்காமல் “ஓ மார்பே! டாக்டர் தட்டுவது காது கேட்கவில்லையா? உடனே பதிற் சொல்லுகிறதுதானே!” என்று முறையிட்டேன்.

உடனே டாக்டர் தட்டுவதை நிறுத்தினர். உள்ளேயிருந்து பதில் வந்திருக்கும் போலிருக்கிறது.

பிறகு ஸ்டெதாஸ்கோப்பை எடுத்து மாட்டிக்கொண்டு மார்பில்வைத்துப்பரீக்ஷித்தார். அப்பொழுது அவர் கழுத்து என் கைக்கு வாஹாகக் குனிந்திருப்பதைப் பார்த்தபோது நான் எங்கே ஒரு கொலைகாரனுகப் போய்விடுவேனே என்று பயமாயிருந்தது.

டாக்டர் ஐந்து நிமிஷம் வரையில் ஸ்டெதாஸ்கோப்பை எடுக்கவில்லை. நான் திகிலடைந்து, “ஏதாவது ஆபத்தா?” என்று கேட்டேன்.

“பேசாதேயும்! சாதாரணமாக மூச்சு விடுவதுபோல் விடும்” என்ருர் டாக்டர்.

“சரிதான் மூச்சு சரியாய்ப் போகவில்லை போலிருக்கிறது. இன்றுடன் தொலைந்தோம்” என்று எண்ணிக்கொண்டே அவர் சொன்னபடி மூச்சு விட்டேன்.

டாக்டர் பிறகு என் முதுகுப்பக்கம் பாய்ந்து சென்று ஸ்டெதாஸ்கோப்பை வைத்துப் பார்த்தார். மார்புப் பக்கம் என்ன சொல்லுகிறதென்று அவர் ஒட்டுக் கேட்பது போலிருந்தது.

அந்தப் பரீக்ஷையானதும் மறுபடியும் என் முன் வந்து நின்றுகொண்டு “இருமும் பார்க்கலாம்” என்ருர். “எனக்கு இருமல் தொந்தரவே கிடையாது ஸார்” என்றேன்.

“அதற்காகக் கேட்கவில்லை இருமுவதுபோல் சப்தம்

எதிர்கால சோதிடம்.

ஒரு வருஷத்திற்கு வாரப் பலன் எழுத ரூ. 4. மாதவாரி பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட் பிரகாசர் சோதிடாலயம்.
(சு) புதுச்சேரி.

கவலைவேண்டாம்.

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்லமருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தெரிவிப்போம்

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி, S I R

Tele:—"SIMILICURE" Box 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

ஜகபபிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்

நெ. 1. மணிமார்க் பட்டணம் மூக்குத்தூளை

உபயோகியுங்கள்.

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—

விலாசம்:- ஆர். முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்

செய்யும்'' என்று உத்தரவிட்டார்.

''லொக்! லொக்''

''இன்னும்.''

''லொக்! லொக்!! லொக்!!!''

''இன்னும் ஒருதரம்''

இருமலைக் கேட்பதில் அவருக்கு ரொம்ப ஆசைபோலிருக்கிறதென்றெண்ணி என்மட்டில் இருமிக்கொண்டேயிருந்தேன். அவருக்குத் திருப்தியாகும் வரை இருமலைக் கேட்டுவிட்டுப் பிறகுதான் ஸ்டெதாஸ்கோப்பைக் கீழே வைத்தார்.

வைத்ததும் என்னை ஒருதரம் மேலும் கீழும் பார்த்தார். நான் பீதியடைந்து ''டாக்டர் ஸார்! நான் பிள்ளை குட்டிக்காரன். தயவு செய்து முதலிலேயே விஷயத்தைச் சொல்லிவிடுங்கள். எனக்கு ஒரே ஒரு வாரம் டயம் கொடுங்கள். நான் அதற்குள் எல்லா ஏற்பாடும் செய்துவிட்டுத் தயாராயிருக்கிறேன்'' என்று கெஞ்சிக்கேட்டேன்.

டாக்டர் ஒரு தினுஸாகச் சிரித்துக்கொண்டு என் கையைப்பிடித்து அமிழ்த்தினர். அவருக்கே துக்கம்அடைத்துக் கொண்டு பேச முடியவில்லை போல் தோன்றியது. அவர் கைண்டக் கெட்டியாகப் பிடித்தார். நான் திமிறி இழுத்துக் கொண்டு ''என்ன டாக்டர்! ீங்கள் எல்லாம்கூட இப்படி வுதைரியப்படலாமா? மனுஷ்ன் என்று பிறந்தால் பிறகு ஒரு நாள் போக வேண்டியது தானே. அதற்காக வருத்தப்படாதேயும்'' என்று சமாதானப்படுத்தினேன். டாக்டர் திற் சொல்லியதிலிருந்து ான் அவர் வருத்தப்பட்டு ன் கையைப் பிடித்துக் காள்ளவில்லையென்றும்நாடிப் ரீக்ஷை பார்த்தாரென்றும் தரிய வந்தது.

நான் அவரிடம் விடை பெற்க்கொண்டு போவதற்குக் ாம்பினேன். டாக்டர் மிக ம் சாவதானமாக ''இன்னும் ரண்டு அயிட்டம் பாக்கி ருக்கிறது. இந்த நாற்காலி ் கொஞ்சம் உட்காருங்கள்'' ன்று சொல்லி ஒரு நாற்காலி பச் சுட்டிக் காண்பித்தார். தெய்வமேயென்று அதில் ட்கார்ந்தேன். ''உமது குடும் ்தில் யாருக்காவது முடக்கு தம் உண்டா? நீர் ஒருமாதி ாக நடப்பதுபோல் தோன் .து'' என்று கேட்டார்.

எனக்குப் பிரமாதமாகக் ாபம் வந்துவிட்டது. வந்த ாபத்தில் பல்லைக் கடித்துக் ாண்டு ''இல்லை'' என்றேன் 'முழங்காலை நீட்டும் பார்க் ்ம்'' என்று சொல்லி டாக் கீழே குந்திக்கொண்டு று தூரத்தல் உட்கார்ந் ர்.

எனக்கு முடக்கு வாதமில்லை ன்று நிரூபிப்பதற்காகக் ல் என் பலங்கொண்ட மட் வீசி நீட்டினேன். பாவம்! தச் சமயம் பார்த்து டாக்டர் தலையை முன்னே நீட்டினர் போலிருக்கிறது. அவருக்கு விழுந்த உதையில் எனக்கு முடக்குவாதம் கொஞ்சம் கூட இல்லையென்று நன்ருய்த் தெரிந்திருக்கும்.

நான் இந்த எதிர்பாராத சம்பவத்துக்கு என் மனவருத்தத்தைத் தெரிவித்துவிட்டு ''அடுத்த அயிட்டம் என்ன ஸார்! முழங்கையைப் பரீக்ஷிக்கப் போகிறீர்களாக்கும்'' என்று கேட்டுக்கொண்டே ஷர்ட்டை மடக்கி முழங் கையை நீட்டத் தயாரானேன்.

''நீங்கள் போகலாம்! நான் நமூனாவைப் பூர்த்திசெய்து கொள்கிறேன்'' என்ருர் டாக்டர்.

உத்தரவாதமான அசல் சரக்கு
சிறிய, பெரிய, பல அளவு
டின்களிற்கிடைக்கும்
P.K. வரதாச்சாரி கம்பெனி
ஜம்மலமடுகு கடப்பை ஜில்லா

வெண் குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும் எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா




ஜககோர்ட் ஜட்ஜ்களாலும் ஆங்கிலேயர்களாலும் ஜமீந்தார்களாலும் உயர்தர உத்தியோகஸ்தர்களாலும் பிரபல தனவைசியர்களாலும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று கவர்ன்மெண்டு 26 ஜில்லாக்களுக்கும் போர்டு மூலமாய் சப்ளை செய்து கொண்டு வரப்பட்ட உறுதியான இரும்புப் பெட்டிகளும் நயமான இரும்பு பீரோக்களும் எங்களிடம் சரஸமான விலைக்குகிடைக்கும்.

ஸ்தாபிதம்
1885.

பழ. மு. முத்தய்யா செட்டியார் & ஸன்ஸ்,
இரும்பு பெட்டி வியாபாரம்,
7, திருவொற்றியூர் ஐரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்.
பிராஞ்சு ஆபீஸ்,—1/135. பிராட்வே, மதராஸ்.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து

பணத்தை மீதி செய்யலாம்!

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு. இத்துடன் வேதுமதிகள்:—1 பாக்கெட் ஆல்கனட் ரூட் (எண்ணெய்க்கு கலர் கொடுக்க) வாசனை திரவியம் தயாரிக்கும் விதம் 1936ம் வருஷத்திய ஒரு பாக்கட் காலண்டர் இவைகள் தரப்படும்.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

சாம்பாக்	ரூ. 2-0	போகுல்	ரூ. 1-8
காஷ்	,, 2-0	ஹீனு	,, 1-8
கொயிரோ	,, 2-0	வல்லி	,, 1-0
மஸ்க்	,, 2-0	தாமரை	,, 1-0
சதம்பம்	,, 1-8	கோலாநீ	,, 1-0
மல்லிகை	,, 1-8	மோடியா	,, 1-0
ரோஸ்	,, 1-8	ஸ்வீட்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டல்களாக கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி செலவு வேறு.

S. PAUL & Co, Perfumers
(Dept. S. W.) 4, Hospital Street,
Dharamtola, Calcutta.

இனம்! இனம்!! இனம்!!!

விலையின்றி பெற்றுக்கொள்ளுங்கள்

'ருவ்ஸ் டெவலப்பர்'

தேகமுழுவதையும் விருத்திசெய்யக்கூடிய ஓர் உத்தம சாஸ்திரீக உபகரணம். பன்னிரண்டு வயது முதல் எழுபதுவரை யாவருக்கும் உபயோகிக்கக்கூடியது.



ஆரோக்கியமும் பலமும் அதிகரிப்பதற்காக பிரப். எம், வி. கிருஷ்ண ராவ் அதனமாய்க் கண்டுபிடித்த இவ்வுபகரணம் நெடுங்கால உபயோகத்திற்காக, உத்தம இந்திய ரப்பரினால் செய்யப்பட்டுளது எந்த அவயவத்தையும் பழுதுபடுத்தாமல் மிக பலவீன மனிதனுக்கும், ஆரோக்கியமும் பலமும் அளிக்கக் கூடியதாக உத்தம சாஸ்திரீகமுறையில் நிருமிதமாயிருக்கின்றது.

இப்போதே எழுதுங்கள்

உங்கள் விலாசத்தை உடனே அனுப்புவீர்களானல் ஓர் ருவ்ஸ் டெவலப்பர் விலை இன்றி பெற்றுக் கொள்ளலாம்.

நம் நாட்டு மக்களின் தேகாபிவிருத்தியை மட்டும் நோக்கமாகக் கொண்டு, சிறு புஸ்தகங்களும், பல தேகாப்பியாச உபகரணங்களும் விலை இன்றி பரப்பி வருகிற எங்கள் சங்கம், இப்போது மிக்க சந்தோஷத்துடன் ஆயிரக்கணக்கான றவ்ஸ் டெவலப்பர்களை இனமாக கொடுக்கின்றது. ஆகையால் ஓர் போஸ்ட் கார்டில் இப்போதே உங்கள் அபேக்ஷையை அனுப்பி ஓர் டெவலப்பரை பெற்றுக் கொள்வீர்கள்.

பாரத ஆரோக்கிய விருத்திமண்டபம்,
திருவனந்தபுரம், (தென் இந்தியா.)

நோயற்ற வாழ்வு

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

திரங்கொண்டு மிகவும் க்ஷோபமடைந்து, இசிவுகளைப் பெறுவான். அதன் பிறகு பளபளப்பான கண்ணாடி, பிரகாசமான வெளிச்சம் இவை முதலியவைகளும், ஸாதாரணமான காற்றோட்டமுங் கூட தாங்க வியலாத மனக்கிளர்ச்சியைத் தரக் காரணமாகும். ஆகவே அவன் ஸங்கடங்களைத் தாங்க வியலாது அடிக்கடியும் எழுந்தோட முயலுவதும், இடைவிடா தொழுகும் உமிழ் நீரைக் கக்க முயன்று வாயை இசித்தவண்ணம் ஒருவாறு சப்தித்து வருவதும் அவனையறியாமலே ஏற்படுவதால், அவன் நாயைப்போல் இங்குமங்கும் ஓடுவதாகவும், அனைவரையும் வாயைத் திறந்து நாயைப்போல் கடிக்க முயலுவதாகவும் பார்க்கும் ஜனங்கள் பிரமங்கொண்டு கூறுவது வழக்கம். பிறகு இந் நோயாளியின் கண்ணெதிரில் தண்ணீர் மாத்திரமல்ல, பளபளத்தளந்தவஸ்துவையாவது வீசுவதும், ஏதேனும் திரவ வஸ்துவின் பெயரைக் கூறுவதுங் கூட அவனுக்கு க்ஷோபத்தையும் வலிப்புகளையும் உண்டுபண்ணுவதற்குப் போதுமானவையாம். இவ்வித நிலைமை யேற்பட்டதும், வெகு ஜாக்கிரதையாகப் பிணியாளியைப் பரிபாலித்து வந்தாலும், ஐந்து அல்லது ஆறு நாட்கள் வரையில் உயிர் நீங்காது வைத்திருக்கக் கூடும். ஆனால் மனோ-தேஹ க்ஷோபங்களினாலும் தொண்டையடைப்பாலும், விஷவேகம் தாங்காமையாலும் ஸாதாரணமாய் இரண்டாவது அல்லது மூன்றாவது தினத்தில் மரணம் நேரிடுவது வழக்கம்.

விஷம் ஏறாது தடுத்தல்.

இத்தேசத்து வைத்திய முறையிலும், மேனாட்டு முறையிலும், இவ்வியாதியின் பரிஹாரத்திற்காகப் பல வேறு முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் இரண்டொன்றே பலன்தரத்தக்கவை. இதில் வெறிநாய் கடித்தவுடனே விஷம் உடலிற் சேராதபடி செய்யவேண்டிய சிகித்ஸை ஒன்று. அப்பால் விஷம் தேஹத்திற்பற்றியபிறகு அதனாலான வியாதிக்குப் பரிஹாரமாகச் செய்யும் சிகித்ஸை மற்றொன்று; ஆக பொதுவில் இரண்டுவித சிகித்ஸைகளைப்பற்றியும் ஸாமான்ய முறைகள் அனைவருக்கும் தெரிந்திருப்பது நலம். வெறி நாய் தீண்டியவுடனே, தாமதம் செய்யாமல் அவ்விடத்தை வெந்நீரால் நன்றாக அலம்பிவிடவேண்டும் அதைவிட முக்கியமானது, கடியுண்ட இடத்திற்குச் சற்று மேலே மெல்லிய வஸ்திரத்தினாலாவது கயிற்றாலாவது சுற்றி அழுந்தக் கட்டிவிட்டு, விஷநீர் மேலே ஏறாதபடிச் செய்வதேயாம். பிறகு கழுவிய கடிவாயைச் சங்கத்திராவகத்தினாலாவது வேறு கந்தகத்திராவகம் முதலியதாலாவது தாமதம் செய்யாமல் சுட்டுக் கொப்புளிக்கச் செய்துவிடவேண்டும் இதைவிட கரண்டிக் காம்பையாவது வேறு உலோஹத்தையாவது நெருப்பிற் காய்ச்சி யெடுத்து, அதனால் கடிவாயைச் சுட்டுவிடுவது மேலானமுறை. வேப்பிலையைத் துவையல்போல் அரைத்து, கடிவாயைச் சுற்றிலும் கனமாகச் சுவர்போல் வைத்து வரம்பு கட்டி, அதன் நடுவில் கடிவாயின்மேல் சிறிது ஏதேனும் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றி, அவ்விடத்தைக் கொப்புளிக்கச் செய்துவிட்டுப் பிறகு சில நிமிஷங்கள் சென்றதும், அவ்வேப்பிலைக் கல்கத்தையே அக் கொப்புளித்த இடத்தின் மேல் மூடி, மேலே வெற்றிலைகளால் சுற்றி, வஸ்திரத் துண்டினால் இழுத்துக் கட்டிவிடவும். இவ்வனைத்தினும் வெகு சுலபமாய் அனைவராலும் செய்யக்கூடியது கொடிவேலி என்கிற சித்திர மூலத்தை (பசுமையாயிருப்பது மேலானது. உலர்ந்ததாயிருந்தால் சிறிது தண்ணீர் விட்டு) அரைத்து கடிவாயின்மேல் கனமாகப் பூசிக் கட்டிவிடவேண்டும். இக் கொடிய வேலிக்கல்கம் நாலைந்து மணி நேரம் கடிவாயில் இருந்தால் அவ்விடத்தைக் கொப்புளிக்கச்செய்து, விஷத்தை அழித்து விடும். இந்த லாலா விஷம் ஸர்ப்பவிஷம் முதலியதைப் போல் அவ்வளவு வேகமாக ஏறுவதில்லையாகையால், கடியுண்ட சிறிது நேரம் கழித்துக் கூட முற்கூறியவாறு கொப்புளிக்கச் செய்யும் தாஹ சிகித்ஸையைச் செயதுவிடலாம் எதற்கும் தகுந்த கைதேர்ந்த வைத்திய உதவியைத் தேடுவதற்கு முன்பு, ஸாத்யமானவரையில் ஜடிதியில் கடியுண்ட இடத்தை வெந்நீரால் நன்றாகக் கழுவுவதிலும், கடிவாய்க்கு மேலே நன்றாக இழுத்துக் கட்டுவதிலும் பரபரப்போடும் பகுத்தறிவோடும் கவனம் செலுத்துவது நலம். விஷப் பற்றுதலால் வாத தோஷம் கோளாறடைந்து நாடி நரம்புகள் மூலமாய் மூளையைப் போய்ச் சேர்ந்து விட்டால், பிறகு இவ்விஷத்தாலான வியாதிக்கு நிவாரணம் அரிதினுமரிது.

பாஸ்சர் ஸ்தாபநம்

அலர்க்க விஷம் அங்கங்களிற் பரவி குக்குரஜ்வரம் என்னும் வியாதி ஏற்பட்டுவிட்டால், அதற்குப் பரிஹாரம் செய்வது எளிதல்ல. பிரான்ஸிலிருந்த மிகப் பிரபல இரஸாயந ஆராய்ச்சிக்காரரான லூயிஸ் பாஸ்சர் என்கிற சாஸ்திரஞ்ஞர் இப்பொல்லா வியாதியால்

வருந்துபவருக்குப் பரிஹார முறையொன்றைக் கண்டுபிடித்து, சுமார் 45-வருஷங்களுக்கு முன் பாரிஸ் நகரத்தில் 'பாஸ்சர் இன்ஸ்டிட்யூட்' என்கிற ஆராய்ச்சிக் கழகத்துடன் கூடிய நாய்கடி வைத்திய சாலையையும் ஸ்தாபித்து, உலக முழுதும் பெரும் புகழ் பெற்றார். சென்னை மாகாணத்திலிருப்பவருடைய ஸௌகாயத்திற்காக இராஜாங்கத்தார் கூனூரில் அவ்வித நாய்கடி வைத்திய சாலை ஒன்றை ஏற்படுத்தியிருப்பதுடன், தனக்கு வெறி நாய் கடித்ததாக எவரேனும் தான் இருக்குமிடத்திற்குச் சமீபத்திலுள்ள தகுந்த கவர்ன்மெண்டு அதிகாரியினிடம் அறிவித்துக் கேட்டுக்கொண்டால், தாமதமில்லாமல் அவ்வதிகாரி அப்பிணியாளியைச் செலவின்றி கூனூர் வைத்தியசாலைக்கு அனுப்பி ஏற்ற சிகித்ஸைகளைப் பெற அனுகூலம் செய்திருக்கிறார்கள். ஆனால் பாஸ்சர் சிகி

ஸாமவேதம்.

பரிபூரண தமிழ் மொழி பெயர்ப்பு வேதோபநிஷத் ஆசிரியர் ஜம்புநாதர் எழுதியது. அடக்க விலை பதிப்பு. விலை ரூ. 1 அணா 8.

JAMBUNATHAN,
Suk Nivas, Khar, Bombay 21.

த்ஸா முறை எல்லாப் பிணியாளிகளுக்கும் பலனளிக்கக் கூடியதா யில்லையென்று மேனாட்டு வைத்தியப் பிரமுகர்களே அபிப்பிராயப் படுவதால், நாம் முற்றிலும் அவ் வைத்தியத்தை நம்பியிருக்கக் கூடவில்லை யென்று பொதுவாக இவ்விஷய மறிந்தவர்களுக்குள் ஓர் அபிப்பிராயம் இருந்து வருகிறது.

சிகித்ஸை

உடலில் அலர்க்கவிஷவியாதி உண்டாய்விட்ட பிறகு, அப் பிணியாளியை அதிக வெளிச்சமில்லாத குளிர்ச்சியான இடத்தில் (ஜனநடமாட்ட மில்லாத அறையா யிருப்பது நலம்) அமைதியாகப் படுத்திருக்க

செய்யவேண்டும். மனக்களிப்புடன் உத்ஸாஹமாயிருக்க அவனுக்கு எல்லாச் சௌகர்யங்களையும் செய்து வைப்பது அவசியம். எதிரில் கண்ணாடிகளையோ, பளப்பளப்பான வேறு வஸ்துக்களையோ, ஜலத்தையோ வைத்திருப்பதும் கொண்டு போவதும் அவனுக்கு க்ஷோபமுண்டாக்கக் காரணமாகிறபடியால் அவ்விஷயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இப்பிணியாளியின் வாயில் அடிக்கடியும் ஊறும் உமிழ்நீர் கொடிய விஷ குணமுள்ளதாகையால், அருகிலிருந்து உபசாரம் செய்பவர் அதைச் சுத்தம் செய்வதிலும் அப்புறப்படுத்துவதிலும் மிக மிக ஜாக்கிரதையா யிருந்து வர வேண்டும். உப்பு நீராலும் காரமான சவர்க்காரத்தினாலும் இவர்கள் தம் கைகால்களைச் சுத்தம் செய்து கொள்ளவேண்டியதோடு, தம் துணி மணி பாத்திரங்களைக் கொதிநீராலும் அப்போதைக்கப்போது நன்றாகக் கழுவி விடவேண்டும் இப்பிணியாளிக்கு வாததோஷத்தைத் தணிக்கவும் நரம்பு மண்டலம்-மூளை இவற்றைக் குளிரச் செய்யவும் ஸஞ்ஜீவிநீ குடிகா என்கிற மாத்திரையை வியாதியின் நிலைமைக்கேற்றவாறு வேளைக்கு இரண்டு மூன்று மாத்திரை வீதம் ஒரு யாமத்திற்கு ஒரு முறை கொடுத்து வரலாம். இதற்கு அனுமானமாக பிராஹ்மீ ரஸாயநம் என்கிற மருந்தையும் அரை அல்லது ஓர் அவுன்ஸ் அளவாகக் கொடுப்பது இன்னும் பிரசஸ்தமானது. விஷஹாரமாகவும், வாததோஷஹாரமாகவும், நரம்பு மண்டலத்திற்கு விசேஷ பலகாரமாகவும் உள்ள சிறந்த ஔஷதம் ஸ்வர்ண பஸ்மமாகையால், வேளைக்கு இரண்டு மூன்று குன்றுமணி யளவாக (சிலருக்கு ஏழெட்டு குன்றுமணி யெடைவரையிலுங்கூட) நாளொன்றுக்கு நாலைந்து தடவை வீதம் கொடுத்து வருவது சில ஸமயம் அதிக பலன் தருவதாயிருக்கும். இப்பரிஹார முறைகள் யாவும் விஷம் தலைக்கேறி வியாதி கடுமையாவதற்கு முன் செய்தால்தான் திருப்திகரமாய் பலனளிக்கக்கூடியனவாயிருக்கும்.

துஷ்ட நாய்களை ஒழித்தல்.

நாய் வைத்து வளர்ப்பவர்கள் அவற்றைச் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டும். இதர நாய்களோடு அவற்றைச் சேரவிடலாகாது. நாடோடியான நாய்களை ஒழித்துவிட அதிகாரிகள் அப்போதைக்கப்போது ஸகல ஏற்பாடுகளையும் ஒழுங்காக நிறைவேற்றுவதற்கு சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதோடு, பொதுஜனங்களும் அவ்விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும். விஷ ஜ்வரத்தைப் பரப்பும் ஈக்களும் கொசுக்களும் ஜன ஸமூஹத்திற்கு எவ்வளவு தீங்கிழைக்கின்றனவோ அவ்வளவு தீங்கு நாடோடி நாய்களாலும் நாட்டு ஜனங்களுக்கு உண்டாகுமென்பதை உணர்ந்துள்ள ஜனங்கள் நம்மவரிற் சிறுபான்மையரே. உதாரணமாக தெருக்களில் திரிந்தோடும் நாய்கள் இங்கிலாந்தில் இல்லையென்றே சொல்லலாம். ஆகவே, அந்நாட்டில் அலர்க்க விஷ வியாதியும் அரிதாய்விட்டது. வியாதி கொண்ட அல்லது வீதியில் திரியும் நாய்களை ஒழிப்பது இவ்வியாதியைத் தடுக்கும் உபாயங்களுள் முதன்மையானது.

மலேரியாவுக்குப்பிறகு
புதிய ஆரோக்கியம்பெற
வைத்தியர்கள்
சிபார்சு செய்வது
ஸனடோஜன்

அதிக ஆயாஸத்தைக் கொடுக்கும் நோய்களுக்கு ஆளாகி, அவஸ்தைப்பட்ட பிறகு வலுவு பெறுவதற்கு ஸனடோஜனைவிடச் சிறந்த டானிக் ஆகாரம் வேறில்லை என்பது வைத்தியர்களுக்குத் தெரியும். இக்காரணத்தைக்கொண்டே அவர்கள், மலேரியாவுக்குப் பிறகு ஸனடோஜனைச் சாப்பிடும்படி சிபார்சு செய்கிறார்கள். ஸனடோஜன் மீண்டும் இரத்த புஷ்டியளிக்கிறது; தேக பலவீனத்தைப் போக்குகிறது. வெகுகாலமாக உடல் மெலிந்தும், களைப்பு மிகுந்தும் இருப்பவர்கள் வெகு சீக்கிரத்தில் புதிய ஊக்கம் பெறுவர்.

ஸனடோஜனைச் சாப்பிட்டு விரைவில் பூரண ஆரோக்கியம் பெறுவதை விட்டுவிட்டு, வேறு எவ்வெவற்றையோ சாப்பிட்டு மெதுவாகப் பலனடைவானேன்? மீண்டும் வலுவடைய முடிவு செய்யுங்கள்—இன்றே ஸனடோஜன் உட்கொள்ளத் தொடங்குங்கள்.

கல்கத்தாவைச் சேர்ந்த பிரஸித்தி பெற்ற வைத்தியரொருவர் எழுதுவதாவது:—

"நோய்களால் தேக மெலிவடைந்ததற்குப் பிறகு நான் ஸனடோஜனை ஏராளமாக உபயோகித்துச் சிறந்த பலன்களை யனுபவித்து, திருப்தியடைந்தேன்."

டாக்டர் எச். பி. ராய். எல். எம். பி. சி. பி., கூல்னா, எழுதுவதாவது:—

"முக்கியமாக மலேரியாவுக்கு ஸனடோஜன் விசேஷ பலன் தந்திருக்கிறது."

பிரிட்டிஷ் இந்தியாவில் 30 வருஷ காலம் வசித்துவந்த பிரசித்திபெற்ற ஆங்கில வைத்தியரொருவர் பின் வருமாறு எழுதுகிறார்:—

"மலேரியா அல்லது சீதபேதிக்குப் பிறகு ஏற்படும் கடுமையான நிலைமையை அகற்றி, ஆரோக்கியமும், வலுவு மூட்டுவதில் ஸனடோஜன் எப்பொழுதும் அனுகூலமளித்திருக்கிறது."

SANATOGEN

உண்மையான டானிக் ஆகாரம்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

ஸனடோஜன் கைபடாமல் தயாரிக்கப்படுவது—மிருகக் கொழுப்பற்றது.

ஜப்பானின் வியாபார வெற்றி

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய காரணம். வியாபார நிமித்தம் கப்பல் கட்டுவதற்கு வருஷா வருஷம் 10,00,000 ரூபாய் அவர்களின் அரசாங்கம் கொடுக்கின்றது. ஆனால் இந்தியாவிலோ இந்தியக் கப்பல் கம்பனிகளுக்கு ஒருவிதமான வசதிகளும் கிடைப்பதில்லை. புதிதாக ஜப்பானியர்கள் ஆரம்பித்திருக்கும் மோட்டார் தொழிலிற்கு அவர்களின் அரசாங்கம் மிகவும் ஆதரவு அளிக்கிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது வியாபாரம் விருத்தி அடைய வேண்டுமென்பது. இரண்டாவது, இப்போது ஜப்பானியர்கள் தம்முடைய இராணுவப் படையை அதிகரித்துக்கொண்டு வருவதால், சண்டை காலத்தில் கவச வண்டிகள் செய்வதற்கு மிகவும் உதவியாய் இருக்கும் என்பது. இரும்புத் தொழிற்சாலைகள் இதுவரையிலும் அரசாங்க ஆதரவின்கீழ் இருந்தன. ஆனால், தற்காலத்தில் அவைகள் மிகவும் வலுத்து நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டதால், அவ்வளவு ஆதரவு இப்போது அளிப்பதில்லை.

பணவுதவியைத்தவிர வேறு விதங்களிலும் அவர்களது அரசாங்கம் உதவி புரிகிறது. பாதுகாப்பு வரியினால், தங்கள் தேசத்திலேயே கிடைக்கக்கூடிய சாமான்கள், வெளிநாட்டில் இருந்துவந்து வியாபாரமாகாதவாறு தடுக்கின்றது. அரசாங்கம் தம்முடைய ஸ்டேட் ரெயில்வேயிக்கு வேண்டிய சாமான்களும், இதர சாமான்களும், மொத்தம் சுமார் 80,00,00,000 ரூபாய்க்கு வருஷா வருஷம் ஜப்பானியக் கம்பனிகளிடமிருந்தே வாங்குகிறது. ஜப்பானில் பயிர் இடுவதற்காக அதிக நிலம் கிடையாது. கைத்தொழில், விவசாயத்தைவிட விருத்தியடைய வேண்டுமென்று, விவசாயத்தின்மீது அதிக வரியும், தொழிற்சாலைகளின் மீது குறைந்த வரியும் விதிக்கின்றது. இவ்வளவு சாதனங்கள் அவர்களது துரைத்தனத்தார் செய்யும்போது அவர்களின் வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தி அடைவது ஒரு ஆச்சரியமா?

வீட்டில் உட்கார்ந்துகொண்டே மிகவும் ஊக்கமாக வேலைசெய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சில கைத்தொழிற் சாலைகளைக் கவனிப்போம்.

சீட்டித் துணி

மின்சாரத்தினால் ஓட்டப்படும் 6, 7 தறிகளை சிலர் வீட்டில் வைத்து இருக்கிறார்கள். அதில் வேலை செய்வதற்கு வெளியிலிருந்து கூலிக்கு ஒருவரையும் அழைத்துக் கொள்வது இல்லை. புருஷனும் அவன் மனைவியும், உறவினர்களும் தான், காலை 6-மணிமுதல் மாலை 7-மணிவரையில் வேலை செய்கிறார்கள். நடுவில் மத்தியானம் ஒரு மணிநேரம் இளைப்பாறுகிறார்கள். மாசத்திற்கு 2 நாள் வேலையை நிறுத்தி ஓய்வு எடுத்துக்கொள்ளுறார்கள். தினம் சுமார் 300 கஜம். துணி, வெவ்வேறு கலர்களில் தயார் செய்யப்படுகின்றது. இம்மாதிரி 30, 40 வீடுகளில் செய்யப்படும் துணிகளை ஒரு பணக்காரன் மொத்தமாக வாங்கித் தம் பேரை அதில் அச்சடித்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிடுகிறான். இம்மாதிரி வேலை செய்யும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் 100 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரையிலும் மாத வருமானம் கிடைக்கின்றது.

எல்லா ஜப்பானியத் துணிகளும் இம்மாதிரியே செய்யப்படுகின்றன என்று நான் சொல்லவில்லை. 500, 800 பேர்கள் வேலை செய்யும் ஆலைகளும் அநேகம் இருக்கின்றன. ஆனால், இந்தக் கைத்தறி வேலை அவர்களின் ஊக்கத்தை நன்கு வெளிக்காட்டுகிறது.

பென்சில் வியாபாரம்

ஜப்பானிலிருந்து வரும்பென்சில்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்று கவனிப்போம். டோகியோவில் மிகவும் பெரிதான ஒரு பென்சில் சாலை இருக்கிறது. ஆனால் அதில் வேலை செய்யும் ஆட்களோ ஆண்பெண்களாகச் சேர்ந்து மொத்தம் 40பேர்கள் தான். இங்கு இவர்கள் செய்யும் வேலை என்னவென்றால் பென்சிலுக்கு மேலே வர்ணம் பூசி, பாலிஷ்கொடுத்து பெயர் அச்சடிப்பதுதான். பாக்கி வேலை எல்லாம் வெளியே வீடுகளில் செய்யப்படுகின்றன. தொழிற்சாலையில் வேலை செய்

எது?
தமிழ் நாட்டில் குறைந்த சந்தாவில் அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப்பத்திரிகை.
"சித்தன்"
ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது.
வருட சந்தா அணா (8) எட்டே; வெளி நாடு ரூ. 1.
மாதிரிப் பிரதி இனாம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு.
விபரங்களுக்கு எழுதவும். மானேஜர் "சித்தன்" பழனி, S. I.

டாக்டர் ஜம்மி வெங்கடராமணய்யாவின்
லிவர்க்யூர்
குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.
அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது.
ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

செவிடு
"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இ[illegible] கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நி[illegible]தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்[illegible] முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டை[illegible] கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்[illegible]தலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அ[illegible]
MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P. O. Box 2186 Bombay.

பவர்களுக்குச் சுமார் 15 ரூபாயிலிருந்து 30 ரூபாய் வரையில் தான் சம்பளம்.

வடக்கு ஜப்பானில் மரமும், க்ராபைட்டும் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவ்விடத்தில் சுமார் 40 குடும்பங்கள், மரத்தைத் துண்டு துண்டாக வெட்டி அவைகளைச் சீவி, க்ராபைட்டை அடைத்து இந்த தொழிற்சாலைக்கு அனுப்புகிறார்கள். ஒவ்வொரு குடும்பமும் ஆண் பெண் உள்பட தினம் 10-மணி நேரம் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு குடும்பமும் மாதம் சுமார் 70 ரூபாய் சம்பாதிக்கிறது.

காரியாலயத்தில் பேர் அச்சானவுடன், அவைகள் மறுபடியும், சுற்றுப் பக்கங்களில் உள்ள சில குடும்பங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் அந்தப் பென்சில்களை டஜன்டஜனுக்க் கட்டி லேபில் ஒட்டி, ஏற்றுமதி செய்யத் தயாராகப் பாக் செய்து விடுகிறார்கள்.

இந்தக் காரியாலயம் சுமார் 6,00,000, க்ரோஸ் அதாவது 8,64,00,000 பென்சில்கள் வருஷாவருஷம் ஏற்றுமதி செய்கிறது. சுமார் 40 வெளி நாடுகள் இந்தக் காரியாலயத்திலிருந்து வாங்குவதாகத் தெரிகிறது. மொத்தமாக வாங்குபவர்களுக்கு டஜன் சுமார் 5 தம்பிடிக்கு விற்கிறார்கள். இவ்வளவு சரசமாகக் கிடைப்பதால் இது உபயோகமற்ற வஸ்துவாக இருக்கும் என்று ஊகித்துவிட வேண்டாம்.

இம்மாதிரி அனேக உதாரணங்கள் கொடுத்துக்கொண்டே போகலாம். மேலே கூறியவற்றிலிருந்து அவர்கள் வியாபாரத்துறையில் வெற்றி அடைவதின் காரணம் நன்கு புலப்படும் அவர்களுக்கிருக்கும் குணங்களான ஊக்கமும், அதிக லாபம் அடைய வேண்டும் என்னும் பேராசை இன்மையும், நம்மிடம் இருந்தாலும், அரசாங்கத்தாரின் உதவியின்றி நாம் முன்னுக்கு வர முடியாது. அவர்களுக்குக் கிடைக்கும் உதவியில் கால்வாசி நமக்குக் கிடைத்தாலும் போதும். நம்முடைய மில்களிலும்ஜப்பானியத்துணியை விட விலை சரசமாகத் துணி நெய்ய முடியும்.

சிவாஜி ஸ்டோர்ஸ்
12, அவனாசி ரோட்,
கோயமுத்தூர்.

TEA BEST & CHEAPEST
GIVE US A TRIAL & BE CONVINCED. LOOSE 56 & PACKETS 48 LBS PER BOX, FREE DELIVERY PER LB. LOOSE: O.P -/8/-, BROKEN -/7/-, DUST -/7/6. FLAVOURY DARJEELING BROKEN -/9/6, P.F. -/10/-. 1 LB LEAD PKT (LEAF): RED (DARJEELING) -/11/-, BLUE -/8/6. 1 LB YELLOW PAPER PACKETS: LEAF -/8/-, DUST -/8/6. DELEARS' REBATE 3 PIES PER LB. 24 LBS BOXES AVAILABLE WITHOUT REBATE. ADVANCE 25%.
G.T.CO. 185 MANICKTOLLA ST, CALCUTTA

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

நீளம் அடி	அகலம் அடி	உயரம் அடி	சாதா ரூ.	உயர்ந்தது ரூ.	மேலனது ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

ரூ. 100 இனம்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயஙகளில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.)Panchpota, BENGAL.

போலிகளைக் கண்டு உஷார்!!!

அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்
இந்திய திவ்யாமிர்தம்

அமிர்தாஞ்சனம்
டிப்போ

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

வைத்திய ரத்னம்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களால்
ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை.

இரண்டு பிரபல வைத்திய நூல்கள்.

1. சார்ங்கதர ஸம்ஹிதை

வைத்தியர்களுக்கும். எல்லாக் குடும்பங்களுக்கும் வெகுஉபயோகமானது. வைத்திய பரிபாஷைகள், எல்லா ரோகங்களுடையவும் விவரணம், சூர்ண - கஷாய- லேஹ்ய- தைல-கிருத -லேபந- பஸ்ம-ஸிந்தூராதி ஸகல முக்கியமான ஔஷத முறைகள், எல்லா வியாதிகளுக்கும் பலவித சிகித்ஸா முறைகள் ஆக எல்லாம் ஒழுங்காக விவரிக்கப்படுகின்றன. முகவுரை, உரை, விஷய அகராதி முதலியன்வை விஸ்தாரமானவை. 3 கண்டங்களும் 32அத்தியாயங்களும் அடங்கியது. 3-ம் பதிப்பு.

உயர்ந்த பைண்டு விலை ரூ. 5-4-0
2-ம் தரம் பைண்டு ,, ரூ. 4-4-0

2. இரஸரத்தின ஸமுச்சயம்

என்னும் சித்த ரஸாயன நூல் கந்தகம், தாளகம், இரஸம, பொன், வெள்ளி, அயம் முதலியவற்றை சுத்தி-பஸ்ம - ஸிந்தூராதிகளாகச்செய்யும் நூற்றுக்கணக்கான சிறந்த முறைகளும், புடபாகாதிகளுக்கான கருவிகளின்விவரணங்களும் அடங்கியது. முகவுரை, உரை, விஷயஅகராதி முதலியவை விஸ்தாரமானவை.

உயர்நத பைண்டு விலை ரூ. 4-8-0
2-ம் தரம் பைண்டு ,, ரூ. 3-8-0

இரண்டு பிரபல காவ்ய நூல்கள்.

1. காதம்பரி

1300-வருடங்களுக்கு முன் பட்டபாண மஹா கவி ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய அத்புத வசன காவ்யத்தின் மொழி பெயர்ப்பு. கதையின் வரலாறு ஆச்சர்யகரமானது. இந்தியாவின் பிராசீன நாகரீக மேன்மையை விளக்குவது. இரம்யமான எளிய வசன நடை. மஹா மேதாவிகளும் உவந்திடும் வர்ணனைகள் "காதம்பரியைப் படிக்க முயன்றால் இரவிகருக்கு உணவிலும் மனம் செல்லாது" என்பது வித்வான்களின் பழமொழி. காதம்பரியின் விமர்சமும் பிரயோஜனமும் முகவுரையாய் அமைக்கப்பட்டுள்ளது.

விலை ரூ. 1-8-0.

2. மேக ஸந்தேசம்

இந்தஅழகிய சிருங்கார காவ்யம் ஸம்ஸ்க்ருதத்தில மிகப் பிரவித்தமானது. காளிதாஸ மஹாகவியினுடையதென்றால் அதைப்பற்றி வேறு விவரணம் தேவையில்லை. ஒரு யக்ஷன் குபேர சாபத்தினால் தன் மனைவியை விட்டுப் பிரிந்து, பின்னர் அவன் அவளுக்குத்தூது செல்லும் விஷயம் வெகு அழகானது. வர்ணனைகளும் வசன நடையும் இனியவை. விஸ்தாரமான முகவுரை. விலை அணா 14.

ஒரே தடவையில் எந்த இரண்டு புஸ்தகங்கள் வாங்கினாலும் ரூபா 1-க்கு 2-அணா வீதம் குறைக்கப்படும். தபாற் செலவு முதலியது வேறு.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.



ஜலதோஷம்
ஆபத்தானது!
நாசித்துவாரங்களில் ஒரு சில துளிகள் விடுங்கள்.

Mistol

இரவிலும் காலையிலும் கடுமைநோயைத் தடுக்கும்.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]

குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.

குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானால்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.

Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD.

இந்திய ஸ்திரீகளின் பொறுப்பு

தமிழ் நாட்டிலுள்ள சகோதரிகளே !

குடும்பத்திலுள்ள பொறுப்புப் பூராவும் உங்களுக்குத்தான் அதிகமிருக்கிறது. சாதாரணமாக உங்கள் தகப்பனுருக்கோ, கணவன்மாருக்கோ, பிள்ளைக்கோ, வீட்டு வேலைகளைக் கவனிக்க அதிக அவகாசம் கிடையாது. ஒவ்வொருவரும் அவரவர் வேலைக்கேற்றவாறு தங்கள் முழுகவனத்தையும் தங்கள் வேலையில் செலுத்தவேண்டியிருக்கிறது. உதாரணமாக வியாபாரியைக் கவனிக்குமிடத்து அவன் வியாபாரத்தின்மேல் கண்ணும் கருத்துமாயிருந்து அதை அபிவிருத்தி செய்யவே முழுப் பொழுதையும் செலுத்த வேண்டி வருகிறது. வக்கீல்களோ தங்கள் கக்ஷிக்காரர்களுடன் அவர்களின் கக்ஷிக்கு ஆதாரமான சட்ட விவரங்களையும் ஆராய்வதிலும் பொழுதைச் செலவிடுகின்றனர். நிலச்சுவான்தாரோ தங்கள் குடியானவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து மகசூலை விருத்தி செய்யவே கருதுகின்றனர். தலைவர்களும், பத்திரிகாசிரியர்களும் பொது வாழ்வில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டி யிருக்கிறது. பொதுவாக வீட்டிற்குத் தேவையான சாமான்களைத் தெரிந்தெடுத்து வாங்கும் பொறுப்பு உங்களுடையதாகும். நீங்கள் வாங்கும் சரக்குகள் உயர் ரகமாக இருத்தல் அவசியமாகும். உங்கள் தேவைகளில் ஒன்றிற்கு நாம் உத்திரவாதமாயிருக்க முடியும். அதுதான் 'எல். ஜீ.' பெருங்காயம். உங்கள் குடும்பத்தால் மூன்று தலைமுறையாக உபயோகிக்கப்பட்டு வரும் இச்சிறந்த பெருங்காயம் இப்பொழுது ஒரு பவுண்டு பொட்டலத்திலிருந்து, ஒரு பலம் பொட்டலம் வரை கிடைக்கும். போலிகள் அநேகம் வெளிவந்திருப்பதால், 'எல். ஜி.' என்ற இரு எழுத்துக்கள் இருப்பதை கவனித்துப் பார்த்து வாங்குங்கள். திருப்தியடைந்த பொது மக்களிடமிருந்து எமக்கு 15 தங்கப் பதக்கங்களும், அநேக நற்சாக்ஷிப் பத்திரங்களும் கிடைத்திருக்கின்றன. ஒரு சில பதக்கங்கள் பெற்றவர்களோ அவை காசி மாலையைப்போல் தோன்றும்படி செய்கின்றனர். இவை பொது மக்களை எமாறச் செய்கின்றது.

எமது உயர் ரக பெருங்காயத்தைத் தவிர வேறு எந்தப் பெருங்காயத்தை வாங்கிச் சென்றாலும் அவைகள் மட்டமென்று வீட்டிலுள்ள ஸ்திரீகள் சுலபத்தில் கண்டுகொண்டு விடுவதாக அநேகர் எமக்குச் சொல்லியுள்ளனர். 'எல்.ஜீ.' பெருங்காயம் மொத்த வியாபாரம் செய்துவந்த பெரிய ஸ்தாபனத்தாரால் கொடுக்கப்படுகிறது. இதற்கு முன் 6 மணங்கு கொண்ட பெட்டியைத் தவிர மற்ற சில்லரை வியாபாரம் செய்ததில்லை. வியாபாரிகள், ரயில்வே ரசீது கண்டவுடன் தொகையை மகிழ்ச்சியுடன் செலுத்தினர் என்பதிலிருந்தே இதன் உயர்குணம் தெரியும்.

இப்பொழுதோ உங்கள் தேவைக்குத் தகுந்தபடி சேவை செய்ய வந்திருக்கின்றோம். சிறுசிறு பாக்கெட்டுகளாக இப்பொழுது கிடைக்கும். நடுவிலுள்ள தரகர்களின் கமிஷனை வெகுவாகக் குறைத்திருக்கின்றோம். இதனால் அனேகர் மட்டமான சரக்கை சிபார்சு செய்பலாம். ஆபினும் உண்மையான எல். ஜீ. பெருங்காயத்தையே கோருங்கள்.

ஊறுகாய்கள் போடும் காலம் இதுவே. இவை ருசி, மணம் இவற்றுடன் விளங்க எல். ஜீ. பெருங்காயத்தை உபயோகியுங்கள். அழகான அட்டைப் பெட்டியில் ஒவ்வொரு பலமும் கட்டப்பட்டிருக்கிறது. இதன் ரகத்தை நோக்கின் இதன் விலை மிகக் குறைவானதே.

1 பவுண்டு ரூ. 1-14-0. ½-பவுண்டு 0-15-0. ¼-பவுண்டு 0-8-0. 2 பலம் டின் 0-5-0

1 பலம் பாக்கெட் 0-2-6 வீதமும் விற்கப்படுகிறது. எல். ஜீ. பெருங்காயத்தைக் கேட்டுவாங்குங்கள்.

லால்ஜீ கோது & கம்பெனி.

தலைமை ஆபீஸ்: பம்பாய் 3.

சௌகார்பேட்டை
மதராஸ்.

கிளை: கும்பகோணம்.

அதிசயம் ஆனால் உண்மை

தென்னிந்தியப் பிரமுகர்கள்

ராவ்சாகேப்

வி. வெங்கடாசாரியார்

(1870—1931)

"ஏ. எஸ்."

செங்கற்பட்டு ஜில்லாவில் பல வருஷங்களாகப்பொதுஜன சேவையிலீடுபட்டு கூட்டுறவு இயக்கத்துக்கே தலைவராக இருந்து வந்த ஸ்ரீமான் வி. வெங்கடாசாரியார் வடஆற்காடு ஜில்லாவில் பெயர்போன பூண்டி கிராமத்தில் 1870-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் விஜயராகவாசாரியார் என்பவர் ஏழ்மை நிலைமையிலிருந்த போதிலும் சிறந்த கல்வி அறிவுள்ளவர். ஸ்ரீமான் வெங்கடாசாரியார் வாலாஜாவில் இருந்த ஒரு செகண்டரி பாடசாலையில் படித்துவந்து பிறகு சென்னை பச்சையப்பன் காலேஜில் படித்து எப். ஏ. பரீட்சையில் தேறினார். இதற்குமேல் படிப்பதற்குப் போதுமான வசதிகள் இவருக்கு இல்லாததால் இவர் சென்னை போஸ்டு மாஸ்டர் ஜெனரல் ஆபீசில்குமாஸ்தாவாக அமர்ந்தார். வெகு சீக்கிரத்தில் இவர் வேலைத் திறனைக்கண்டு வியப்படைந்த மேல் அதிகாரி ஒருவர் இவருக்குப் போதுமான உதவி செய்து வக்கீல் பரீட்சைக்குப் படிக்கும்படி தூண்டினார். வேலையிலிருந்துகொண்டே படித்து சட்டப்பரீட்சையில் தேறிப் பிறகு 1893-ம் வருஷத்தில் காஞ்சிபுரத்தில வக்கீல் தொழிலை நடத்த ஆரம்பித்தார்.

வேலையில் ஊக்கமும் உழைப்பும் இவருடைய புத்தி கூர்மையும் சிறிது காலத்திலேயே நல்ல பலனை அளித்தது. சட்டங்களில் தேர்ச்சி பெற்றவரென்றும் சாதுர்யமாகப் பேசுவதில் சமர்த்தரென்றும்பெயர் பெற்றார். பொருளும் அதிகமாக சம்பாதித்தார். காஞ்சிபுரத்தில் ஒரு ஜில்லா முன்சீப் கோர்ட்டுமாத்திரம் இருந்தும் சில சமயங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 700, 800 ரூபாய் வரையில் சம்பாத்யம் கிடைத்தது. அநேகவருஷங்கள் வக்கீல்கள் சங்கத்துக்குக் காரியதரிசியாகவும் தலைவராவும் இருந்துவந்தார். பல ஜில்லா முன்சீப்புகளும் இவரைப் பாராட்டியிருக்கிறார்கள்

கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு ஐக்கிய நாணயச் சங்கச் சட்டமும் ஏற்பட்டபொழுது ஸ்ரீமான் வெங்கடாசாரியார் இந்த இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார். காஞ்சிபுரத்தில் பல ஐக்கிய நாணயச் சங்கங்களை ஏற்படுத்தப் பேருதவி செய்து வந்தார். கனம் சர். பி. ராஜகோபாலாசாரியாருக்கு இவரிடத்தில் விசேஷ மதிப்பு உண்டு. கூட்டுறவு இலாகா ரிஜிஸ்டிராராக காஞ்சிபுரத்திற்குப்பல தடவைகள் விஜயம் செய்தபொழுது ஸ்ரீமான் வெங்கடாசாரியாரின் உதவியைக் கொண்டே கூட்டுறவு பாங்கிகளையும் சங்கங்களையும் ஸ்தாபித்தார். பெரியகாஞ்சிபுரம் கூட்டுறவு அர்பன் பாங்கியில் தலைவராகவும் பிறகு செங்கற்பட்டு ஜில்லா கூட்டுறவு சென்டிரல் பாங்கியில் சுமார் ஒன்பது வருடங்களுக்குமேல் தலைவராகவும் வேலை பார்த்துவந்தார். இவர் காலத்தில் பாங்கி அதிக விருத்தியடைந்து சென்னை மாகாணத்திலேயே சிறந்த கூட்டுறவு பாங்கி என்று கவர்ன்மெண்டார்ஒப்புக்கொள்ளும்படி இருந்தது 1920-ம் வருஷத்தில் சித்தூர் ஜில்லா கூட்டுறவு மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். கூட்டுறவு இயக்கத்தை விளக்கித் தமிழில் ஒரு நாடகமும் எழுதிப் பிரசுரம் செய்தார். சென்னைக் கூட்டுறவு சென்டிரல் அர்பன் பாங்கி(இப்பொழுது மாகாணக் கூட்டுறவு பாங்கி)க்கு செங்கற்பட்டு ஜில்லா பாங்கியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டவுன்சண்டு கமிட்டியில் கூட்டுறவு இயக்கத்தைச் சீர்திருத்த வேண்டிய விஷயங்களைப்பற்றித் தகுந்த சாட்சியம் கொடுத்தார். இவர் செய்த ஊழியத்தைப் பாராட்டி கவர்ன்மெண்டார் 1924-ம்வருஷத்தில் இவருக்கு "ராவ் சாகேப்" பட்டத்தை அளித்தார்கள்.

ராஜீய விஷயங்களிலும் இவர் விசேஷ சிரத்தை காட்டி வந்தார். செங்கற்பட்டு ஜில்லாச் சங்கத்தில் காரியதரிசியாகப் பல வருடங்கள் பொது ஜனங்களுக்கு அரிய சேவை செய்து வந்தார். கிராமவாசிகளின் குறைகளைப் பத்திரிகைகளில் எழுதி வந்ததுடன் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களிடமும் எடுத்துச் சொல்லி வசதிகள் செய்து கொடுக்க முயற்சி செய்துவந்தார். 1917-ம் வருடம் காஞ்சிபுரத்தில் ஸ்ரீமதி சரோஜினி தேவியின் தலைமையில் நடந்த மாகாண ராஜீய மகாநாட்டிற்கு வரவேற்புக் கமிட்டி காரியதரிசியாக அரும் பாடுபட்டார். சுமார் ஆறு வருடங்கள் முனிசிபல் கவுன்சிலராக இருந்துவந்தார். செஞ்சிலுவைச் சங்கத்திலும் சுகாதாரச் சங்கத்திலும் காரியதரிசியாக இருந்து வந்தார். பச்சையப்பன் பள்ளிக்கூடத்தில் பழைய மாணவர் சங்கத்திலும் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து தொண்டு புரிந்து வந்தார்

காஞ்சிபுரத்தில் இருந்த ஒவ்வொரு பொது ஸ்தாபனங்களிலும் ஈடுபட்டு வேலை செய்துவந்தார். கலை அபிவிருத்திச்சங்கங்களிலும் அதிக சிரத்தை காட்டி வந்தார். வாசகசாலையும் டென்னிஸ் கிளப்பும் என்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அநேக வருஷங்கள் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து வந்தார். இந்தச் சங்கம் அதிக விருத்திபடைந்து அநேக உத்தியோகஸ்தர்களும் பிரமுகர்களும் மாலைவேளைகளில் உபயோகமாகவும் வேடிக்கையாகவும் காலங்கழிக்க வசதி அளித்துக் கொண்டுவருகிறது 1928-ம் வருஷத்தில் கனம் மந்திரி ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார் இவருடைய உருவப்படத்தை இந்த வாசகசாலையில் திறந்து வைத்துப் புகழ்ந்து பேசியிருக்கிறார். நாடகக் கலையில் இவருக்கு அதிகப் பிரேமை இருந்ததால் ஸ்ரீராம விலாச சபா என்று ஒரு அமெச்சூர் நாடகசபையை ஏற்படுத்தி பலவருடங்கள் அதைச் சிறப்பாக நடத்தி வந்தார்.

ஸ்ரீமான் வெங்கடாசாரியார் ஆங்கிலத்தில் வெகு திறமையாகவும் அழகாகவும் பேசுவார். எந்த விஷயத்தையும்

பிரசங்கம் செய்வதைக் கேட்டு அநேகர் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். உயர்ந்த நோக்கங்களும் சிறந்த மனப்பான்மையும் கொண்டவர். இவருக்கு ரொம்பவும் தயாள மனதும் தர்ம சிந்தையும் இருந்தன. பரோபகாரம் செய்வதையேகருத்தாகக்கொண்டவர். அநேக ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்விக்காகப் பொருளுதவி புரிந்து வந்தார். சுயநலம் என்பதே இவருக்குத் தெரியாது. ஏழை, பணக்காரர் என்கிற வித்தியாசமும் இவருக்குக் கிடையாது. எல்லாரிடத்திலும் மிக்க அன்பு பாராட்டி வந்தார். பொது ஜனங்களுக்கு இவரிடத்தில் விசேஷ மதிப்பும் பிரீதியும் இருந்து வந்தது. காஞ்சிபுரத்தில் இவருக்கு இருந்த செல்வாக்குக்கு அளவேயில்லை. கடைசி வரையில் இவருக்குச் சுறுசுறுப்பும் வேலையில் ஊக்கமும் மாறுதலடைந்ததே இல்லை. நீர் வியாதியால் தேகம் பலஹீனமடைந்த காலத்திலும் பொதுக்காரியங்களுக்கு முன்னணியிலேயே இருந்து வந்தார் 1931-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஹிருதய ரோகினால் இவர் திடீரென்று இறந்துபோனார். இதனால் தென்னிந்தியா ஒரு அரிய பொதுஜன சேவார்த்தி

அசல் புளூ ஜாகர்

வைரங்கள்

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE) நல்முத்துக்கள்

கிடைக்குமிடம்:

சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனாபஜார், மதராஸ்.

ரூ. 500 இனாம்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானாலும்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

ஜம்புலிங்கத்தின்

திருவிளையாடல்கள்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியே உட்காருங்கள்; கையில் துப்பாக்கி யிருப்பதை மறந்து விடாதீர்கள்'' என்றான். அவர் வேறு வகையின்றி அப்படியே உட்கார்ந்துவிட்டார்.

''கனவான்களே! அப்படி இப்படி அசையாதீர்கள். எதையாவது சூரத்தனமாய்ச்செய்ய எண்ணி, எழுந்து என்னை உங்களைச் சுட வைத்து விடாதீர்கள். எனக்கு உயிர்க்கொலை என்றால் கொஞ்சமும் பிடிக்காது'' என்று சொல்லிக்கொண்டே மேஜைமீது வேலாயுத முதலியார் கழட்டி வைத்த நகை முடிப்பைக் கையில் எடுத்துக்கொண்டான்.

இதைக் கண்ட ரெங்கநாயகியம்மாள், ''ஐயோ நகை! மோசம்! கொள்ளை!!'' என்று வாய் குழறிக்கொண்டே தரையிற் சாய்ந்தாள். மற்றவர்கள் ஜம்புலிங்கம் பிடித்திருந்த துப்பாக்கியைக் கண்டு பயபக்தியுடன், ஜம்புலிங்கம் கூறியபடியே அசையாமலிருந்தார்கள். மறுபடியும் ஜம்புலிங்கம், ''கனவான்களே! நீங்களனைவரும், என்னுடைய ஜால வேடிக்கையைக் கண்டு களித்ததற்கும், நான் சொன்ன வார்த்தையில் கவுரவம் வைத்து, மிக்க நெருக்கடியான நிலைமையிற் கூட அசையாமல் பொறுமையுடனிருந்ததற்காக என்னுடைய சொந்த ஹோதாவில் வந்தனம் செய்கிறேன். பிறர் சொத்தையபகரித்து, தாராளமாய்ச் செலவு செய்து ராவ்பஹதூர் பட்டம் பெற்ற வேலாயுத முதலியாரே! நீர் இத்துடன் தப்பிக் கொண்டதாய் நினைத்து விடாதீர். நீர் அபகரித்துக் கொண்ட சொத்தில் ஒரு சிறிய பாகமே இப்பொழுது கிடைத்திருப்பதால், மறுபடியும் உம்மைக் கூடிய சீக்கிரம் சந்திக்கஎண்ணுகிறேன். நீர் கொடுக்க வேண்டியது இவ்வளவு என்று கணக்குப் போட்டுத் தயாராய் வைத்திரும். ஜம்புலிங்கத்தை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணிவிடாதீர். டெபுடி கமிஷனரவர்களே! போகுமுன் தங்களுக்கும் ஒரு சமாசாரம் சொல்லவேண்டும். இன்று நியாயமாக வரவேண்டிய புரொபஸர் மூர்த்தி, நாகமணித் தோட்டத் தெருவில் காலியாயிருக்கும் 5-ம் நெம்பர் வீட்டில், பின் கட்டில் ஓர் அறையில் தள்ளிப் பூட்டப்பட்டுக் கிடக்கிறார். இதோ இருக்கிறது. அந்த அறையின் சாவி. தான் அவருடைய மன்னிப்பைக் கேட்டதாய்ச் சொல்லும்,''

என்று சாவியை டெபுடி கமிஷனர் பக்கமாய் வீசினான். மறு நிமிடமே, பங்களா இருளில் மூழ்கியது!

ஒருவருக் கொருவர் கூச்சலிட்டுக்கொண்டு, தட்டுத் தடுமாறிக்கொண்டு வெளியேறப் பிரயத்தனப் பட்டனர். ராவ் பகதூர் வேலாயுத முதலியார் தன் வேலையாட்களைக் கூவி மெழுகுவர்த்தி விளக்குகளை எடுத்துவரச் சொன்னார். இரண்டு மூன்று நிமிடங்களில் மெழுகு வர்த்தி விளக்குகள் வந்தன. அதன் வெளிச்சத்தில் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று அவரவர்கள் அவசர அவசரமாய் கிளம்பினார்கள். டெபுடி கமிஷனர், தான் மறுபடி முதலியாரைப் பார்ப்பதாய்ச் சொல்லி அவசரமாய்ச் சென்றுவிட்டார்.

சென்னை மவுண்ட் ரோட்டில், ''காஸ்மாபாலிட்டன்'' கிளப்பில், ஒரு அறையில், டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடு உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கு எதிரில், மேஜையின்மீது சமாசாரப் பத்திரிகை பிரிக்கப்பட்டுக் கிடந்தபோதிலும், அவர் அதைப் படிப்பதாய்த் தோன்றவில்லை. அவர் எதைப் பற்றியோ மிக்க ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பவரைப் போலக் காணப்பட்டார். கிளப்பின் வேலையாள், சாப்பிடுவதற்கு என்ன கொண்டு வரட்டும்? என்று கேட்டுக்கொண்டு நிற்பதைக்கூட அவர் கவனித்தவராய் காணப்படவில்லை. இதைக்கண்ட அவன் இவரது பின்பக்கமாக நின்றிருந்ததைவிட்டு, எதிர்புறமாகப் போய் நின்றாலாவது கவனிப்பார் என்றெண்ணி, எதிரே வந்து நின்றுகொண்டான். அப்பொழுதும் அவர் கவனித்தவரில்லை. இப்பொழுது சற்றே உரக்க ''எஜமானுக்கு என்ன கொண்டுவரட்டும்?'' என்று கேட்டான். நாயுடு அப்பொழுதே உறங்கி விழித்தவரைப் போல, அவனைப் பார்த்து, ''உம்! எதையாவதுகொண்டா'' என்றார்.

வேலை:—இன்று பொங்கல் பச்சடியும், பாதாம்கீரும் ஸ்பெஷல் கொண்டு வரட்டுமா?

மறுபடி பதிலில்லை. நாயுடுகாருவின் மனம் திரும்பவும் எங்கோ சென்றுவிட்டது. நாயுடுகாருவின் அந்தஸ்தை நன்கு தெரிந்து கொண்டிருந்ததால், பயபக்தியோடு, பொறுமையாய். அவரது பதிலை எதிர் பார்த்திருந்தான். சில நிமிடங்களில் நினைவு திரும்பி வந்ததும், ''ஜாங்கிரி கொண்டுவா'' என்றார். இவர் கேட்டதைக் கொண்டு வந்து வைத்துச் சென்றான். எதோ ஞாபகமாய், ஜாங்கிரியில் ஒரு துண்டை எடுத்து வாயிற் போட்டுக்கொள்ளப் போனவர், ''அடடே! இதென்ன ஜாங்கிரியைக் கொண்டுவந்து வைத்திருக்கிறான். மடயன்! ஏய்!'' என்று கோபமாய் கூப்பிட, வேலைக்காரன் நடுங்கி ஓடோடியும் வந்தான்.

டெ-கமி:—என்னங்காணும், ஸ்பெஷல் என்னமோ என்று சொன்னீர். ஜாங்கிரியைக் கொண்டு வந்து வைத்திருக்கிறீர்?

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார்ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள் !

ஆட்டங்களில் ஈடுபெட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி ! !

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

வேலே:—அவ்விடத்தில் ஜாங்கிரிதானே கொண்டுவரும்படி உத்திரவு?

டெ-கமி:—நான்தான் சொன்னேனே! சரி; தொலையட்டும்; ஸ்பெஷல் கொண்டுவாரும்.

வேலே:—அப்படியே! இதோ கொண்டுவந்தேன்.

என்று பாதாம் கீரையும், பொங்கற் பச்சடியையும் அவர் முன் கொண்டுவந்து வைத்துச் சென்றான்.

அவரது கையும், வாயும், வழக்கப் பிரகாரம் தத்தம் வேலைகளைச் செய்கின்றனவேயொழிய, அவரது மனம் அவர் சாப்பிடும் பலகாரத்தின் ருசியின்மீது செல்லவேயில்லை.

"இந்தப் போலீஸில் எத்தனை வருஷகாலமாக இருக்கிறேன். எத்தனை திருடர்களைக் கண்டிருக்கிறேன்! எவ்வளவோ மர்மமாகவும் துணிகரமாகவும் வேலைசெய்த கொலைக்கஞ்சாப்பாதகர்களின் கொட்டத்தை நிமிடத்தில் அடக்கிவிட்டிருக்கிறேன். என்னுடைய பெயரைக் கேட்டாலே போதும். அடங்கி ஒடுங்கிவிடுவார்கள்! அப்படிப்பட்ட என்னையும் ஒரு ஆட்டம் ஆட்டிவைக்கிறானே! நம்முடைய யுக்தி சாமர்த்தியந்தான் ஒருவேளை நமக்கு வயதாய் விட்டபடியால் குறைந்துவிட்டதோ! அப்படி நினைப்பதற்குமில்லை. என்னைவிட எவ்வளவோ வயது சென்றவர்கள் இல்லையா? அவர்கள் எவ்வளவோ சுறுசுறுப்பாயும், புத்திசாலித்தனமாயும் காரியங்களைச் செய்யவில்லையா; ஆகையால் அதுவல்ல காரணம். உண்மையிலேயே அவன் ஒரு அதிசய சாமர்த்தியம் வாய்ந்தவன்தான். இல்லாவிட்டால் எத்தனைபேர்கள் கூடியிருந்தோம்! எல்லோரையும் அப்படியே ஸ்தம்பிக்கவைத்து, என்னிடமிருந்த கைத்துப்பாக்கியையும் தந்திரமாய் வாங்கிக்கொண்டு, தன் உடம்பைக் கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் சுமார் அருபதாயிரம் ரூபாய் பெறுமான நகைகளை அவ்வளவு பேர்கள் காண அடித்துக்கொண்டுபோனானே! நானும், எல்லோரையும்போல ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கவேண்டியிருந்தது! வெறும் வாயை மெல்லும் இப்பத்திரிகைகளுக்கு இன்னும் இந்த அவலும் கிடைத்துவிட்டால், கேழ்க்கவேண்டுமா, வெளியில் தலைகாட்ட முடியாது. நம்முடைய மானத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், கட்டாயம், எப்படியாவது அவனை அடக்கியேதான் ஆகவேண்டும். ஆம்! அடக்கித்தான் ஆகவேண்டும்" என்று தன்னையும் அறியாமல் ஆத்திரத்தில் சற்று உரக்கத் தன் எண்ணத்தை வெளியிட்டார்.

"எப்பொழுது பார்த்தாலும் அடிப்பதும், பிடிப்பதும், அடக்குவதுந்தானா?" என்று கேட்டுக்கொண்டே இவரிருந்த அறைக்குள் ஒருவர் நுழைந்தார்.

"ஆ! நீங்களா?" என்று நாயுடுகாரு ஆச்சரியமடைந்தார்.

வந்தவர்:—ஆம், நான்தான் மிக்க ஆழ்ந்த யோசனையிலிருக்கிறாப் போலிருக்கிறதே! இளப்பில் கூடவா போலீஸ் உத்தியோகம்? இங்காவது சற்று நிம்மதியாயிருக்கக் கூடாதா?

டெ-கமி:—ஏன்? நிம்மதியயில்லாமலென்ன? நிம்மதியாய்த்தானேயிருக்கிறேன்.

வந்த:—அதுதான், 'கட்டாயம் அடக்கியே ஆகவேண்டும்,' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தீர்களோ?

டெ-கமி:—வாய்விட்டா சொல்லிக் கொண்டிருந்தேன்? நீங்கள் வந்து வெகு நேரமாயிற்றோ? என்னென்ன சொன்னேன்?

வந்த:—இந்தப் போலீஸாரை மட்டும் நம்பவே கூடாது. மாரளவு சிநேகமாயிருந்தாலும் தங்கள் காரியத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.

டெ-கமி:—இல்லை உண்மையாகத்தான் கேட்கிறேன. நான் என் மனதில் எதையோ எண்ணிக் கொண்டிருந்தேன். இதுவரையில் நான் என் எண்ணத்தை உரக்கத் தனக்குத்தானே வெளியிட்டுக் கொண்டதில்லை. நான் என்னென்ன சொன்னேன்?

வந்தவர்:—பயந்துவிட வேண்டாம். உங்கள் ரகஸியம் ஒன்றையும் வெளியிட்டு விடவில்லை. நான் தற்செயலாய் இந்த அறையைத் தாண்டிப் போகும்பொழுது உங்களைக் கவனித்தேன். அதே சமயம் 'கட்டாயம் அடக்கியே ஆகவேண்டும்' என்று சொன்னீர்கள். எனக்கும் பொழுது போகவேண்டுமே! உடனே உள்ளே நுழைந்தேன்

[நாயுடுவின் மனதில் சற்று நிம்மதி உண்டாயிற்று.] நான் வந்ததில் தங்களுக்கு இடைஞ்சல் ஒன்றும் இல்லையே!

டெ-கமி:—சே! சே! அப்படி ஒன்றுமில்லை. அதற்கு மாறாக நீங்கள் வந்தது எனக்குச் சந்தோஷமே.

வந்தவர்:—நீங்கள் இவ்வளவு கலவரப்படும்படியான விஷயம் என்ன?

டெ-கமி:—கலவரமா? கலவரம் ஒன்றுமில்லையே. ஆபீஸில் சமீபத்தில் ஒரு பேப்பர் வந்தது. அதற்குப்பதில் எழுதின ஞாபகம். அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான்.

வந்தவர்:- தங்களுக்கு இஷ்டமில்லாத சங்கதியைச் சொல்லச்சொல்லித் தொந்திரவு செய்வதாக எண்ணக்கூடாது. நானாயிருந்தால் என் மனதிலுள்ள கவலையை நண்பர்களிடம் சொல்லி ஆறுவேன். அதனால் தான் கேட்டேன்.

டெ-கமி:—அப்படிப் பிரமாதம் ஒன்றுமேயில்லை. விஷயம் சர்வ ஸாதாரணமானதுதான். உம்—நீங்கள் எப்பொழுது பம்பாயிலிருந்து வந்தீர்கள்? இரண்டு மூன்று நாட்களுக்கு முன்தான் ராமசாமி முதலியாரைப் பொன்னரங்கம் பிள்ளையை எங்கே காணவில்லை என்றேன். அவர்தான், நீங்கள் பம்பாய்க்கு ஏதோ ஜோலியாய் போயிருப்பதாய்ச் சொன்னார்.

பொன்:—நான் இன்று காலையில் தான் வந்தேன். நீங்கள் என்னைத் தேடும்படியான பாத்தியங்கூட எனக்குண்டா? என்ன விசேஷம்?

டெ-கமி—விசேஷம் ஒன்றுமில்லை. பார்த்து வெகு நாட்களாயிற்றே என்றுதான். பம்பாயில் என்ன விசேஷம்?

பொன்:—அதெல்லாம் இருக்கட்டும்; விஷயத்தை எவ்வளவு அழகாய் மறைக்கப் பார்க்கிறீர்கள்? எனக்குத் தெரியாது என்று நினைத்துக்கொண்டீர்களோ?

டெ-கமி:—என்ன தெரியும்? தெரிந்தால் சொல்லுங்களேன்; என்னைக் கேட்பானேன்?

பொன்:—சொன்னால், ஒத்துக் கொள்வீர்களா?

டெ-கமி:— உண்மையைச் சொன்னால் ஒத்துக்கொள்ளாதவர்களும் உண்டா?

உடம்புக்கு எப்போதும் சுகம் வேண்டும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் சாதாரணமான தூள் அல்ல. அது உல்லாசமும், ஆரோக்கியமும் ஆசரிக்கச்செய்யும், ஏனென்றால் அது ஒரு விசேடமான முறையாக மருந்தூட்டிச் செய்யப்பட்டது. குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் அதிக சுத்தமும் நேர்த்தியுமானது; அதர்க்கு ஈடானதூள் ஒன்றும் கிடையாது. அது பக்கு வந்த இடங்களைத் தேற்றி உடனே சுகமுண்டாக்கிறது. வேர்வை விடுவதை இந்தத்தூள் தணிக்கிறது. திரேக முழுதற்கும் அது உல்லாச சுகத்தைக் கொடுக்கிறது. வைத்தியர்கள் குழந்தைகளுக்கு உபயோகப் படுத்தும்படியாக சிபார்சு செய்திருக்கிறார்கள்; நோயாளிகளுக்கும், சமுசாரத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் உபயோகப்படுத்தும் படியாக சொல்லியிருக்கிறார்கள்; ஏனென்றால் இந்த தூள், அதிக சுத்தமானது மல்லாமல் மகா சவுக்கியத்தைக் கொடுக்கும்.

குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூளின் வாசனை ஒப்பில்லாதது. அது இனிப்பான பரிமள வாசனையோ டிருப்பதுமல்லாமல், தோலை அதிக அழகாக்கி சந்தோஷத்தை உண்டுபண்ணும். அது உடம்புக்கு வாசனையும் கொடுக்கும்.

எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

குடிகூரா டால்கம்
CUTICURA TALCUM

இன்றைக்கு ஒரு டப்பி குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் வாங்கு.

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசல்ப்-

கொனேகான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

பொன்:—நேற்று நடந்த சங்கதி! அதுதானே?

டெ-கமி:—[ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே] ஆம்; அதைப்பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

பொன்:—நீங்கள் கவலைப்படும்படியாக அவ்வளவு தூரம் போய்விட்டதா?

டெ-கமி:—அவ்வளவு தூரம் மிஞ்சவிடுவோமா. இருந்தாலும் இப்படிப் பகிரங்கமாய் களவு நடந்தால், போலீஸின் மதிப்பே சீர்குலைந்து விடாதா?

பொன்:—நேற்றுநடந்த சம்பவங்களைப் பொறுத்தமட்டில், நீங்கள் அவ்வளவு கவலைப்படவேண்டிய நியாயமேயில்லை. ஒருவன் இப்படிக் குற்றஞ் செய்வான். இன்ன சமயத்தில் செய்வான் என்பதை ஒருவராலும் எதிர்பார்த்து நடக்க முடியாது. திருடனைக் கண்டு பிடித்து, தண்டிக்காவிட்டால், நீங்கள் சொல்லுகிற மாதிரி மதிப்புகுலையும்.

டெ-கமி :—நீங்கள் சொல்வது சரிதான். சிலர் அப்படி எண்ணுவதில்லையே! அதிலும் பத்திரிகைக்காரர்கள்—

பொன்:—அவர்கள் கிடக்கிறார்கள் அவர்களுக்கென்ன வேலை? இவ்வளவு வியர்க்கிறதே இங்கு! தாழ்வாரத்திற்குப் போகலாமே.

டெ-கமி:-ஆகா, போவோம், நீங்கள் ஒன்றும் சாப்பிட வேண்டாமா?

பொன்:—சற்று முன்தான் சாப்பிட்டேன்.

இருவரும் எழுந்து தாழ்வாரத்திற்குச் சென்றார்கள்.

பொன:—இந்தப் படக்காட்சிகள் நம் நாட்டில் அதிகரிக்க அதிகரிக்க கொலைகளவும் அதிகரிக்கிறதென்று நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

டெ-கமி:— கேட்பானேன்? போதாக் குறைக்குப் பத்திரிகைகள் வேறு இப்பொழுது இவைகள் செய்யும் அநர்த்தம் போதாதென்று இன்னும் அச்சுச் சட்டத்தையே எடுத்து விட வேண்டுமென்று கூக்குரலிடுகின்றன?

பொன்:—எல்லாம் மோசம்! எந்தப் பத்திரிகைதான் உண்மையாய் உழைக்கிறது? சொல்லுங்கள் பார்ப்போம். விஷயம் உண்டோ, இல்லையோ, யாரையாவது தாக்கவேண்டும். விஷயத்திற்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாதபடிப் பெரிய கொட்டை எழுத்துக்களில் எதையோ அச்சடிக்க வேண்டும். கூட பத்துப் பிரதிகள் விற்கவேண்டும். தங்கள் வயிறு நிரம்ப வேண்டும். அது கிடக்கட்டும் ,அடுத்த முறை யாருடையது?

டெ-கமி:-முறையா? என்ன முறை?

பொன்:—அடடா! ஒன்றுமே தெரியாது. ஐயோ பாவம்! அதுதான் ஸார். அந்தப் பயல், வாரம் வாரம் நடத்தும் திருவிளையாட்டு.

டெபுடி கமிஷனர் பிரமித்து இமை கொட்டாது தன்னையே நோக்குவதைக் கண்டு,

'என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'

டெ-கமி:—இது பரம ரகசியமாய் வைக்கப்பட்டிருக்கிறதே. உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்றுதான் யோசிக்கிறேன்.

பொன்:—உங்கள் இரகசியம் இப்படித்தான் இருக்கும்போலிருக்கிறது.

டெ-கமி:—உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அதைச் சொல்லுங்கள்.

பொன்:—இதென்ன ஸார் பிரமாதம். ஒரு மனிதன், தனக்கு பகவான் அளித்திருக்கும் காதைப் பிரயோஜனப்படுத்தினால் தெரிகிறது. போகும்பொழுதும் வரும்பொழுதும் எத்தனை சமாசாரங்கள் நமது காதில் வலிய விழுகின்றன. அவனும் சாமான்யமான பேர்வழியில்லை போலிருக்கின்றதே. இந்த நிலைமையில் எப்படி நிம்மதியாயிருக்கமுடியும்? இவ்வளவு கட்டுக்காவல்களுக்குத் தப்பி, எப்படியோ தன் வேலைகளை முடித்துக்கொள்வதென்றால் அப்புறம் என்ன இருக்கிறது!

டெ-கமி:—நீங்கள் வரும்பொழுது நானும் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

பொ:—எனக்கு ஒன்று தோன்றுகிறது. இதுவரை, திடீரென்று, அவன், எதிர்பாராதவிடங்களில் தன் வேலையைச் செய்திருக்கிறான். ஆகையால் உங்களால் எதுவுஞ் செய்ய முடியவில்லை. இனி அப்படியிருக்குமா? உங்கள் சாமர்த்தியத்தை உத்தேசிக்க கட்டாயம் அகப்பட்டுக்கொள்வான். பல நாளைய திருடன் ஒருநாள் அகப்பட்டுத் தானே தீரவேண்டும்.

என்று சொல்லிக்கொண்டிருக்கையிலேயே ஓர் வேலைக்காரன் வந்து, பொன்னரங்கம் பிள்ளையை நோக்கி, "தங்களை யாரோ டெலிபோனில் கூப்பிடுகிறா'கள்" என்றான்!

பொன்:—இதோ வருகிறேன். [டெபுடி கமிஷனரைப் பார்த்து] நீங்கள் நினைத்த மாதிரி, கட்டாயம் அகப்பட்டுக் கொள்வான்; கவலையை விடுங்கள். டெலிபோனைக் கவனித்துவிட்டு வருகிறேன்.

என்று அறையைவிட்டு வெளியே சென்றார்.

(தொடரும்.)

"குப்த மந்திரம்"

ரூபா 100 இனாம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமேதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென் நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனாம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No 33/6, P.O. Katrisarai (Gaya)

ஜைகால் விகர் பில்ஸ்.

இம்மாத்திரைகள் நவீன முறையில் நன்கு தயார் செய்யப்பட்டு இருக்கின்றன. இம்மாத்திரைகளை யாரும் உட்கொள்ளலாம். இதனால் பசியின்மை, நித்திரை குறைவு. சோகம், நரம்புத் தளர்ச்சி, மூளைக்கலக்கம், கைகால் அசச்சல் முதலியவைகள் நீங்கிப் புதிய உற்சாகம் உண்டாகும். சீக்கிரத்தில் வலுவையும், யௌவனத்தையும் அளிக்கக் கூடியது. இது ஒரு பாட்டில் சாப்பிட்ட மாத்திரத்தில் குணம் தெரியும். 21 மாத்திரைகள் கொண்ட புட்டியின் விலை ரூ. 2

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—

ரத்னம் அண்டு கோ.,
கெமிஸ்ட் & டிரகிஸ்ட்
23, சைனாபஜார் ரோடு, ஜி. டி. மதராஸ்.

சரசமான விலை ! பகட்டுக்கு குறைவு இல்லை !

டால்வீசும்

ஸ்ரீ பர்மா அவுத்த பையா கல்

உருவு கற்கள் ரதி ஒன்றிற்கு ரூபா 3 வீதம் விற்கப்படும்.



ரதி ஒன்றுக்கு	1	கல்கொண்டது	நூறுகல்லுக்கு	ரூபா	300	0 0
,,	2	,,	,,	,,	200	0 0
,,	3	,,	,,	,,	150	0 0
,,	4	,,	,,	,,	135	0 0
,,	5	,,	,,	,,	125	0 0
,,	6 விருந்து 10	,,	,,	,,	115	0 0
,,	10 மேல்	,,	,,	,,	100	0 0

இந்த பர்மா அவுத்த பையா கல் அசல்வைரங்களுக்கு இரண்டாவதாக ஒப்பிடக்கூடியது. கல் பரிசோதனை செய்யக்கூடியவர்களையும் பிரமிக்கச் செய்யும்படியான அவ்வளவு பள பளப்பும், கலரும், பட்டையும் இதற்கு அமைந்திருக்கிறது.

இந்த ஜாப்தாவில் குறிக்கப்பட்டுள்ள விலைகள் சொற்ப லாபத்துடன் ரொக்கத்திற்கு விற்கப்படும். இந்த அவுத்த பையா கல்லானது மற்ற எல்லா கற்களையும்விட அதிக மேலானதும் குன்றாத ஜோதியும் மாறாத நிறமும் வாய்ந்த உயர்வான ரகங்களாகும். அரத்திற்கும் நெருப்பிற்கும் எண்ணெய்க்கும் திராவகத்திற்கும் திறமான உத்திரவாதம் அளிக்கபபடும். மேலே காண்பிக்கப்பட்டுள்ள அளவுகளை விட பெரிய அளவுகளிலும் கல்லுகள் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.

பர்மா அவுத்த பையா கல் வியாபாரம்:—மொத்தத்திலும் சில்லரையிலும் விற்கப்படும்.

ஜே. எச். டோரஸ், 313, மங்கமாரி வீதி, இரங்கூன்.

சிறுவர் பகுதி

பக்ஷிகளின் விடாமுயற்சி

"ஸ்ரீமதி கே. பத்மாபாய்"

ஒரு காக்கை சமுத்திரக் கரையில் குஞ்சுகளை வைத்துவிட்டு ஆண் காக்கையுடன் இரை தேடச் சென்றது. சிறிது

நேரங் கழித்து இரண்டு காக்கைகளும் திரும்பி வந்து பார்க்கையில் குஞ்சுகளைக் காணவில்லை. அவைகளிரண்டும் மிகவும் விசனப்பட்டு அழுதன.

பெண் காக்கை மிகவும் துக்கித்தது. "நம்முடைய குஞ்சுகளை இந்தச் சமுத்திரம்தான் கொண்டுபோயிருக்கும். நாம் எப்படியாவது முயற்சி செய்து நம்முடைய குஞ்சுகளைத் திரும்பப் பெற வேண்டும்" என்று ஆண் காக்கையிடம் புலம்பிற்று.

அப்பொழுது ஆண் காக்கை நகைத்து, "இக்கடல் எவ்வளவு பெரியது, எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது, நாம் எவ்வளவு இருக்கிறோம். புழுக்களிலும் கேவலமான கிருமிக்குச் சமானமான நம்மால் என்ன செய்ய முடியும்? இனிமேல் இந்த ஆசையை விட்டொழி. வா, மறுபடியும் இரை தேடச் செல்வோம்" என்று சமாதானம் சொல்லிற்று.

ஆனால் பெண் காக்கை பிடிவாதம் செய்யவே, ஆண் காக்கை குஞ்சுகளை எப்படித் தேடுவதென்று கேட்டது. அதற்குப் பெண் காகம், "சமுத்திர ஜலத்தை நம்முடைய மூக்குகளால் நிரப்பிக் கொண்டும், இறக்கைகளால் அள்ளிக்கொண்டும் சிறிது தூரத்திற்கப்பால் சென்று மூக்கிலிருக்கும் ஜலத்தை உமிழ்ந்து இறக்கையை உதறிவிட்டு மறுபடியும் வந்து இவ்விதமே செய்ய வேண்டும். எவ்வளவு நாட்கள் ஆனாலும் சரி; சலிப்பில்லாமல் காரியத்தை முடிக்க வேண்டும்" என்றது.

உடனே இரண்டு காக்கைகளும் சமுத்திர ஜலத்தை மூக்கினால் முகருவதும், இறக்கைகளில் அள்ளிக்கொண்டும் மற்றோரிடத்தில் உமிழ்வதும் இறக்கையை உதறுவதுமாய் இப்படியே வெகு நாட்கள் ஓய்வில்லாமல் செய்துகொண்டிருந்தன.

ஒரு நாள் நாரதர் அவ்வழியாக வந்துகொண்டிருந்தார். இரண்டு காக்கைகளும் செய்யும் விநோதத்தைப் பார்த்து ஆச்சரியமுற்று அருகில் போய் விசாரிப்போம் என்று காக்கைகளிடம் சென்றார். "ஹே" பக்ஷிகளே, எதற்காக நீங்கள் இப்படி செய்கிறீர்கள்? காரணம் என்ன?" என்று கேட்டார்.

பக்ஷிகள், "சுவாமி! நமஸ்கரிக்கின்றோம். எங்களுடைய குஞ்சுகளை சமுத்திர ராஜன் கொண்டு போய்விட்டார். அதனால் இச்சமுத்திரத்தை வற்ற வைத்து எமது குஞ்சுகளை

அடைவதற்காக இப்படிச் செய்கிறோம்" என்றன.

நாரதர் நகைத்து விட்டு "பக்ஷிகளே! இதென்ன விளையாட்டுத்தனம். சமுத்திரத்தை வற்ற வைப்பதென்றால் ஆகக்கூடிய காரியமா? இவ்வாசையை விட்டொழியுங்கள்" என்றார்.

பக்ஷிகளுக்குப் பொறுக்க முடியாத அவ்வளவு கோபம் வந்து விட்டது. "ஓய் நாரதரே! நீங்கள் எங்களுக்குப் புத்தி சொல்லிக் கொடுக்க வேண்டாம். உங்கள் கலகமூட்டும் பேச்சை நம்பி நாங்கள் ஏமாறமாட்டோம். தயவு செய்து நீங்கள் வந்த வழியே போங்கள். எங்கள் குஞ்சுகளை மீட்பதற்காக நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுகிறோம்"

"ஸங்கீத அபிமானி"

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை.

உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 2—0.

1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யும் விலை ரூ. 3.

ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நரை மயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெருகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானீப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே ஹஸாரிமால் & கம்பெனி,
260, சைனாபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி டி மதராஸ்.
செகந்திராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜும்மா மஸ்ஜித்

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெ.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெர்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடு வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.
1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேறு
குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்
ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,
சித்த வைத்திய சாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை.
தலைமை ஆபீஸ், பழனி

நஞ்சன்கூடு பல்பொடி ப்ாக்டெரியின்
கூலாயில்
சிறந்த ஸ்நானத் தைலம்
அணா 3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ். ரூ. 1.
(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்.)

என்று சொல்லிவிட்டு, அவ்விடத்திலும் நிற்காமல் தங்களுடைய வேலையைக் கவனிக்கச் சென்றன.

நாரதர், பக்ஷிகளின் வீரத்தையும் குஞ்சுகளின் மேல் வைத்திருக்கும் பாசத்தையும் கண்டு வியந்து, இவைகளுக்கு எப்படியாவது உதவிபுரிய வேண்டுமென்று நினைத்து நேராய் கருடனிடம் சென்றார். "ஹே! பக்ஷிகளுக்கெல்லாம் தலைவனாயிருக்கும் கருடா, நீ அரசனாயிருந்தும் உன் குடிகளின் கஷ்டத்தைக் கவனிக்காமலிருக்கின்றனையே! இது நீதியா? குஞ்சுகளின் நிமித்தமாக இரண்டு பக்ஷிகளும் படும் அவஸ்தை சொல்லத்தரமன்று. ஆதலால், நீ உடனே அவைகளுக்கு உதவிபுரியக் கடவாய்" என்றார்.

"தட்சணமே எல்லாப் பட்சிகளும் உடனே வரக் கடவது" என்று கருடபகவான் உத்தரவிட்டார்.

மறுகணமே பல ஜாதிகளைச் சேர்ந்த பட்சிகள் கூட்டங் கூட்டமாய் கோடிக் கணக்காய் வந்து சேர்ந்துவிட்டன.

உடனே கருடன் அவைகளைப் பார்த்து, "பக்ஷிகளே! சமுத்திரக்கரையில் அந்த இரண்டு காக்கைகளும் செய்வதுபோல் நீங்களும் செய்து சமுத்திர ஜலத்தை அப்புறப் படுத்துங்கள்" என்று ஆக்ஞாபித்தார்.

பட்சிகள் வெகு தீவிரமாய் வேலை செய்யத் தொடங்கிவிட்டன. சூரிய வெளிச்சம் சிறிதுமின்றிக் கார்மேகக் கூட்டங்களைப் போல் எங்கு பார்த்தாலும் ஒரேபட்சிகளின் கூட்டம்! அவைகள் செய்யும் ஆரவாரமும் இறைச்சலும் பெரிய போர்வீரர்களின் யுத்தகளம்போல் தோன்றியது. வெகு சீக்கிரத்தில் சமுத்திர ஜலத்தை அப்புறப்படுத்தி விடுவது போல் இருந்தது.

இந்த விபரீதச்செயலைக் கண்ட பிரம்மாதிகளும் பயந்தனர். சமுத்திர ராஜனுக்கும் நடுக்கமெடுத்துக் கொண்டது. "ஓஹோ! இந்தப் பட்சிகள் சாமானியப் பட்டதல்ல. நாம் தப்பவேண்டுமானால், இந்தக் குஞ்சுகளை அதனிடம் சேர்ப்பிக்க வேண்டும்' என்று நினைத்துக் குஞ்சுகளை எடுத்துக் கொண்டு வந்து காக்கைகளிடம் கொடுத்து விட்டார்.

வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram,
No, 32/5, P, O. Katrisarai Gaya)

41, ஸசா அவுஸ்,
மாடுங்கா, பம்பாய்.

ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜன் மாத்திரை

"பாலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் எஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.



வெள்ளித் திரைக்கு வந்து விட்டது!

சென்னை கிரௌன் டாக்கிஸில்

12-9-36உ முதல் காண்பிக்கப்படும்.

பாமா பரிணயம்

சினிமா ராணி

T. P. ராஜலக்ஷ்மி

சிறுகளத்தூர் சாமா

வித்வான் ஸ்ரீனிவாஸன்

ராஜா M. G. தண்டபாணி

முதலிய

உயர்தர நடிகர்கள்

நடிக்கும்

உன்னத தமிழ் பேசும் படம்

டைரக்ஷன்—

Y. V. ராவ்

உயர்தர சின் ஜோடிப்பு, உன்னத படப் பிடிப்பு, தெளிவான ஒலிப் பதிவு, காதிற்கினிய கானங்கள், கண்களைக் கவரும் காட்சிகள், ரமணீயமான உடைகள், காதல், சோகம், ஹாஸ்யம், மயிர் சிலிர்க்கும் சண்டைகள், திடுக்கிடும் சம்பவங்கள் மங்களகரமான முடிவு.

அடுத்த படம்:—

ஸ்ரீமதி கே. அஸ்வத்தம்மா

நடிக்கும்

சிந்தாமணி

அல்லது

பில்வமங்கள்

படம் வேண்டுவோர் எழுதுக:-

ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ்,

120, தெற்கு மாசி வீதி, மதுரை.

புஸ்தக விமர்சம்

"மனோரஞ்சனி"

[பிரசுரதார்கள்: எம். எஸ். ராமுலு கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை. வருஷச் சந்தா ரூ 1-8; தனிப்பிரதி விலை அணு 2]

இந்த மாதாந்திர நாவல் சஞ்சிகையின் 6, 7-வது மலர்கள் வரப்பெற்றோம். இதில் ஸ்ரீமதி செய்யூர் சாரநாயகி அம்மாள் எழுதிவரும் "இராஜலக்ஷ்மீ" என்ற தொடர் கதையின் சில பாகங்கள் வெளி வந்திருக்கின்றன. இப்பொழுது இக்கதையின் போக்கு மிகவும் ஸ்வாரஸ்யமாக விருக்கிறது. சமூக வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகவிருக்கும் இக்கதையின் ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு நீதியைப் போதிப்பதாகவிருக்கிறது. இராமானுஜய்யங்கார், எஞ்சியிருந்த தன் ஏகபுத்திரியை இழந்துவிட்டு விரக்தியடைந்த பாகம் படிப்பவர் மனதை உருக்கும். பின்னிட்டு இராமானுஜய்யங்கார் தம்பதிகள் கள்வர்களைச் சந்திக்கும் பாகம் திருட்டுத் தொழிலைக் கொண்டுள்ளவர்களும் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கக்கூடாதென்பதைக் கைக்கொண்டவர்கள் என்பதைக் காட்டுகிறது. இப்பொழுது இக்கதையைப் படிப்போரனைவரும் அடுத்த இதழை எதிர்பார்த்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

"ஜனோபகாரி"

[ஜனோபகாரி ஆபீஸ். கீழ்ச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்; வருஷச் சந்தா ரூ. 3; தனிப் பிரதி விலை அணு 5.]

சரீரம் நல்லவழிகளில் பிரவிருத்திக்க முடியாதபடி நவக்ரஹ தசைகள் முதலியவற்றால் ஏற்படும் க்ரஹஜம், ஜன்மாந்திர கர்மத்தினால் ஏற்படும் கர்மஜம், வாதபித்த ச்லேஷ்மம் முதலியவற்றால் ஏற்படும் தோஷஜம் ஆகியவை மூன்று விதப் பீடைகளாக உண்டாகின்றன. இவற்றிலிருந்து மனுஷ்ய யத்னம் வரையில் தப்பித்துக் கொள்வதற்கு ஜ்யோதிஷம், மந்த்ரம், ஆயுர்வேதம் ஆகிய மூன்றும் தெரிந்திருந்தால் மிகவும் உபயோகமாக விருக்கும். ஆனால் இம்மூன்று சாஸ்திரங்களும் முக்கியமாக ஸம்ஸ்கிருத பாஷையிலிருப்பதால் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடாததாய் இருக்கிறது. ஆனதுபற்றி இவ்விஷயங்களைத் தெளிவுபடுத்தும் பத்திரிகையொன்று ஸமூகத்திற்கு எத்தகைய பலனை அளிக்கக் கூடியதென்பதைப் பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. "ஜனோபகாரி" என்ற மாதப் பத்திரிகை மேற்கூறப்பட்ட விஷயங்களில் அரிய சேவை செய்யும் பத்திரிகையாகவிருக்கிறது. இப்பத்திரிகையில் ஜாதக பலப்பிரகாசிகை என்றதொரு வியாஸமும் ஆங்கிலத்தில் தொடர்ச்சியாக வெளிவருகிறது. மேற்கூறப்பட்ட மூன்று விஷயங்களிலும் பரிச்சயமில்லாதவர்கள் கூட அவற்றைத் தெரிந்துகொள்ளத்தக்க முறையில் இப்பத்திரிகையின் வியாஸங்களிருப்பதால், அன்பர்களனைவரும் இதற்கு ஆதரவளிப்பார்களென்று நினைக்கிறோம்.

வேதாந்த தீபிகை
ஆகஸ்ட் 1936

[பிரசுரதார்கள்: ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தப் பிரசார சபா லிமிடெட். 4 பத்ரைய கார்டன் தெரு, பார்க்டௌன், சென்னை.]

இந்த ஸஞ்சிகையில், தொடர்ச்சியாக வரும் மீமாம்ஸா ஸங்க்ரஹம், ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத், திவ்ய ஸூரி சரிதம் ஆகியவை தவிர மற்றும் சில அரிய வியாஸங்கள் வெளிவந்திருக்கின்றன. "ஸ்ரீமத் ராமாயணம்—பாதுகா பட்டாபிஷேகம்" என்றதொரு வியாஸத்தை சேட்லூர் ஸ்ரீமான் துரைசாமி அய்யங்கார் உதவியிருக்கிறார். பரதன் காட்டுக்குச் சென்று ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளும்படி ராமனிடம் சரணாகதி செய்தபோது "புரா ப்ராத: பிதா..." என்று ராமன் சொல்லுகிறார். இது சம்பந்தமாக வியாஸகர்த்தா சில ரஸமான விஷயங்களை சர்ச்சை செய்திருக்கிறார். வேதாத்யயனம் செய்வது குறைவாகவிருக்கும் இக்காலத்தில், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ தாதாசாரியர் எழுதியிருக்கும் "வேதவைபவம் என்ற கட்டுரை பலருக்கும் சிந்தனையையுண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை.

சந்திரோதயம்

[மாதமிருமுறை வெளிவரும் தமிழ்ப்பத்திரிகை. சந்திரோதயம் ஆபீஸ், கீழ் ராஜவீதி, புதுக்கோட்டை தனிப்பிரதி விலை அணு 2.]

இப்புதிய பத்திரிகை வரப்பெற்றோம். தேச முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது, கலாபிவிருத்தி முதலியவற்றில் சிறந்த சேவை புரியும் இப்பத்திரிகை தமிழ் நாட்டினரின் ஆதரவைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. ஹாஸ்யம் ததும்பும் கதைகளும், கற்பனைத் திறனை நன்கு காட்டும் சிறு கதைகளும், ஹாஸ்யத் துணுக்குகளும் இன்னும் பலவும் இதில் அடங்கியிருக்கின்றன.

கலைமகள் ஆடிமாத இதழ் வரப்பெற்றோம்.

தேயிலைப் பிரசாரம் சம்பந்தமான இரண்டு குறிப்புப் புத்தகங்கள் வரப்பெற்றோம்.

டாமகோ விற்பனை இலாகா
19-A, வாணியர் தெரு, மதராஸ்.

இந்திய தாவர எண்ணைகளைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது
மிருகக் கொழுப்பற்றது.

HAMĀM

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்., டாடாபுரம் & பம்பாய்.
(T S 530)

லோத்ரா
கர்ப்பாசயத்திற்குரிய
பலவிருத்தி ஔஷதம்
ஸ்திரீகளுக்கு
ஒரு வரப்பிரஸாதம் போன்றது

வலியோடும், காலந்தவறியும், குறைவாகவும், அதிகமாகவும், மாதவிடாய் ஆகுதல், வெள்ளை, மலட்டுத்தனம், மூர்ச்சையடைதல், இடுப்புவலி, தூக்கமின்மை, அஜீர்ணம், மலச்சிக்கல், இருமல், சுவாசகாசம், தலைவலி, முதுகுவலி, முதலியவைகளைக் குணப்படுத்தும்.

கேஸரி குடீரம், எழும்பூர் :: சென்னை